# உதயன்

விலை ரூபா 8.00

www.uthayan.com

சுடர் 18 வள்ளுவர் ஆண்டு 2034 ஐப்பசி 10 திங்கட்கிழமை (27-10-2003) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:333


## மூதூரில் நேற்று நண்பகல் முதல் ஊரடங்கு! இறங்குதுறை வந்த மூவருக்கு வாள்வெட்டு!!

### லொறியை எரித்தவர்கள் மீது பொலீஸார் கண்ணீர்ப்புகைத் தாக்குதல்

கொழும்பு,ஒக்.27

மூதூர் இறங்குதுறையில் மூவர் வாள்வெட்டுக்குள்ளாகினர். இதனால் எழுந்த பதற்றத்தையடுத்து நேற்று நண்பகல் 12 மணியிலிருந்து மூதூரில் பொலீஸ் ஊரடங்கு பிறப்பிக்கப்பட்டது.

மூதூர் இறங்குதுறைக்கு நேற்று முன்தினம் திருகோணமலையிலிருந்து சென்ற ஒருவரை (வயது 32) மூதூர் அல்-ஹிலால் மகாவித்தியாலயம் அருகே வழிமறித்து கோஷ்டி ஒன்று வாளால் வெட்டியுள்ளது. மயக்கமுற்ற நிலையிலிருந்த அவர் பின்னர் கிளிவெட்டி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

மூதூரிலிருந்து திருகோணமலை செல்வதற்கென மூதூர் இறங்குதுறைக்கு நேற்றுக்காலை வந்த ஒரு தகப்பனும் அவரது மகனும் ஒரு கோஷ்டியினரால் தாக்கப்பட்டும், வாளால் வெட்டப்பட்டுமுள்ளனர். இருவரும் மூதூர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். இவர்கள் இருவ

(12ஆம் பக்கம் பார்க்க)

31ஆம் திகதி புலிகளின் வரைவு கையளிக்கப்பட்டதும்

## அடுத்த சுற்று சமாதானப் பேச்சுக்களுக்கான ஏற்பாடுகளில் ஈடுபட சொல்ஹெய்ம் வருவார்

அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையிலான அடுத்த சுற்று சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிக்கச் செய்வதற்கான ஏற்பாடுகளில் நேர்வே ஈடுபடவிருக்கிறது. இதற்காக நேர்வே சமாதான அனுசரணையாளர் எரிக் சொல்ஹெய்ம் தலைமையில் நோர்வே குழுவினர் அடுத்த மாத ஆரம்பத்தில் இலங்கை வருகிறார்கள்.

எதிர்வரும் 31 ஆம் திகதி இடைக்கால நிர்வாகம் தொடர்பான தமது வரைவை விடுதலைப் புலிகள் நோர்வே ஊடாக இலங்கை அரசிடம் கையளித்ததும் சமாதானப் பேச்சுக்களை மீண்டும் ஆரம்பிக்கச் செய்வதற்கான ஏற்பாடுகளில் நோர்வே ஈடுபடும் என்று நோர்வே தூதரக வட்டாரங்கள் தெரி

(12ஆம் பக்கம் பார்க்க)

இன விகிதாசாரப்படி மலையகத் தமிழர்கள் அடங்கலாக 100 உறுப்பினர்களுடன்

# ஆறு ஆண்டுகளுக்கு முழு அதிகாரங்களுடன்

# வடக்கு - கிழக்கிற்கு இடைக்கால நிர்வாகம்

## அதற்கிடையில் புதிய அரசமைப்பு உருவாக்கும் முயற்சிகள் புலிகளின் ஆலோசனைகள் பற்றிக் கசிந்துள்ள சில தகவல்கள்

கொழும்பு,ஒக்ரோபர்27

**எதிர்வரும் 31ஆம் திகதி அரசிடம் கையளிப்பதற்காக விடுதலைப் புலிகள் தயாரித்துள்ள ஆலோசனைகளின்படி வடக்கு - கிழக்கிற்கு ஆறு ஆண்டுகளுக்கு இடைக்கால நிர்வாக அமைப்பு ஏற்படுத்தப்படும். இதில் மலையகத் தமிழர்கள் உட்பட இன விகிதாசாரப்படி வடக்கிற்கு ஐம்பதும், கிழக்கிற்கு ஐம்பதுமாக மொத்தம் 100 பிரதிநிதிகள் அங்கம் வகிப்பர்.**

**சிறுபான்மையினரின் உரிமைகளும் சலுகைகளும் உறுதி செய்யப்படும். இடைக்கால நிர்வாகம் இயங்கும் ஆறு ஆண்டுகளுக்குள் புதிய அரசமைப்பு ஒன்றை உருவாக்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்படும். புலிகள் மிகவும் இரகசியமாக வைத்திருக்கும் ஆலோசனைகள் தொடர்பாக இப்படியான தகவல்கள் கசிந்துள்ளன என்று "சண்டே லீடர்" ஆங்கிலப்பத்திரிகை நேற்று செய்தி வெளியிட்டிருக்கிறது.**

அந்தச் செய்தியின்படி பிரதிநிதிகளில் குறைந்தபட்சம் 25 சதவீத மானவர்கள் பெண்களாக இருப்பர். எல்லா இனங்களையும், மதங்களையும், சமூக அமைப்புக்களையும் சேர்ந்தவர்கள் பிரதிநிதிகளாக நியமிக்கப்படுவர்.

நூறு உறுப்பினர்களில் 20 பேர் நிறைவேற்றுக் கவுன்சிலுக்கு நியமிக்கப்படுவர். இந்தக் கவுன்சில் ஓர் அமைச்சர்கள் சபை போன்று இயங்

(12ஆம் பக்கம் பார்க்க)

## முனை பகுதி சோதனை நிலைகளில் நேற்று முதல் பொலீஸார் கடமை

வடமராட்சி,ஒக்.27

வடமராட்சி முனைப்பகுதியில் மீனவர்களுக்கும் படையினருக்கும் இடையே நிலவும் முறுகல் நிலையைத் தணிக்கும் வகையில் கடற்கரைப் பகுதியில் உள்ள முக்கிய மூன்று காவல் நிலையங்களில் பொலீஸார் கடமையிலீடுபடுத்தப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

கடலுக்குத் தொழிலுக்குச் செல்லும் மீனவர்களுக்கு 'பாஸ்' வழங்கும் நடவடிக்கையிலேயே படையினருக்குப் பதிலாக பொலீஸார் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

கடந்த புதன்கிழமை இப்பகுதியில் இடம்பெற்ற அசம்பாவிதங்கள் தொடர்பாக பாதுகாப்பு அமைச்சு செயலாளரின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டதை அடுத்து அவர் இட்ட உத்தரவுக்கமையவே இந்த மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்று தமிழ்த்

(12ஆம் பக்கம் பார்க்க)

### மீனவக் குடும்பங்களுக்கு படையினரால் அச்சுறுத்தல்

வடமராட்சி,ஒக்.27

வடமராட்சியில் படையினரால் மீனவர்கள் தாக்கப்பட்டதைக் கண்டித்து நேற்றுமுன்தினம் இடம்பெற்ற பேரணியில் கலந்துகொண்ட முனைப்பகுதியைச் சேர்ந்த சில மீனவக் குடும்பங்களைப் படையினர் அச்சுறுத்தியதாக பருத்தித்துறைப் பொலீஸ் நிலையத்தில் முறையிடப்பட்டிருக்கிறது.

இது தொடர்பாக விசாரணைகளை நடத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று பருத்தித்துறைப் பொலீஸார் தெரிவித்துள்ளனர். (ம-9)

# சமாதானச் சூழலை முறியடிக்கப் பேரினவாதிகள் உறுதி ஆனால் அரசோ ஒன்றும் செய்யாமல் வாளாவிருக்கிறது

## துணை அரசியல் பொறுப்பாளர் தங்கன் கவலை தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,ஒக்.27

"குழப்பத்தை ஏற்படுத்தி சமாதானச் சூழலை முறியடிக்கும் முழு முயற்சியில் சிங்களப் பேரினவாத சக்திகள் ஒன்றிணைந்து ஈடுபட்டிருக்கின்றன. "ஆனால் மறுபுறத்தில் அதனை எதிர்கொண்டு திருப்திகரமான பாதையில் சமாதான முயற்சிகளை முன்நகர்த்துவதற்குத் தேவையான ஆக்கபூர்வமான நடவடிக்கைகளையோ திட்டங்களையோ பிரதமர் ரணிலின் அரசு மேற்கொள்வதாக இல்லை."

- இவ்வாறு தெரிவித்தார் விடுதலைப் புலிகளின் துணை அரசியற் பொறுப்பாளர் சோ.தங்கன் (சுதா மாஸ்டர்).

யாழ்.பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நேற்றுக்காலை இடம்பெற்ற யாழ்.மாவட்ட தேசியஎழுச்சிப் பேரவையின் மாவட்ட, கோட்ட, பிரதேச, ஊரக பேராளர்களுக்கான சங்கம விழாவில் அவர் உரையாற்றினார்.

நேற்றுக்காலை 9.30 மணிக்கு ஆரம்பமான இந்த பேராளர் சங்கம நிகழ்வில் தேசிய எழுச்சிப் பேரவையின் மாவட்ட, கோட்ட, ஊரக கிளைகளின் உறுப்பினர்கள் மற்றும் அதிகாரிகள் என நூற்றுக்கணக்கானோர் கலந்துகொண்டனர்.




யாழ். மாவட்ட பேரவையின் செயலாளர் சூ.சிறில் நிகழ்வுக்கு தலைமை தாங்கினார். தமிழீழ தேசியக் கொடியை யாழ். மாவட்ட அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் செம்மணன் ஏற்றிவைத்தார்.

பொதுச் சுடரினை யாழ் பல்கலைக் கழக துணைவேந்தர் பேராசிரியர் சு.மோகனதாஸ், கியூடெக் நிறுவன இயக்குநர் சீ.ஜீ.ஜெயக்குமார் அடிகளார், மாவீரர் லெப்.கேணல் ஆண்டாளின் தந்தையாரான பொ.முத்துக் குமாரு, சிவஸ்ரீ பிரணவ கார்த்திக் குருக்கள், மனித நேய அமைப்புக்களின் ஒன்றியத் தலைவர் எஸ். பரமநாதன், யாழ் மாவட்ட மகளிர் அரசியல துறைப் பொறுப்பாளர் கலைவிழி ஆகியோர் ஏற்றி வைத்தனர்.

அப்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார். அங்கு அவர் மேலும் கூறியதாவது:-

எமது அமைப்பின் அரசியல் வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்படும் இன்றைய நிலையில் யாழ். குடாநாட்டைப் பொறுத்தவரை மிகவும் இக்கட்டான சூழலில் அப்பணி மேற்கொள்ளப்படுகின்றது. இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் தேசிய எழுச்சிப் பேரவைகள் மூலம் அப்பணியில் மக்கள் இணைகின்றனர். சமாதான நடவடிக்கைகள் முன்னெடுத்துச் செல்லப்பட வேண்டிய காலகட்டம் இது. ஆனால், அதற்கான ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எதனை

(12ஆம் பக்கம் பார்க்க)




தேசிய எழுச்சிப் பேரவையின் யாழ். மாவட்ட இரண்டாவது சங்கம நிகழ்வு நேற்று யாழ். பல்கலைக்கழ கைலாசபதி கலையரங்கில் இடம்பெற்றது. விடுதலைப் புலிகளின் அரசியல் துறை யாழ். மாவட்ட துணைப் பொறுப்பாளர் செம்மணன் தேசியக் கொடியை ஏற்றிவைத்தார். நிகழ்வில் கலந்துகொண்ட பேராளர்கள் அகவணக்கம் செலுத்துவதையும் மேடையில் அமர்ந்திருப்பதையும் படங்களில் காணலாம். *(படங்கள்: அலுவலகப் படப்பிடிப்பாளர்)*

# நிமலராஜனின் கொலைச் சம்பவம் குறித்து மேஜர் ஜெனரல் பொன்சேகா கூறியது என்ன?

## பலாலித் தலைமையக மறுப்பும் உதயனின் விளக்கமும்

யாழ்ப்பாணம்,ஒக்.27

"தெற்கில் ஒளிந்துள்ள சக்திகளுக்கு நிமலராஜன் கொலையுடன் தொடர்பு - யாழ். மாவட்ட இராணுவத் தளபதி தெரிவிப்பு" என்ற தலைப்பில் கடந்த 22 ஆம் திகதி 'உதயன்' பத்திரிகையின் முதலாம் பக்கத்தில் வெளியான செய்திக்கு பலாலி இராணுவத் தலைமையகம் மறுப்புத் தகவல் ஒன்றையும் அனுப்பி வைத்திருக்கின்றது.

"நிமலராஜனின் இறப்பு ஓர் அரசியல் பழிவாங்கல் கொலையென மேஜர் ஜெனரல் பொன்சேகா கூறினார் என்று வெளியான கட்டுரைக்கு மறுப்பு" என்ற தலைப்பில் அது அனுப்பப்பட்டுள்ளது. அதில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

*1. "மேஜர் ஜெனரல் சரத் பொன்சேகா கூறியதாகத் தெரிவித்து தங்களின் 22 ஒக்ரோபர் 2003 திகதி பத்திரிகையில் வெளியான செய்தி முற்றிலும் தவறானது; அவர் உண்மையில் கூறியதை வேண்டுமென்றே திரிபுபடுத்தி வெளியிடப்பட்டுள்ளது.*

*2. "நிமலராஜனின் மரணம் குறித்து இராணுவத்துக்கு எதுவும் தெரியாது. ஆனால், அச்சு ஊடகங்கள் மூலமாக யாழ். பத்திரிகையாளர்கள் தெரிவித்த தகவல்களின்படி நிமலராஜனின் மரணம் ஓர் அரசியல் படுகொலை என்பதை நாம் அறிந்து கொண்டோம்"* - என்றே *மேஜர் ஜெனரல் சரத் பொன்சேகா கூறினார் என அச்செய்தி திருத்தப்படவேண்டும்.*

*3. எனவே, தங்களின் செய்திப் பத்திரிகை தொடர்ந்து தவறான, பிழையான, தவறாக வழி நடத்துகின்ற, தவறாக அர்த்தம் கற்பிக்கின்ற அறிக்கைகளை வெளியிடுமானால் இனிமேல் படையினர் சம்பந்தப்படுகின்ற எந்தவொரு மாநாட்டிலும் தங்களது செய்தியாளர்கள் பங்குபற்றுவதை வரவேற்க முடியாமல் தவிர்க்கும் நிலைக்கு எமது இந்தத் தலைமையகம் தள்ளப்படும்.*

- இவ்வாறு பலாலி தலைமையகத்திலிருந்து மேஜர் மெத்தானந்தா அனுப்பியுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**ஆசிரியர் குறிப்பு**

1. உதயனில் வெளியான செய்தி ஒன்றுக்கு வேறு பொருத்தமற்ற இடத்தில் மறுப்புத் தெரிவிப்பதற்கு முன்னர் 'உதயன்' மூலமே மறுப்புத் தெரிவிக்கலாம் என்ற தனது பழைய நிலைப்பாட்டுக்கு பலாலித் தலைமையகம் மீண்டும் வந்திருப்பது வரவேற்கத்தக்கது.

2. கடந்த 21 ஆம் திகதி வட இலங்கைப் பத்திரிகையாளர் சங்கப் பிரதிநிதிகளை கண்காணிப்புக் குழுப் பிரதிநிதி முன்னிலையில் யாழ். கண்காணிப்புக் குழு அலுவலகத்தில் சந்தித்த போது மேஜர் ஜெனரல் சரத் பொன்சேகா தெரிவித்த கருத்துக்களே அது பற்றிய விவரங்களுடன் அடுத்த நாள் உதயனில் பிரசுரமாகியிருந்தன. அந்தச் சந்திப்பில் ஜெனரல் சரத் பொன்சேகா ஆங்கிலத்தில் கூறியவையும் அவற்றை மொழி பெயர்ப்பாளர் தமிழில்மொழி பெயர்த்துக் கூறியவையும் குறிப்பிட்ட சந்திப்பில் கலந்து கொண்ட செய்தியாளர்களின் ஒலிப்பதிவு நாடாக்களில் வார்த்தைக்கு வார்த்தை அப்படியே உள்ளன. பலாலித் தலைமையகம் கோரினால் அதைப் பெற்றுத் தர முடியும். மேலும், அதனடிப்படையில் உதயனில் வெளியான செய்தி வரிக்குவரி சரியானது என்பதை அறுதியிட்டுக் கூற விரும்புகிறோம்.

மேலும் கண்காணிப்புக் குழுவின் யாழ். அலுவலகப் பிரதிநிதியும் அங்கு பரிமாறப்பட்ட உண்மையான கருத்துக்கள் எவை என்பதற்கு நல்ல சாட்சியமாக அமைவார் என நம்புகிறோம்.

3. பலாலித் தலைமையக மறுப்புக் கடிதத்தின் தலைப்பில் *"நிமலராஜன் இறப்பு ஓர் அரசியல் பழிவாங்கல் கொலை (Political Revenge Killing)"* என உதயனில் குறிப்பிடப்பட்டிருந்ததாகப் பிரஸ்தாபிக்கப்பட்டுள்ளது. ஆனால், உதயனின் சம்பந்தப்பட்ட செய்தியிலோ அல்லது மேஜர் ஜெனரல் சரத் பொன்சேகா அன்றைய தினம் தெரிவித்த கருத்துக்களிலோ அது, அரசியல் பழிவாங்கல் கொலை' எனக் குறிப்பிடப்படவில்லை. 'பழிவாங்கல்' என்ற சொல் பயன்படுத்தப்படத் தேவையில்லை. 'அரசியல கொலை' என்று மட்டுமே மேஜர் ஜெனரல் சரத் பொன்சேகா கூறியிருந்தார். உதயன் செய்தியிலும் அது அவ்வாறே இடம்பெற்றிருந்தது.

'அரசியல் பழிவாங்கல் கொலை' என்ற பதம் ஏன், எவ்வாறு பலாலி தலைமையக மறுப்புக்குள் புகுந்தது என்பது விளங்கவில்லை.

4. *"நிமலராஜன் படுகொலைக்கும் படையினருக்கும் எந்தத் தொடர்புமில்லை. அரசியல் கருத்து வேறுபாடுகளே இக்கொலைக்கு காரணம். எமக்குக் கிடைத்த அறிக்கைகள் தகவல்களை அடிப்படையாகக் கொண்டு இதனைக் கூறுகிறேன்"* - என்று ஜெனரல் பொன்சேகா கூறினார் என உதயன் செய்தியில் தெரிவிக்கப்பட்டிருந்தது. அப்படித்தான் ஜெனரல் பொன்சேகா அங்கு கூறினார் என்பதை மீண்டும் உறுதிபடக் கூறவிரும்புகின்றோம். **'Based on the evidence and reports we received'** என்ற ஆங்கிலப் பதத்தை ஜெனரல் பொன்சேகா பயன்படுத்தினார். அதையே "எமக்கு கிடைத்த அறிக்கைகள், தகவல்களை அடிப்படையாகக் கொண்டு இதனைக் கூறுகின்றேன்" என ஜெனரல் பொன்சேகா குறிப்பிட்டார் என்று அச்செய்தியில் தெரிவித்திருந்தோம்.

இதற்கு மேலே *'அச்சு ஊடகங்கள் மூலமாக யாழ். பத்திரிகையாளர்கள் தெரிவித்த தகவல்களையே'* தான் கூறுவதாக ஜெனரல் சரத் பொன்சேகா அங்கு குறிப்பிடவேயில்லை.

எனவே, உதயன் பிரசுரித்த செய்தியில் தவறு என்ன? திரிவுபடுத்தல் என்ன? தவறாக அர்த்தம் கற்பிக்கப்பட்ட விடயம் என்ன? தவறாக வழிநடத்துகின்ற விவகாரம் என்ன? - பலாலித் தலைமையகம் விளக்கம் தருவது உதயனைத் திருத்தவோ அல்லது உதயன் தொடர்பாகப் பலாலி அதிகாரிகள் கொண்டுள்ள அபிப்பிராயத்தைத் திருத்தவோ உதவும்.

5. அண்மைக்காலத்தில் படையினர் சம்பந்தப்படும் மாநாடுகளுக்கு உதயன் பிரதிநிதிகளை ஒழுங்காக அழைப்பது போலவும் இனிமேல் புதிதாக அதைத் தவிர்க்கப் போகின்ற பாணியிலும் புதுக்கதை விடுகிறது பலாலித் தலைமையகம். பலாலித் தலைமையக உயர் அதிகாரிகள் இத்தகைய நடவடிக்கைகள் எதையும் அண்மைக்காலத்தில் மேற்கொண்டார்களா என்பதை ஆராய்ந்து பார்ப்பது நல்லது.

கடந்த 21 ஆம் திகதி கூட வட இலங்கைப் பத்திரிகையாளர் சங்கத்தைத்தான் மேஜர் ஜெனரல் சரத் பொன்சேகா சந்தித்தார். உதயன் பிரதிநிதிகளையோ அல்லது அதன் ஆசிரியபீட அலுவலர்களையோ அல்ல.

அதுமட்டுமல்ல, "இராணுவத்துக்கு அபகீர்த்தியை ஏற்படுத்தும் விதத்தில் செய்திகளைத் திரித்து வெளியிடுகின்றது உதயன்" என்ற குற்றச்சாட்டைக்கூட உதயன் ஆசிரியபீடத்துக்கோ அதன் பிரதிநிதிகளுக்கோ நேரடியாகத் தெரிவிக்காமல் வட இலங்கைப் பத்திரிகையாளர் சங்கத்தின் பிரதிநிதிகளிடம்தான் அவர் கூறியுள்ளார்.

இதுவரை உதயனை உரிய முறையில் - உரிய கூட்டங்களுக்கும் மாநாடுகளுக்கும் - அழைக்காத பலாலித் தலைமையகம், இனிமேல் அப்படி அழைக்க முடியாத நிலைக்கு புதிதாகத் தள்ளப்படப்போவது போல், கூறுவது விநோதமானது! (ஆ-ர்)

# மந்துவில் செய்திக்கும் படைத்தரப்பில் மறுப்பு

"தென்மராட்சி மந்துவில் கிழக்கில் படைத்தரப்பின் வாக்குறுதியை நம்பி மீளக் குடியமரச் சென்றோர் ஏமாற்றம்" என்ற தலைப்பில் கடந்த 21 ஆம் திகதி உதயன் பத்திரிகையில் 2 ஆம் பக்கத்தில் பிரசுரமான செய்திக்கு பலாலி இராணுவத் தலைமையகம் மறுப்புச் செய்தி அனுப்பியிருக்கிறது.

அதில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

*1. மந்துவில் பிரதேச மக்களை மீளக்குடியமர்வதற்காக அப்பிரதேசத்துக்கு வருமாறு இராணுவம் எந்த அறிக்கையும் வெளியிடவில்லை என்பது உங்கள் கவனத்துக்கு கொண்டு வரப்படுகிறது.*

*2 உறுதிப்படுத்தப்படாத, தவறான தகவல்களைப் பிரசுரிப்பது சமாதான சூழ்நிலைக்கு மாறுபாடான விளைவுகளையே தோற்றுவிக்கும் என்பதை குறிப்பிட வேண்டிய நிலைக்கு நாம் தள்ளப்பட்டிருப்பது மனவருத்தத்துக்குரியது.*

- என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

**ஆசிரியர் குறிப்பு:-**

1. சமாதான சூழ்நிலைக்கு மாறுபாடான விளைவுகளைத் தோற்றுவிக்கக் கூடாது என்பதில் இராணுவம் சிரத்தையாக இருப்பதாக வெளிப்படுத்துவது வரவேற்கத்தக்கது.

2. ஆனால், சம்பந்தப்பட்ட செய்தியில் தவறான தகவல் எதனையும் உதயன் தெரிவிக்கவில்லை என்பதைத் திட்டவட்டமாகத் தெளிவுபடுத்த விரும்புகிறோம்.

சம்பந்தப்பட்ட செய்தியில் *"மீளக் குடியமர அப்பிரதேசத்துக்கு வருமாறு இராணுவம் அறிக்கை வெளியிட்டுள்ளது"* என்று எங்குமே கூறப்படவில்லை.

*"கடந்த 23 ஆம் திகதி இப்பகுதி மக்கள் வரணி இராணுவ அலுவலகத்துக்கு அழைக்கப்பட்டனர். அங்கு நடந்த கலந்துரையாடலில் பலாலி படைத்தலைமை அலுவலக உயர் அதிகாரிகளினால் ஒக்ரோபர் 15 ஆம் திகதி உரிமையாளர்களிடம் வீடுகள் கையளிக்கப்படும் என வாக்குறுதி வழங்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து கடந்த 14 ஆம் திகதி பகல் அப்பகுதி வீடுகளில் இருந்து படையினர் வெளியேறினர். ஆனால், அன்றிரவே மீண்டும் அங்கு மீளப் படையினர் முகாமிட்டனர். இதனை அறியாது- படையினர் வெளியேறிவிட்டனர் என நம்பிய - குடியிருப்பாளர்கள் கடந்த 15 ஆம் திகதி காலை தமது உடைமைகளுடன் தமது சொந்த இடங்களில் மீளக் குடியமரச் சென்றனர். ஆனால், அங்கிருந்து வெளியேற வேண்டாம் எனத் தலைமையகத்திலிருந்து தமக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாகவும், அதனால் தாம் தங்கியுள்ள வீடுகளை ஒப்படைக்க முடியாது என்றும் படையினர் தெரிவித்தனர் என்றும் கூறப்படுகிறது. இதனால், மீளக் குடியமரச் சென்ற பொதுமக்கள் ஏமாற்றத்துடன் திரும்பினர் எனத் தெரிவிக்கப்பட்டது."*

- இப்படித்தான் சம்பந்தப்பட்ட 'உதயன்' செய்தியில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

கடந்த 23 ஆம் திகதி வரணி இராணுவ அலுவலகத்தில் நடைபெற்ற கூட்டத்தில்தான் ஒக்ரோபர் 15 ஆம் திகதி உரிமையாளர்களிடம் வீடுகள் கையளிக்கப்படும் என படை உயர் அதிகாரிகளால் வாக்குறுதி வழங்கப்பட்டது என 'உதயன்' குறிப்பிட்டிருந்தது. இராணுவம் அவ்வாறு அறிக்கை ஏதும் வெளியிட்டதாக 'உதயன்' பிரஸ்தாபிக்கவேயில்லை.

அவ்வாறு அந்தக் கூட்டத்தில் வாக்குறுதி வழங்கப்பட்ட பின்னர் தாங்கள் ஏமாற்றப்பட்டோம் என்பதை - உதயன் செய்தி பிரசுரமாவதற்கு முன்னரே - சம்பந்தப்பட்ட பொதுமக்கள் எழுத்து மூலம் தனித்தனியாக மனித உரிமைகள் ஆணைக்குழு, மனித நேய அமைப்புக்களின் ஒன்றியம் மற்றும் இராணுவத்தின் பலாலி கட்டளைத் தளபதி ஆகியோருக்கும் முறைப்பாடு செய்திருந்தனர். அவற்றின் பிரதிகள் உட்பட இது விடயத்தில் உதயனின் செய்தியை நிரூபிப்பதற்கு தேவையான ஆதாரங்கள் உதயன் வசம் உள்ளன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

(ஆ-ர்)

# ஜனாதிபதியுடனான - ஜே.வி.பி. தலைவர்களின் சந்திப்பு விவரங்கள் இன்று வெளியாகும்

கொழும்பு,ஒக்.27

ஐக்கிய தேசிய முன்னணி அரசைக் கவிழ்த்துவிட்டு, மாற்று அரசொன்றை அமைக்கும் திட்டங்கள் குறித்து சுதந்திரக் கட்சியும் ஜே.வி.பியும் கடந்த சனிக்கிழமை 4 மணி நேரம் கூடி ஆராய்ந்த விடயங்கள் பற்றிய விவரங்கள், இன்று வெளியாகும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

சுதந்திரக் கட்சியுடன் முன்னணி அமைக்கும் பேச்சுக்கள் தோல்வியடைந்தாலும் ஐ.தே.முன்னணி அரசைக் கவிழ்க்கும் முயற்சிக்குத் தொடர்ந்து ஆதரவளிக்கப்படும் என்று ஜே.வி.பி. தலைவர்கள் கூறி வருவது தெரிந்ததே.

இரு கட்சிகளுக்குமிடையே முன்னணி அமைப்பது பற்றிய பேச்சுக்கள் முறிவடைந்திருந்தாலும் ஜனாதிபதி திடீரென ஜே.வி.பி. தலைவர்களை அழைத்துப் பேச்சு நடத்தியிருப்பது முக்கியத்துவம் வாய்ந்ததாக அரசியல் அவதானிகளால் கருதப்படுகிறது.

இப்பேச்சுக்களில் தீர்மானங்கள் எதுவும் மேற்கொள்ளப்பட்டனவா என்பது பற்றி எதுவும் தெரியவில்லை.

ஆயினும், இச்சந்திப்பு தொடர்பாக முக்கிய அறிவிப்பொன்றை இன்று திங்கட்கிழமை வெளியிடவுள்ளதாக ஜனாதிபதியின் ஊடகப் பேச்சாளர் ஹரீம் பீரிஸ் நேற்று தெரிவித்தார்.

தீபாவளித் தினத்தன்று ஸ்ரீல.சு. கட்சி ஒழுங்கு செய்திருந்த 'மக்கள் சேனை' அரச எதிர்ப்பு பேரணியில் ஜே.வி.பியினர் கலந்துகொள்ளவில்லை. இருந்தும் ஜே.வி.பியின் பிரசார செயலாளர் விமல் வீரவன்ஸ எம்.பி. பேரணியின் முடிவில் கொழும்பு மாநகர சபைத்திடலில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரை நிகழ்த்தினார் என்பது குறிப்பிடத்தக்கது.

ஸ்ரீல.சு.கட்சியின் செயலாளர் மைத்திரிபால சிறிசேன எம்.பி. மீண்டும் பேச்சு நடத்த வருமாறு ஜே.வி.பியின் தலைவர்களுக்கு கடந்த வாரம் உத்தியோகபூர்வமாக அழைப்பு விடுத்திருந்தார்.

இந்த அழைப்பை ஏற்றே கடந்த சனிக்கிழமை ஜனாதிபதியை அவர்கள் சந்தித்து பேச்சு நடத்தினர் எனத் தெரிகிறது.

(ம)

# அமெரிக்கப் பாதுகாப்புச் செயலரை குறிவைத்து பக்தாத் ஹோட்டல் மீது ஏவுகணைத் தாக்குதல்!

பக்தாத்,ஒக்.27

ஈராக் சென்றிக்கும் அமெரிக்கப் பிரதிப் பாதுகாப்புச் செயலர் போல் வுல்வோவைக் குறிவைத்து ஏவுகணைத் தாக்குதல் நடத்தப்பட்டிருக்கிறது.

பக்தாத்தில் அவர் தங்கியிருந்த அல் ரஷீத் ஹோட்டல் மீது நேற்று எட்டு ஏவுகணைகள் ஏவப்பட்டன. இதில் அமெரிக்கர் ஒருவர் கொல்லப்பட்டார்; சிலர் காயமடைந்தனர். போல் வுல்வோ காயமெதுவுமின்றி அதிர்ஷ்டவசமாக உயிர் தப்பினார்.

இஸ்லாமியப் பண்டிகைக்காக ஈராக்கில் இரவு நேர ஊரடங்கு தளர்த்தப்பட்டிருந்தவேளை, சதாம் ஹுசைனின் ஆதரவுப்படை இத்தாக்குதலை நடத்தியது.

தீவிரவாதிகள் பக்தாத்திலுள்ள ஹோட்டல் ஒன்றைத் தாக்கவுள்ளனர் என்று பென்டகனும், அமெரிக்க இராஜாங்கத் திணைக்களமும் கடந்த வாரம் எச்சரித்திருந்தன.

இந்நிலையில், மேற்படி தாக்குதல் நடந்திருக்கிறது.

இத்தாக்குதல் குறித்து போல் வுல்வோ தெரிவிக்கையில், தீவிரவாத நடவடிக்கைகள் எவையும் எமது பயணத்தைத் தடுத்துவிடாது - என்றார்.

ஏவுகணைகள் ஹோட்டல் முற்றத்தில் வீழ்ந்து வெடித்ததும், அமெரிக்கர்களும், அயல் நாட்டு ஒப்பந்தகாரர்களும், செய்தியாளர்களும் ஹோட்டலின் முன்மண்டபத்தில் கூடினர். ஆனால், அவர்கள் அங்கிருந்து படையினரால் உடனடியாக வேறு இடத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

ஏவுகணைத் தாக்குதலில் ஹோட்டலின் ஒருபகுதி கடும் சேதமடைந்தது. தாக்குதலை நடத்தியோர் அங்கிருந்து வான் ஒன்றில் தப்பிச்சென்றனர்.

தாக்குதல் நடத்தியோர் கைவிட்டுச்சென்ற ஏவுகணைகளும், அதன் செலுத்திகளும் ஹோட்டலுக்கு அருகிலுள்ள பூங்கா ஒன்றிலிருந்து கண்டெடுக்கப்பட்டன.

இந்த ஹோட்டலில் படையினரும், அமெரிக்க ஒப்பந்தகாரர்களும் தங்கியிருந்தனர். போல்வுல்வோ கடந்த வெள்ளிக்கிழமை அங்கு வந்திருந்தார். அன்று முதல் அவர் ஹோட்டலின் 12ஆவது மாடியில் தங்கியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.



ஈராக்கில் ஏவுகணைத் தாக்குதலுக்குள்ளான ஹோட்டல்.



முதன் முறையாக ஒருவரையொருவர் பார்த்துக்கொள்ளும் எகிப்திய இரட்டையர்கள்.

## பிரிக்கப்பட்ட எகிப்திய இரட்டையர் ஒருவரை ஒருவர் முகம் பார்த்தனர்!

உச்சந்தலை ஒட்டிப்பிறந்து சிகிச்சை மூலம் வெற்றிகரமாகப் பிரிக்கப்பட்ட எகிப்திய இரட்டையர், நேற்றுமுன்தினம் ஒருவரை ஒருவர் முகம் பார்த்தனர்.

சிறுவர்களுக்கான தள்ளுவண்டிகளில்இருவரும் தனித்தனியாக நேருக்கு நேர் முகத்தைப் பார்க்கும் வகையில் அமர்த்தப்பட்டிருந்தனர்.

இருவில் ஒருவரான மஹ்மூத் முழு உற்சாகத்துடன் சிரித்து மகிழ்கிறார். அஹமத் அவ்வாறில்லையெனினும், ஆள்களை இனம் காண்கிறார்.

பெற்றோர், சகோதரர், உறவினர்கள் ஆகியோர் சிறுவர்கள் இருவருடன் அங்கு காணப்பட்டனர். அன்றைய தினம் அவைவர் முகமும் பூரித்திருந்தன என்று டாக்டர்கள் தெரிவித்தனர்.

மோசமான நிலையில் இருந்து மீண்டுள்ள சிறுவர்கள் இருவரும் தற்போது தீவிர சிகிச்சைப் பிரிவுக்கு மாற்றப்பட்டிருக்கின்றனர்.

தலைகள் பிரிக்கப்பட்டபோது மூளைகளுக்கு பாதிப்பு ஏற்பட்டதா? என்பது குறித்து எதிர்வரும் வாரங்களிலேயே எதனையும் கூறமுடியும் என்று டாக்டர்கள் தெரிவித்திருக்கின்றனர்.

## கலிபோர்னியாவில் காட்டுத் தீ; இருநூறு வீடுகள் எரிந்து நாசம்!

கலிபோர்னியா,ஒக்.27

கலிபோர்னியா காட்டுப் பகுதி எல்லைக் கிராமங்களில் கட்டுக்கடங்காத தீ வேகமாகப் பரவுகிறது. இதுவரை இருநூறு வீடுகள் எரிந்து சாம்பராகியுள்ளன; நூற்றுக்கணக்கானோர் வீடுகளைக் கைவிட்டு பாதுகாப்பான இடங்களை நோக்கி இடம்பெயர்ந்துள்ளனர்.

ரன்சோ குக்கமொங்கா என்ற மலையடிவார வீட்டுத் திட்டத்தில் தீ பரவியிருக்கிறது. அங்கிருந்து வெளியேறும் கரும்புகை வீதிகளை மறைத்து வருகிறது.

தீயை அணைக்க 2 ஆயிரத்து 500 தீயணைப்புப் படையினர் போராடி வருகின்றனர். எனினும், அது கட்டுக் கடங்காமல் வேகமாகப் பரவுகிறது.

அப்பகுதியில் வீசும்கடும் காற்றே தீ வேகமாகப் பரவக் காரணம என்று கூறப்படுகிறது. தீயினால் ஏற்பட்டுள்ள சேதவிவரங்களை உடனடியாகக் கூறமுடியாதென அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

அங்குள்ள பல்கலைக்கழகம் ஒன்றிலும் தீ பரவியது. வாகனங்கள் நிறுத்தும் கட்டடத்தொகுதி முற்றாக எரிந்துவிட்டது. அங்கு மேலும் தீ பரவுவதைத் தடுக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. பல்கலைக் கழகத்திற்கு நூற்றுக்கணக்கான தீயணைப்புப் படையினர் விரைந்துள்ளனர்.

தீ பரவிவரும் பகுதிக்கு அண்மையில் உள்ள 'ஹவன் வியு' தோட்டப் பகுதியில் அமைந்துள்ள ஒரு மில்லியன் வீடுகள் அச்சுறுத்தலுக்கு உள்ளாகியுள்ளன.

இதுவரை 13 ஆயிரத்து 750 ஏக்கர் பகுதியை தீ எரித்துவிட்டது. இதனால், அப்பகுதியில் உள்ள மின் இணைப்புக்கள் குறித்து எச்சரிக்கையுடன் இருக்குமாறு அரசு அறிவித்திருக்கிறது.



கலிபோர்னியாவில் கட்டுக்கடங்காது பரவிவரும் காட்டுத் தீயின் காட்சிகள்.

## காஸாவின் உயர்ந்த கட்டடங்களை இஸ்ரேலியப்படை தகர்த்தது!

காஸா,ஒக்.27

காஸா பள்ளத்தாக்கிலுள்ள உயரமான கட்டடங்கள் அனைத்தையும் இஸ்ரேலியப்படையினர் நேற்று இடித்துத் தரைமட்டமாக்கினர்.

உயரமான கட்டடங்களில் இருந்து தமது நடவடிக்கைகள் அவதானிக்கப்படுகின்றன என்று கூறியே அவற்றை இஸ்ரேலியப்படையினர் தரைமட்டமாக்கினர்.

இஸ்ரேலியரின் இந்த அட்டுழியத்தால் இரண்டாயிரத்துக்கும் அதிகமான பலஸ்தீனர்கள் அகதிகளாகினர்.

பலஸ்தீன நிர்வாகம் படையினரின் இந்த நடவடிக்கையைக் கடுமையாகச் சாடியுள்ளது. இத்தகைய நடவடிக்கைகளால் இஸ்ரேலியப்படை தன்னைத் தானே பயங்கரவாதியாக இனம்காட்டியுள்ளது என்று அது கூறியிருக்கிறது.

அதேவேளை, அங்கிருந்து பொலிஸ் நிலையம் ஒன்றும் படையினரால் தரைமட்டமாக்கப்பட்டது. அங்கிருந்த பொலஸாரை வெளியேறும்படி கூறிவிட்டு அதனை இஸ்ரேலியப்படை தகர்த்தது.

மக்களின் நலன் கருதியே பொலிஸ் நிலையத்தைத் தகர்த்ததாக இஸ்ரேலியப் படையினர் கூறியிருப்பதற்கு, பலஸ்தீனம் கடும் கண்டனம் தெரிவித்துள்ளது.

இரண்டு தினங்களுக்கு முன்னர், அங்கிருந்த யூதக்குடியேற்றத்துக்குள் பிரவேசித்த பலஸ்தீனர்கள் மூன்று இஸ்ரேலியப்படையினரை சுட்டுக் கொன்றனர்.

இதற்கு பதிலடி வழங்கும் விதமாகவே மேற்படி கட்டடங்கள் தரைமட்டமாக்கப்பட்டன என்று கூறப்படுகிறது.

இஸ்ரேலும், பலஸ்தீனமும் மாறி மாறி வன்முறைகளில் ஈடுபட்டுவருவதை ஐ.நா. கண்டித்திருக்கிறது.

## அல்கெய்டா முக்கிய தலைவர் கைது!

இஸ்லாமாபாத்,ஒக்.27

அல்கெய்டா தீவிரவாத அமைப்பின் முக்கிய தலைவர் ஒருவரை பாகிஸ்தான் உளவுத் துறை அதிகாரிகள் கைதுசெய்துள்ளதாக பொலஸார் நேற்றுத் தெரிவித்தனர். பாகிஸ்தானில் உள்ள ஃபைசலாபாத் நகரில் ஒரு வீட்டில் அவர் பிடிபட்டுள்ளார். அவரது அடையாளம் குறித்து எதுவும் வெளியிடப்படவில்லை. ஆனால், அவர் அரபு நாட்டிலிருந்து வந்தவர் என்பது மட்டும் தெரியவந்துள்ளது.

கடந்த திங்கட்கிழமை யேமன் நாட்டைச் சேர்ந்த இருவரைப் பொலீஸார் கைதுசெய்தனர். அவர்கள் கொடுத்த தகவலின் பேரில் ஃபைசலாபாத் நகரின் ஒரு வீட்டில் அல்கெய்டாவின் முக்கியப் புள்ளி சிக்கினார். முன்தாக அந்த வீட்டில் 6 முக்கிய தீவிரவாதிகள் இருப்பதாக பொலஸுக்குத் தகவல் கிடைத்தது. ஆனால், ஒரு தீவிரவாதி மட்டுமே அந்த வீட்டிலிருந்து கைதுசெய்யப்பட்டார்.

## ஜோர்தானில் புதிய அரசு!

அம்மான்,ஒக்.27

ஜோர்தானில் நேற்று புதிய அரசு பொறுப்பேற்றது. பிரதமர் அலி அபு அல் ராஹுப் தனது பதவியை இரு தினங்களுக்கு முன் இராஜினாமாச் செய்திருந்தார். இதனையடுத்தே புதிய பிரதமர் தலைமையில் புதிய அரசு பொறுப்பேற்றிருக்கிறது.

புதிய பிரதமராக நியமிக்கப்பட்டிருக்கும் பெய்சால் அல் - பாயிஸ் அமைச்சரவையிலும் மாற்றங்களைச் செய்திருக்கிறார். அமைச்சரவைக்கு மூன்று பெண்கள் மேலும் நியமிக்கப்பட்டிருக்கின்றனர். சீர்திருத்தவாதிகளும் அமைச்சர்களாக நியமனம் பெற்றுள்ளனர்.

புதிய பிரதமரே பாதுகாப்பு அமைச்சராகவும் இருப்பார். வெளியுறவு அமைச்சர் பதவி மார்வன் மௌஷீர் என்பவருக்கு வழங்கப்பட்டுள்ளது.

புதிய அரசு திறந்த சந்தைப் பொருளாதாரத்தையும், அமெரிக்க சார்பு கொள்கைகளையும் பின்பற்றும். புதிய அமைச்சரவையில் தகவல் அமைச்சு நீக்கப்பட்டிருக்கிறது. ஆனால், அரச பேச்சாளராக கபினற் அந்தஸ்தில்லாத பெண் ஒருவர் அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ளார்.

கடந்த மூன்று வருடங்களாக பிரதமராகப் பதவி வகித்த அல் - ராஹீப் ஊழல் குற்றச்சாட்டுக்களின் பேரிலேயே இராஜினாமாச் செய்தார்.

இவருக்கும், ஈராக்கில் பதவி கவிழ்க்கப்பட்ட சதாம் ஹுசைனுக்கும் நெருங்கிய தொடர்புகள் உண்டு என்று கூறப்படுகிறது.

### சீனாவில் நிலநடுக்கம்!

பீஜிங்,ஒக்.27

சீனாவில் நேற்று இரண்டு நிலநடுக்கங்கள் ஏற்பட்டன. இதில் எட்டுப்பேர் உயிரிழந்தனர்; முப்பது பேர் காயமடைந்தனர்.

நேற்று காலை 8.41 மணிக்கு முதலாவது நிலநடுக்கம் 6.1 ரிக்டர் அளவில் ஏற்பட்டது. இரண்டாவது நிலநடுக்கம் காலை 8.48 மணிக்கு 5.8 ரிக்டர் அளவில் ஏற்பட்டது.

தலைநகர் பீஜிங்கில் இருந்து 1200 கிலோமீற்றர் தூரத்தில் உள்ள மின்லே சான்டாக் ஆகிய பகுதிகளையே நிலநடுக்கம் தாக்கியுள்ளது.

### கொலம்பியாவில் 13 பேர் கொல்லப்பட்டனர்

பொகோடா,ஒக்.27

கொலம்பியாவில் சிக்கன நடவடிக்கைகள் குறித்த அபிப்பிராய வாக்கெடுப்பு நடத்துவதை எதிர்த்து கிளர்ச்சியாளர்கள் மேற்கொண்ட தாக்குதலில் 13 பேர் கொல்லப்பட்டனர்.

ஜனாதிபதி அல்வரோ யூரிப் இந்த வாக்கெடுப்பை நடத்துவதற்கு உத்தரவிட்டிருந்தார்.

பிரதான நகரங்களில் வாக்கெடுப்பு முடிந்திருக்கிறது. நடந்து முடிந்த வாக்கெடுப்பு முடிவுகளின்படி சிக்கன நடவடிக்கைகளை மேற்கொள்ள ஆதரவு கிடைத்திருக்கிறது. ஆனால், அதனை அமுல்படுத்த மேலும் 25 சதவீத ஆதரவு தேவை என்று கூறப்படுகிறது.

# பிறந்தநாள் வாழ்த்து

இன்று தன்னுடைய 29 ஆவது அகவையில் கால் பதிக்கும் எனது பெருமதிப்பிற்கும் அன்பிற்கும் உரிய விஞ்ஞான ஆசிரியர் **திரு.S.பாலச்சந்திரன்**

உள்ளத்தில் குழந்தையாய்
எண்ணத்தில் இனிமையாய்
வாழ்க்கையில் வளமாய்
வாழ என் இனிய வாழ்த்துக்கள்.

என்றும் ஸ்நேகமுடன்
தாழ்மையுள்ள மாணவன்
நடராசா பிரகாஸ் (கைதடி)
தரம்- 10

(23340) (25-11-18)



## ஊனமுற்றோர் புனர்வாழ்வுச் சங்கத்தால் மிதிவெடி, வெடிபொருள்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கான சுயமுயற்சிக் கடன் வழங்கல் திட்டம்

மிதிவெடி மற்றும் வெடிபொருள்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கு தொழில் முகாமைத்துவமும், தொழில்சார் பயிற்சியும், தொழில் ஆரம்பிப்பதற்கான கடன உதவியும் வழங்க ஊனமுற்றோர் புனர்வாழ்வுச் சங்கம் (AROD) எண்ணியுள்ளது. இதன் மூன்றாம் கட்டமாக சங்கானை, தெல்லிப்பழை, உடுவில், யாழ்ப்பாணம் மற்றும் தீவக பிரதேச செயலர் பிரிவுகளும் தெரிவுசெய்யப்பட்டுள்ளன. இப்பிரதேச செயலர் பிரிவுகளில் நிரந்தரமாக வசிக்கும் பாதிப்புற்றவர்கள் இம்மாதம் 27, 28 ஆம் திகதிகளில் (திங்கள், செவ்வாய்) காலை 10.00 - 2.00 மணிவரை நேரடியாக வந்து தொடர்புகொள்ளவும்.

உங்கள் தொடர்புகளுக்கு: ஊனமுற்றோர் புனர்வாழ்வுச் சங்கம்,
47/2, ஆடியபாதம் வீதி
(மருத்துவபீடம் அருகில்), திருநெல்வேலி.

(C-30974) (11-18-35)



# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தாயின் மடியில் (இணுவில்) 25 - 07 - 1964



ஆண்டவன் அடியில் (பிரான்ஸ்) 07 - 11 - 2002

## அமரர் கனகரட்ணம் சோதிராஜா (சோதி)

(திதி: 27.10.2003)

மறந்திடாது உன் நினைவை எம் இதயங்கள்!!
சோதி உன் இழப்பு - இதயத்தில்
தீயாய் எரிகிறது!!! - ஒரு
தாயின் வயிற்றில் உனக்கு நான்
தமையனாய் பிறந்திருந்தும் - இறுதி
தீயில் எரியும் போது கூட உன் உடலை
திரும்பிப் பார்க்க முடியவில்லையே!!!
பாவி அண்ணன் பதைக்கிறான் - ஒரு முறையேனும்
பார்த்து பதில் சொல்லமாட்டாயா?
பாரீஸ் சென்று வருகிறேன் என
களிப்புடன் தானே புறப்பட்டாய்
ஏனடா இடையில் விதி
இப்படி உன்னிடம் விளையாடியது?
கதி கலங்கி நிற்கும் உள்ளங்களுக்கு
பதில் சொல்லமுடியவில்லையே!!
மதி கெட்டுப் போனாலும் உயிர் மூச்சு உள்ளவரை
மறந்திடாது உன் நினைவை எம் இதயங்கள் என்றும்!!
ஓம் சாந்தி!

உன் பிரிவால் துயருறும்:
அன்பு அண்ணன்,
அண்ணி, பிள்ளைகள்.

'மகேந்திரபதி'
கே.கே.எஸ். வீதி,
இணுவில்.

(24009) (25-11-18)


## நூலக வாரம்

வலி.தெற்கு,ஒக்.27

சர்வதேச பாடசாலை நூலக வார விழா நிகழ்வுகள் இன்று திங்கட்கிழமை பிற்பகல் 3மணிக்கு மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் வலிகாமம் வலயக் கல்விப்பணிப்பாளர் திருமதி றெஜினா இருதயநாதன தலைமையில் நடைபெறவுள்ளது.

நூலக தினத்தை முன்னிட்டு மாணவர்களிடையே நடத்தப்பட்ட வினாவிடை, சுவரொட்டிச் சித்திரப் போட்டிகளில் வெற்றியீட்டியோருக்கான பரிசில்களும் இந்நிகழ்வில் வைத்து வழங்கப்படவுள்ளன.

(எ-10-152)

★ ★ ★ ★

கரவெட்டி,ஒக்.27

நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் நாளை திங்கட்கிழமை நூலகவாரம் அனுஷ்டிக்கப்படவுள்ளது.

இதனையொட்டிய நூல் கண்காட்சியும் விற்பனையும் தொடர்ந்து இடம்பெறும். (எ-10-70)

## உணவுதினத்தை முன்னிட்டு கட்டுரைப்போட்டி

வலிகாமம்தெற்கு,ஒக்.27

உலக உணவு தினத்தையொட்டி பாடசாலை மாணவர்களிடையே மாவட்டரீதியில் கட்டுரைப் போட்டிகளை நடத்தவும்.

ஒவ்வொரு மாவட்டத்திலும் இருந்து தெரிவு செய்யப்படும் மூன்று போட்டியாளர்களுக்கு பரிசுகளும் சான்றிதழ்களும் வழங்க கமத்தொழில் கால்நடை அமைச்சு நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

இதனை முன்னிட்டு யாழ். அரசாங்க அதிபர் யாழ். மாவட்டத்தில் உள்ள கல்விவலயங்கள் ஊடாக போட்டிகளை நடத்தி முதல் மூன்று கட்டுரைகளை தெரிவு செய்து அனுப்புமாறு கேட்டுள்ளார்.

ஜி.சீ.ஈ சாதாரண, உயர்தர வகுப்புகளை சேர்ந்த மாணவர்கள் இக்கட்டுரை போட்டியில் பங்கு கொள்ளலாம்.

(எ-152)


## வைத்தியம்

செங்கண்மாரி, அல்சர்,
ஆஸ்துமா, வாதநோய்கள்,
வலிப்பு நோய், பீனிசம்,
தலையிடி,
தலைகால் அவியல்,
சருமநோய்கள்,
மாதவிடாய்க்குத்து,
இரத்தப்போக்கு,
வெள்ளைக்கசிவு,
கருவழிதல்,
மகப்பேறின்மை,
குழந்தை வைத்தியம்,
வீரியக்குறைவு,
மூலவியாதிகள்,
மூத்திரரோகங்களில்
பிரபல்யமானவர்.
சகல வியாதிகளையும்
குணப்படுத்துபவர்:

வேலணை வைத்திய கலாநிதி
**சி.இராசரத்தினம்**
121, 2ஆம் குறுக்குத் தெரு,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி எண் :222 2459



# பாராட்டி வாழ்த்துகிறோம்

உ



அல்வாய் தெற்கைப்
பிறப்பிடமாகக் கொண்டவரும், கல்வியமைச்சின்
புலமைப் பரிசில் பெற்று ஆஸ்திரேலியா
பல்கலைக்கழகத்தின் கல்வியிற் (Doctor of Education) பட்டத்தை
பெற்றுக் கொண்டவருமான

**கலாநிதி தம்பிஜயா கலாமணி**

அவர்களை நீடூழி வாழ்கவென
வாழ்த்துகின்றோம்.

கலைமகிழ்நன், கலாபூஷணம்
**வே. க. பாலசிங்கம் குடும்பம்**
பொலிகண்டி.

(24064) (26-11-18)



# பாராட்டி வாழ்த்துகின்றோம்



வதிரியைப் பிறப்பிடமாகவும்
சமரபாகுவை வசிப்பிடமாகவும்
யாழ். போதனா வைத்தியசாலை
பாதுகாப்பு உத்தியோகத்தருமாகிய
**ஊர்த்தொண்டன்** என்ற
பட்டத்திற்குரிய

**உயர்திரு. மயிலு சத்தியநாதன்**

அவர்கள் அண்மையில் அகில இலங்கை சமாதான நீதிவானாக சத்தியப்பிரமாணம் செய்ததையிட்டு வாழ்த்துவதுடன், அவரது பணி மேலும் சிறக்க எள்ளங்குளம் முத்து மாரியம்மன் அருள்புரிய வேண்டும் என்று பிரார்த்திக்கின்றோம்.

வாழ்த்தும் உறவுகள்:
க.அகிலன்,
ப.பாஸ்கரன்,
கி.யோகநாதன்.

(24066) (25-11-18)



# யா/தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி

ஜயரத்தினம் நினைவு நாளும்
கனிட்ட பிரிவுப் பரிசளிப்பு விழாவும்

தலைவர்: **திரு.பொ.சுந்தரலிங்கம்** (அதிபர்)
இடம்: **கல்லூரி மண்டபம்**
காலம்: **2003-10-29 புதன்கிழமை காலை 9.00மணி**
பிரதம விருந்தினர்: **உயர்திரு. மா.சின்னத்தம்பி அவர்கள்**
(தலைவர், கல்வியியற்றுறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)
சிறப்பு விருந்தினர்கள்: **திருமதி ச.நாகராசா அவர்கள்**
(உதவிக் கல்விப்பணிப்பாளர், கல்வி அபிவிருத்தி, வலிகாமம் வலயம்)
**கலாநிதி, சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள்**
நினைவுப் பேருரை: **திருமதி மைதிலி விசாகரூபன**
(பழைய மாணவர்)
(பகுதிநேர விரிவுரையாளர், யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற்கல்லூரி, கலாசார அலுவலர், யாழ்ப்பாணப் பிரதேசச் செயலகம்)
பரிசில் வழங்குதல்: **திருமதி சசிலேகா சின்னத்தம்பி அவர்கள்**
நன்றியுரை: **திரு. வை.சிவராசா**
(பாடசாலை அபிவிருத்திச்சங்க செயலாளர்)

*அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.*

அதிபர், ஆசிரியர்கள்,
மாணவர்கள், ஊழியர்கள்.

(24051) (34-11-18)



# திருமண அழைப்பு



உ

அன்புடையீர்! நிகழும் மங்களகரமான சுபானு வருடம் ஐப்பசித்திங்கள் 12ஆம் நாள் (29.10.2003) புதன்கிழமை தனுலக்கினமும் அதிதி யோகமும் கூடிய பகல் 9.30 மணிமுதல் 11.00 மணிவரையுள்ள (புதிய நேரம்) சுபமுகூர்த்த வேளையில்,

எங்கள் கனிஷ்ட புத்திரன்
திருவளர் செல்வன்
**ரவிகரன்**
அவர்களுக்கும்



எங்கள் செல்வப் புதல்வி
திருவளர் செல்வி
**உமாவதி**
அவர்களுக்கும்

இறைவன் திருவருள் துணைகொண்டு யாழ்ப்பாணம், ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமாள் தேவஸ்தான ஸ்ரீ லக்ஷ்மி நாராயணன் கல்யாண மண்டபத்தில் திருமணம் நடத்தப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால், அத்தருணம் எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் தங்கள் குடும்ப சமேதரராக வருகை தந்து மணமக்களை ஆசீர்வதித்து, தொடர்ந்து இடம்பெறும் மதியபோசன விருந்துபசாரத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**இங்ஙனம் தங்கள் நல்வரவை நாடும்:**

**திருமதி இராசமலர் கந்தையா**
32, பேரின்பநாயகம், ஒழுங்கை,
சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்.



**திரு.திருமதி. கந்தையா**
மட்டுவில் வடக்கு,
மட்டுவில், சாவகச்சேரி.

***குறிப்பு:-*** இத்திருமணம் முன்னர் 10.09.2003 இல் நடைபெற இருந்து தவிர்க்க முடியாத காரணத்தினால் ஒத்திவைக்கப்பட்டு இப்போது நடைபெறுவதனால் முன்னர் அழைக்கப்பட்டவர்கள் அனைவரும் ஏனையோரும் இதனை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளுமாறு பணிவன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

(24056) UTHAYAN Graphics



# ஈரவிழிகளுடன் ஓராண்டு நினைவஞ்சலி

மலர்வு 12 - 04 - 1954



உதிர்வு 05 - 11 - 2002

## அமரர் சதாசிவம் சதானந்தசிவராஜா (சிவம்)

திதி: துதியை 27.10.2003

ஆண்டொன்று சென்றதோ அப்பா - எம்
ஈரவிழி ஊற்றெடுத்து
கவலைகள் பொறுத்ததப்பா - எமை
கண்ணீரில் மூழ்குதப்பா
ஊர் போற்றும் உத்தமராய் - தினம்
ஊர் உலவி வந்தவரே!
சிந்தையிலே கோயில் வைத்து - நாம்
சிரம் தாழ்த்தும் தெய்வமப்பா
அம்பாளின் திருவடி தேடி சென்றீரோ
இனி நாம் காண்பது தான் எப்போதப்பா
தேறுதல் சொல்ல தெய்வமே வந்தாலும்
ஈரவிழி காயாது எம்மனமும் ஆறாது.

அ.சதாசிவம்,
தாரியப்பற்று, வதிரி,கரவெட்டி. (34-11-18)

தகப்பன், தாய், மனைவி, பிள்ளைகள்,
சகோதரர், சகோதரி.

(24000)

# உதயன்

## யுத்த விளிம்பில் நாட்டை நிறுத்தியுள்ள ஜனாதிபதி

"இலங்கைக் கண்காணிப்புக் குழுவின் தலைவர் மேஜர் ஜெனரல் ட்றிக்வே ரெலிவ்சனின் அறிவுறுத்தல்களையோ, ஆலோசனைகளையோ கருத்தில் எடுக்கத் தேவையில்லை."

- இப்படி முப்படைத் தளபதிகளுக்கு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க எழுத்து மூலம் உத்தரவு பிறப்பித்திருக்கின்றார் என்ற அதிர்ச்சித் தகவல் வெளியாகியிருக்கின்றது.

இராணுவத் தளபதியும், முப்படைகள் மற்றும் பொலீஸைக் கூட்டிணைக்கும் கூட்டுப்படைத் தலைமையகத்தின் தலைமை அலுவலருமான லெப்டினன்ட் ஜெனரல் லயனல் பலகல்ல, கடற்படைத்தளபதி வைஸ் அட்மிரல் தயா சந்தகிரி, விமானப்படைத் தளபதி எயர் மார்ஷல் டொனால்ட் பெரேரா ஆகியோருக்குக் கடந்த வெள்ளியன்று இது தொடர்பாக எழுத்துமூல உத்தரவுகளை ஜனாதிபதி வழங்கியிருக்கின்றார் எனத் தெரியவருகின்றது.

விடுதலைப் புலிகளுடன் யுத்தத்தை நிறுத்தி, அமைதி முறையில் இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண்பதற்கான சமாதான முன்முயற்சிகளை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐ.தே.முன்னணி அரசு மேற்கொண்டு வருகின்றது. அதன் ஒரு கட்டமாக புலிகளுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றை அரசு செய்துகொண்டது. பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும், புலிகளின் தலைவர் வே.பிரபாகரனும் இந்த ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டனர். இந்த ஒப்பந்தத்தின் கீழ் அரசுப் படைகளும், விடுதலைப் புலிகளும் யுத்தநிறுத்தம் செய்வதைக் கண்காணிப்பதற்கு சர்வதேச கண்காணிப்பாளர்கள் நியமிக்கப்பட்டு அவர்கள் தமது பணியைச் செய்து வருகின்றனர்.

இந்தநிலையில், கண்காணிப்புக்குழுத் தலைவர் மீது தனக்கு நம்பிக்கை இல்லையெனத் தெரிவித்து, அவரைப் பதவிநீக்குமாறு கோரி அப்பதவிக்கு அவரை நியமித்த நோர்வேப் பிரதமருக்கு ஜனாதிபதி குமாரதுங்க அண்மையில் ஒரு கடிதம் எழுதியிருந்தார் என்பது தெரிந்ததே.

புலிகளுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்து, போர் நிறுத்தம் மேற்கொண்டு, சமாதான முயற்சிகளை முன்னெடுத்துவரும் அரசுக்கோ, அதன் அமைச்சரவைக்கோ, அதன் தலைவரான பிரதமருக்கோ கூட அறிவிக்காமல் தன்பாட்டில் ஜனாதிபதி எடுத்த இந்த நடவடிக்கை நீதியானதா, செல்லுபடியானதா, சட்டமுறையானதா என்ற கேள்விகள் எல்லாம் ஒருபுறம் இருக்க -

அவரது இந்த நடவடிக்கையும் அதைத் தொடர்ந்து முப்படைத்தளபதிகளுக்கு அவர் விடுத்துள்ள உத்தரவும் நாட்டின் எதிர்காலத்தையே கேள்விக்கும் ஆபத்துக்கும் உள்ளாக்கி, ஸ்திரமற்ற ஒரு நிலையை உருவாக்கியிருக்கின்றன என்பதே முக்கியமானதாகும்.

அரசுப்படைகளுக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையில் இருபது மாதகாலமாக சமாதானநிலை நீடிக்கின்றது என்றாலும், ஒரு பதற்றத்துக்கு மத்தியிலேயே அந்த 'பயமான அமைதி' தொடர்கின்றது என்பதே யதார்த்தமாகும். எந்தநேரம் என்ன நேருமோ என்ற அச்சநிலைமை நீடிக்காமல் இல்லை.

இருதரப்புக்கும் இடையில் ஏற்படக்கூடிய முறுகலை நடுநிலையில் நின்று தணிப்பதற்கு யுத்தநிறுத்தக் கண்காணிப்புக்குழு களத்தில் உள்ளது என்பதுதான் ஆறுதலான விடயம்; அவர்களே பெரும்பாலும் - பல சமயங்களில் முறுகல் நிலைமை, யுத்தநிறுத்தத்தை முறித்துவிடும் விபரீதத்தை ஏற்படுத்தாமல் தடுத்தும், தவிர்க்கச் செய்தும் வந்திருக்கின்றார்கள்.

ஆனால், இப்போது கண்காணிப்புக்குழுத் தலைவரின் அறிவுறுத்தல்களையோ, ஆலோசனைகளையோ செவிமடுக்கத் தேவையில்லை என்று முப்படையினருக்கும் - தன்னிச்சையாகத் திடீரென உத்தரவிட்டதன் மூலம் நாட்டை யுத்தவிளிம்பில் - கொண்டுபோய் நிறுத்தியிருக்கின்றார் ஜனாதிபதி.

கண்காணிப்புக்குழுத் தலைவரை நீக்கும்படி நோர்வேப் பிரதமருக்கு இலங்கை ஜனாதிபதி எழுதிய கடிதத்தில் நியாயமுள்ளதா? அதைக் கவனத்தில் எடுத்து நோர்வேப் பிரதமர் உடன் நடவடிக்கை மேற்கொள்வாரா? அல்லது புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டு அதன் மூலம் கண்காணிப்புக் குழுவினரை பணிக்கு அழைத்த பிரதமர் ரணில் - தலைவர் பிரபா ஆகியோருடன் ஆலோசித்த பின்னர்தான் தேவைப்படின் அவர் நடவடிக்கை எடுப்பாரா? - இவைபற்றி முடிவெடுப்பதற்கும், அந்த முடிவு வெளியே தெரியவருவதற்கும் காலம் தேவை; நேரம் எடுக்கும்.

ஆனால், இதற்கெல்லாம் இடம்கொடுக்காமல், முப்படைத்தளபதிகளுக்கு உத்தரவு பிறப்பித்துவிட்டார் ஜனாதிபதி. நிறைவேற்று அதிகார ஜனாதிபதியின் இந்த உத்தரவை முப்படைத்தளபதிகளும் அப்படியே சிரமேற்கொண்டு அதற்கு அமைய செயற்பட முயன்றால் நிலைமை என்னவாகும்? அரசப்படைக்கும் - புலிகளுக்கும் இடையில் எல்லைப் புறத்தில் வெடிக்கக்கூடிய சிறிய மோதல்கூட - தடுத்துக் கண்காணிக்க வேண்டிய கண்காணிப்புக் குழுவின் செயல் அம்பலம் ஏறாத நிலையில் - மீண்டும் பெரும் யுத்த நிலைக்கு நாட்டைக் கொண்டுசெல்லும் ஆபத்தை ஏற்படுத்தும் அல்லவா?

அடுத்த நிமிடமே யுத்தம் வெடிக்கக்கூடிய ஆபத்து நிலை இருப்பதைக் கவனத்தில் எடுக்காமல் மேற்கொள்ளப்பட்ட - குறுகிய அரசியல் லாபநோக்கமுடைய - காய் நகர்த்தலாகவே ஜனாதிபதியின் இச்செயற்பாடு அமைந்துள்ளது.

## காலத்தின் பதிவு



அழகு  படம் : தேவா

# பயிலுநர், தகுதிகாண் ஆசிரியர்களுக்கு நியமனத் திகதியிலிருந்து பணி நிரந்தரம்

அச்சுவேலி,ஒக்.27

பயிலுநர், ஆசிரியர்கள் மற்றும் தகுதிகாண் ஆசிரியர்களாக நியமனம் பெற்றவர்களுக்கு நியமனம்பெற்ற காலத்தில் இருந்து பதவி உறுதிப்படுத்தப்பட்டு நிரந்தர நியமனம் வழங்கப்படவுள்ளது.

பயிலுநர் ஆசிரியர்களாக நியமனம் பெற்றவர்களும், தகுதிகாண் ஆசிரியர்களாக நியமனம் பெற்றவர்களும், ஆசிரியர் பயிற்சிபெற்று, பயிற்றப்பட்ட ஆசிரியர் சான்றிதழ் பெற்ற திகதி வரை பதவி உறுதிப்படுத்தப்படாமல் கடமை புரிந்து வந்தனர். பின்னா பயிற்றப்பட்ட ஆசிரியர் சான்றிதழ் செல்லுபடியாகும் தினத்தில் இருந்து அவர்கள் ஆசிரியர் சேவையில் உள்ளீர்ப்புச் செய்யப்பட்டு நிரந்தர நியமனம் பெற்றனர்.

இவர்களது சேவைக்காலத்தில் ஆசிரியர் பயிற்சிச் சான்றிதழ் பெறும் வரையான காலப்பகுதி சேர்த்துக்கொள்ளப்படவில்லை. இதனால் நான்கு வருடங்களுக்கும் மேற்பட்டகாலம் அவர்களது சேவைக்காலத்தில் சேர்த்துக்கொள்ளப்படாது இருந்து வந்தது.

இந்நிலையிலேயே நியமனம்பெற்ற காலத்தில் இருந்து பணி நிரந்தரம் வழங்கப்படும் என்ற அறிவிப்பு வெளிவந்துள்ளது.

நியமனம் கிடைத்த காலத்தில் இருந்து நிரந்தர நியமனம் பெற்றுக்கொள்வதால் சேவை மூப்பு தொடர்பான சலுகையை 50ஆயிரத்துக்கு மேற்பட்ட ஆசிரியர்கள் பெற்றுக்கொள்ளவுள்ளனர்.

ஆசிரியர் சேவை நிலையியற்குழுவில் ஏற்றுக்கொள்ளப்பட்ட இததீர்மானம் அமைச்சரவையின் அங்கீகாரத்துடன் சுற்றறிக்கையாக வெளியிடப்படவிருப்பதாக கல்வி உயர் கல்வி அமைச்சின் உயர் அதிகாரி தெரிவித்தார். (ஒ-71)

## கடற்றொழில் மேம்பாட்டுக்கு ஐந்து வருட திட்டம் தயாரிப்பு

யாழ்ப்பாணம்,ஒக்.27

குடாநாட்டு மீனவர்களின் புனர்வாழ்வு மற்றும் அவர்களது தொழில் மேம்பாட்டு நடவடிக்கைகள் போன்றவற்றை உள்ளடக்கிய ஐந்து ஆண்டுகாலத் திட்டம் ஒன்றினை கடற்றொழில் நீர்வள திணைக்களம் தயாரித்துள்ளது.

இத்திட்டம் தொடர்பான முன் வரைவு அண்மையில் யாழ். செயலகத்திடம் கையளிக்கப்பட்டிருக்கின்றது.

மேற்படி திட்டத்தை செயற்படுத்துவதற்கு சுமார் 566கோடி ரூபா நிதி தேவைப்படுவதாகவும் அதில் சுட்டிக்காட்டப்பட்டிருக்கின்றது.

இத்திட்டம் செயற்படுத்தப்பட்டால் குடாநாட்டு மீனவர்களின் வாழ்க்கைத்தரத்தினை மேம்படுத்த முடியும் எனவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. (எ-4)

## உள்ளூராட்சி அமைப்புகளின் செயலர்களுக்கு கொடுப்பனவு

தெல்லிப்பழை,ஒக்.27

வடக்கு - கிழக்கு மாகாணத்திலுள்ள உள்ளூராட்சி அமைப்புகளின தலைவர்களுக்குரிய பணியை ஆற்றிவரும் அந்த அமைப்புகளின் செயலாளர்களுக்கு விசேட கொடுப்பனவு வழங்க மாகாண உள்ளூராட்சித் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது.

வடக்கு - கிழக்கு மாகாணங்களிலுள்ள உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல்கள் நடத்தப்படாமல் பிற்போடப்பட்டு வருகின்றன. இதனால் அந்த உள்ளூராட்சி அமைப்புகளின் தலைவர்களுக்குரிய பணிகளை உள்ளூராட்சித் திணைக்களத்தின பணிப்புக்கேற்ப அந்த அமைப்புகளின் செயலாளர்களே மேற்கொண்டு வருகின்றனர்.

இதற்கான விசேட கொடுப்பனவு செயலாளர்களுக்கு வழங்கப்படவுள்ளது.

இதற்கான ஒப்புதலை வடக்கு - கிழக்கு மாகாண ஆளுநர் வழங்கியுள்ளார். இதனைத்தொடர்ந்து இக்கொடுப்பனவு தொடர்பான சுற்றறிக்கையை சம்பந்தப்பட்ட உள்ளூராட்சி செயலாளர்களுக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் செல்வி.ரெ.து. விஜயலக்சுமி அனுப்பி வைத்துள்ளார்.

உள்ளூராட்சி செயலாளர்கள் தற்போது பெற்றுவரும் வேதனத்தின் அடிப்படையின் கால் பங்கு மேலதிகக் கொடுப்பனவாக வழங்கப்படவுள்ளது. இக்கொடுப்பனவு உள்ளூராட்சி செயலர்கள், தலைவர்களுக்குரிய பணியை ஆற்றுமாறு பணிக்கப்பட்ட கடிதங்கள் வழங்கப்பட்ட திகதியில் இருந்து நடைமுறைப்படுத்தப்படவுள்ளது. (ஒ-150)

### நாளை

ஐப்பசி 11
செவ்வாய்க்கிழமை
(28.10.2003)
திதி : திருதியை
பிற்பகல் 12.24 வரை.
நட்சத்திரம் : அனுஷம்
பிற்பகல் 1.07 வரை
சுபநேரம்: 10.33-12.03
ராகுகாலம்: 3.03-4.33
(பழைய நேரப்படி)

### உதயவாக்கு

பிறரது திறமையால் கிடைக்கும் வெற்றிக்கு சொந்தம் கொண்டாடுபவர் விரைவில் தனிமையடைய நேரிடும்.

# போக்குவரத்து விதி மீறல் குறித்து ஒரே நாளில் 176 வழக்குகள்

## மல்லாகம் ஆரம்ப நீதிமன்றில்

தெல்லிப்பழை,ஒக்.27

போக்குவரத்து விதிகளை மீறியமை தொடர்பாக கடந்த 15ஆம் திகதி அன்று 176 வழக்குகள் மல்லாகம் ஆரம்ப நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டன. இதன்போது நீதிமன்றில் ஆஜரான 32 பேரிடமிருந்து ரூபா 14 ஆயிரத்து 500 ரூபா அபராதமாக அறவிடப்பட்டது.

வீதிப்போக்குவரத்தின் போது தலைக்கவசமின்றி மோட்டார் சைக்கிள் செலுத்தியமை, சாரதி அனுமதிப்பத்திரம், வாகன பதிவுப்பத்திரம், நடப்பு ஆண்டு காப்புறுதிப்பத்திரம், வரிப்பத்திரம் போன்றவை இன்றி வாகனங்களை செலுத்தியமை, வீதி ஒழுங்குகளை மீறியமை இலக்கத்தகடற்ற வாகனங்களை செலுத்தியமை போன்ற குற்றச்சாட்டுக்களின் பேரில் மல்லாகம் ஆரம்ப நீதிமன்றில் வழக்குத்தாக்கல் செய்யப்பட்டோரில் 176 பேரின் வழக்குகள் கடந்த 15 ஆம் திகதி நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டன. இதன்போது வழக்குகளுக்கு சமுகமளித்திருந்த 32 பேரிடமிருந்து 14 ஆயிரத்து 500 ரூபா அபராதமாக அறவிடப்பட்டது.

வழக்குகளுக்கு சமுகமளிக்காத ஏனையோருக்கு பிடியாணை பிறப்பிக்கப்பட்டது. அதேபோல கடந்த 8ஆம் திகதி 96 வழக்குகள் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது 26 பேர் வழககுகளுக்கு சமுகந்தந்து 9 ஆயிரத்து 500 ரூபா அபராதமாக செலுத்தினர். (ஒ-150)

# ஆயுர்வேத வைத்திய நிலையத்தை மீண்டும் இயக்கும்படி கோரிக்கை

## அரியாலை மக்கள் விடுத்தனர்

வலி.வடக்கு,ஒக்.27

அரியாலை கண்டி வீதியில் முன்னர் இயங்கிவந்த ஆயுர்வேத வைத்திய நிலையத்தை மீண்டும் அரியாலைப் பகுதியில் இயகக நடவடிக்கை எடுக்கும்படி அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கடந்த நான்கு வருடங்களுக்கு முன்னர் அரியாலைப் பகுதியில் நல்லூர்ப் பிரதேச சபையினால் நடத்தப்பட்ட இவ்வைத்திய நிலையம் யுத்தச் சூழ்நிலை காரணமாக வேறு இடத்திற்கு மாற்றப்பட்டது.

தற்போது அரியாலைப் பகுதியில் மக்கள் மீளக்குடியமரத் தொடங்கியுள்ளனர். இந்நிலையில் இந்த வைத்திய நிலையத்தை மீண்டும் அரியாலையில் இயங்கச்செய்ய நடவடிக்கை எடுக்குமாறு அப்பகுதி மக்கள் கோரிவருகின்றனர்.

இப்பகுதி மக்களின் நலன்கருதி மீண்டும் இதனை இயக்க நடவடிக்கையெடுக்கும்படி பிரதேச செயலாளர் மற்றும் திணைக்களங்களுக்கு கோரிக்கை விடப்பட்டுள்ளது. (ஒ-86)

# அழுக்கை அகற்றும் சவர்க்காரங்களில் அழகிய சிற்பங்களைச் செதுக்க முடியும்

**சவர்க்காரங்களில் பலவிதமான சிற்ப உருவங்களைச் செதுக்கிப் பார்ப்போரை பிரமிக்கச் செய்து வரும் கலைஞர் திரு.ம. பார்த்தீபன் 'கலைச்சுடர்' பகுதிக்கு வழங்கிய செவ்வி இங்கு தொகுத்துத் தரப்படுகின்றது.**

சிற்பக்கலைக்கு ஒரு புதுவகையான - முற்றிலும் வித்தியாசமான பாணியைக் கொடுத்து சவர்க்காரங்களில் பலவகையான சிற்பங்களை செதுக்கி பலரையும் ஆச்சரியத்தில் ஆழ்த்திக்கொண்டிருப்பவர்தான் பார்த்தீபன்.



1994ஆம் ஆண்டு மரத்தில் செதுக்கிய சிலை ஒன்றுடன் கலைஞர் பார்த்தீபன்

நெடுந்தீவைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் தற்போது அரியாலையில் வசித்துவருபவருமான இவர் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியில் ஆசிரியராக கடந்த 10 வருடங்களுக்கு மேல் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்.

நெடுந்தீவைச் சேர்ந்த மகேஷ்



சவர்க்காரச் சிற்பம்

- வேதநாயகி தம்பதிகளின் இரண்டாவது மகனாக பிறந்த இவர் தனது ஆரம்பக்கல்வியை நெடுந்தீவு மகா வித்தியாலயத்திலும் இடைநிலைக் கல்வியை யாழ். ஸ்ரான்லிக் கல்லூரியிலும் கற்றார்.

சிறுவயது முதலே கலை ஆர்வம் மிக்கவரான இவர் சிற்பம் செதுக்குதல், ஓவியம் வரைதல் என்பவற்றில் முழு ஈடுபாடு காட்டினார்.

வடக்கு - கிழக்கு மாகாண ஆரம்பக்கல்வி உதவிக்கல்விப் பணிப்பாளராக இருந்து ஓய்வுபெற்ற இவரது தந்தையார் நீண்டகாலமாக இலக்கியத்துறையில் நிறைந்த ஈடுபாடு கொண்டவர்.

இலக்கிய உலகில் 'நெடுந்தீவு மகேஷ்' என்று அறியப்பட்ட அவர் பல கவிதைகள், சிறுகதைகள், கட்டுரைகள் என்பவற்றை எழுதியும் உள்ளார்.

'மனிதத்தை தேடி....' என்ற பெயரில் வெளியான அவரது கவிதைத் தொகுப்பு நூலுக்கு கடந்த வருடம் இலக்கிய விருதும் வழங்கப்பட்டது.

சிறுவனாக இருக்கும்போதே பார்த்தீபன் களிமண்ணில் உருவங்களை செய்து அழகுற வடிவமைத்து பலரது பாராட்டுக்களையும் பெற்றார்.

அத்துடன், சவர்க்காரங்களில் சிற்பங்களை செதுக்கி பார்ப்பவர்களை பிரமிக்கச் செய்து வந்தார்.

ஆரம்பத்தில் தான் செதுக்கிய சிற்பங்கள் எதிர்பார்த்த அளவுக்கு வெற்றியளிக்காவிட்டாலும் அதில் தனக்கு ஏற்பட்டிருந்த அதீத ஆர்வமும் விடாமுயற்சியும் சொற்ப நாள்களிலேயே வெற்றிகரமாக அவற்றை அமைக்கக்கூடிய ஆற்றலை தந்தது என்கிறார் பார்த்தீபன்.

ஜி.சீ.ஈ. உயர்தரவகுப்பில் இவர் கணிதப் பிரிவில் கல்வி கற்றார். எனினும் பின்னர் சித்திரம், சிற்பம் என்பவற்றில் காட்டிய திறமையினால் 1992 ஆம் ஆண்டு வட்டக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியில் சித்திர பாட ஆசிரியராக நியமனம் பெற்றார். தனது ஆற்றலை பிறருக்கு கற்பிப்பதற்கும் திறமையை மேலும் வளர்த்துக் கொள்வதற்கும் ஏற்ற வகையில் ஆசிரியர் தொழில் கிடைத்தது மட்டற்ற மகிழ்ச்சியை தந்தது என்று கூறி திருப்திப்பட்டுக்கொண்டார் ஆசிரியர் பார்த்தீபன்.

சவர்க்காரத்தில் உருவங்களை செதுக்கும் தனது கலையை பாடசாலை மாணவர்களுக்கு 'வாழ்க்கைத் தேர்ச்சி' என்ற பாடத்தின் ஊடாக கற்பித்துக்கொண்டிருப்பதாகவும் -

அதனை மாணவர்கள் மிகுந்த ஆர்வத்துடன் கற்றுக்கொள்ள முன்வருவதை அவதானிக்க முடிகின்றது எனவும் ஆசிரியர் பார்த்தீபன் கூறினார்.

1998ஆம் ஆண்டு கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் இணைந்து ஆசிரியர் பயிற்சியைப் பெற்றுக்கொண்ட இவர் அங்கும் பல சிற்ப உருவங்களை அமைத்துக் காட்டி பலரது பாராட்டுக்களையும், பரிசுகளையும் பெற்றுக்கொண்டார்.

பலவகை சவர்க்காரங்களில் விலங்குகள், பறவைகள், தெய்வ உருவங்கள், சிறுவர்களுக்கான கதைகள், கலாசார உருவங்கள், இலச்சினைகள் போன்றவற்றை உயிரோட்டமான முறையில் செதுக்கி வருகின்றார் ஆசிரியர் பார்த்தீபன்.

இதுவரை பல நூற்றுக்கணக்கான சிற்ப உருவங்களை இவர் செதுக்கி வைத்துள்ளார். தனது இத்தகைய சிற்பக்கலை உருவாக்கம் பற்றி ஆசிரியர் பார்த்தீபன் பின்வருமாறு கூறுகின்றார்.

"சிறுவயதில் பத்திரிகைகள் மற்றும் பிறநாட்டு சஞ்சிகைகளில் இது போன்ற சிற்ப உருவங்களின் படங்கள் மற்றும் அது தொடர்பான தகவல்களை ஆர்வத்துடன் பார்ப்பேன்.

அவற்றைப் பார்க்கின்றபோது நானும் அவ்வாறு செய்து பார்க்க வேண்டும் என்ற எண்ணம் எனக்குள் ஏற்படும். அந்தச் சிந்தனை நாளுக்கு நாள் எனக்குள் வளர்ந்து கொண்டே போனது. சிந்தனைக்கு விடாமுயற்சியுடன் செயல்வடிவம் கொடுத்தேன். குறிப்பிட்ட சில நாள்களில் வெற்றியும் கிடைத்தது.

## சந்திப்பு : சந்திரமதனா

சவர்க்காரத்தில் உருவம் ஒன்றை புடைப்பு சிற்பமாக செதுக்குவதற்கு ஆரம்பத்தில் சுமார் ஒரு மணித்தியாலம் எடுத்தது. இப்பொழுது சுமார் 20-25 நிமிடத்துக்குள் ஒரு சிற்பத்தை செதுக்க முடிகின்றது என்று கூறினார்.

இந்த வித்தியாசமான சிற்பக் கலையை எவரிடமும் கற்றுக்கொள்ளாது தானே தனது சொந்த முயற்சியால் கற்றுக்கொண்ட இந்தக் கலை



ஞர் இப்பொழுது தனது மாணவர்கள் பலருக்கு இதனை ஆர்வத்துடன் கற்பித்துக் கொண்டிருக்கிறார்.

தன்னிடமுள்ள திறமைகளை நினைத்துப் பெருமைப்பட்டுக்கொள்ளாத தன்மையை அவரிடம் அவதானிக்க முடிந்தது.

## கலைச்சுடர்

தயாரிப்பு:-அற்புதன்

ஆனால், இது மிகவும் நுணுக்கமான வேலைப்பாடுடைய கலை. எனவே, உருவங்களை செதுக்கிக் கொண்டிருக்கும்போது மனம் ஒருமுகப்பட்டு சிந்தனை முழுவதும் செதுக்கிக்கொண்டிருக்கும் உருவத்தின் மீதே இருக்கவேண்டும். இடையில் வேறு வேலை செய்தாலோ வேறு சிநதனையுடன் இருந்தாலோ செதுக்க விழைந்த உருவம் உருமாறிவிடும். மனதை ஒருமுகப்படுத்துவதற்கு தியானப் பயிற்சிகளை மேற்கொள்வதும் நல்லது என்கிறார் பார்த்தீபன்.

என்னைப் பொறுத்தரை சவர்க்காரத்தில் சகல வகையான உருவங்களும் இருக்கின்றன. எந்த உருவத்தை செதுக்கவேண்டும் என்று விரும்புகின்றேனோ அதனை மட்டும் எனது மனதில் ஒருமுகமாக சிந்தித்துக்கொண்டு சவர்க்காரத்தில் உள்ள ஏனைய பகுதிகளை சிறு உளி ஒன்றினால் அகற்றிவிடுகின்றேன் அப்போது அங்கு சிற்பம் தானாகவே பிறக்கிறது



கடந்த வருடம் திருகோணமலையில் நடைபெற்ற கண்காட்சியின்போது தனது சவர்க்கார சிற்பங்களுடன் கலைஞர்.

என்று சாதாரணமாக கூறினார் இந்தக் கலைஞர்.

கடந்த வருடம் வடக்கு - கிழக்கு மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் அமைச்சினால் திருகோணமலையில் நடத்தப்பட்ட இலக்கிய விழாவின்



போது ஆசிரியர் பார்த்தீபனுடைய சவர்க்காரச் சிற்பங்கள் கண்காட்சிக்கு வைக்கப்பட்டன. இவரது சிற்ப கைவண்ணத்தின் சிறப்பை அறிந்து கொண்ட மாகாண கல்வித் திணைக்கள அதிகாரிகள் சவர்க்காரச் சிற்பங்களை அங்கு காட்சிப்படுத்துமாறு அழைப்பு விடுத்திருந்தனர்.

அந்தக் கண்காட்சியைப் பார்வையிட்ட பலரும் சவர்க்காரச் சிற்பங்களைப் பார்த்து மிகவும் பிரமித்துப் போனார்கள். அந்தச் சிற்பங்களை அவர்களில் பலர் விலைக்கு வாங்குவதற்கு விருப்பம் கொண்டிருந்தபோதிலும் விற்பதற்கு கலைஞர் பார்த்தீபன் சம்மதிக்கவில்லை.

தமது கைவண்ணங்களை யாழ்ப்பாணத்தில் ஒருதடவை முழுமையாக கண்காட்சிக்கு வைத்த பின்னரே அவற்றை விற்பது குறித்து சிந்திப்பேன் என்று அங்கு அவர் உறுதியாக கூறிவிட்டார்.

கண்காட்சியின் முடிவில் மாகாண கல்வித்திணைக்கள அதிகாரிகளினால் இக்கலைஞர் பொன்னாடை போர்த்துக் கௌரவிக்கப்பட்டார். இத்தகைய கலை, வனப்புமிக்க சிற்பங்களுக்கு இங்கு கிடைக்கும் வரவேற்பைவிட வெளிநாடுகளில் கிடைக்கின்ற மதிப்பும், வரவேற்பும் அதிகமாக இருப்பதையும் தன்னால் உணர்ந்துகொள்ள முடிகிறது எனவும் ஆசிரியர் பார்த்தீபன் கூறினார்.

கண்காட்சியின்போது அங்கு வைக்கப்பட்டிருந்த குறிப்பேட்டில் "சவர்க்காரத்துக்கு சாகாவரம் கொடுத்த கலைஞனே", "சவர்க்காரங்களில் சிற்பம் செதுக்கிய சிற்பியே உன் சிந்தனையைச் செதுக்கியது யார்", "கரைந்து போகும் சவர்க்காரங்களில் கலை வனப்புமிக்க சிற்பங்கள்" போன்ற பல வாசகங்கள் கண்காட்சியைப் பார்வையிட்டவர்களால் எழுதப்பட்டன.

கடந்த 1994ஆம் ஆண்டு யாழ்ப்பாணக் கல்லூரிக்கு வந்திருந்த அமெரிக்க மிஷனெறியைச் சேர்ந்த .'.போர்ட்டர் என்ற அமெரிக்க நாட்டு அதிகாரி எனது சிற்பங்களை பார்த்துவிட்டு என்னை வெகுவாகப் பாராட்டினார்.

அவரது வேண்டுகோளின்படி அவர் கூறியவாறான உருவம் ஒன்றினை மரத்தினால் செதுக்கி கொடுத்தேன். அந்த சிற்பத்தை அமெரிக்காவுக்கு எடுத்துச்சென்ற அவர் அதன் படத்தை 1995ஆம் ஆண்டு அங்கு தமது மிஷனெறியால் அச்சிடப்பட்ட கலண்டரில் பெரிய அளவில் போட்டிருந்தார். அதில் ஒரு கலண்டரை எனக்கும் அனுப்பியிருந்தார். அதனைப்பார்த்து நான் மிகவும் பூரிப்படைந்தேன் என்று கூறி, ஆசிரியர் பார்த்தீபன் பெருமைப்பட்டுக்கொண்டார்.



கிறிஸ்துவின் கற்சிற்பம்

சவர்க்காரத்தில், மரத்தில் மட்டுமல்லா கற்களில் சிற்பங்களை செதுக்குவதிலும் வல்லவரான இவர், தனது வீட்டை தான் செதுக்கிய சிற்ப உருவங்களாலே அலங்கரித்து வைத்திருக்கின்றார்.

இதுமட்டுமல்லாது அழகிய வடிவங்களில் 'கோலம் போடுவதிலும் கண்கவர் ஓவியங்களை வரைவதிலும் பார்த்தீபன் சிறந்து விளங்குகின்றார்.

தனது மாணவப் பருவம் முதல் இன்றைவரை கோலப்போட்டிகள் பலவற்றிலும் பங்குகொண்டு பரிசில்களையும் பெற்றிருக்கின்றார்.

2000ஆம் ஆண்டு நெடுந்தீவு மகா

(07ஆம் பக்கம் பார்க்க)



சவர்க்காரத்தில் பார்த்தீபனின் கைவண்ணம்



## உடுப்பிட்டி ப.நோ.கூ.சங்கம் (வ/து)

## பதவி வெற்றிடம்

**சங்கத்தின் அரிசியாலைக்கான உற்பத்தி முகாமையாளர் பதவியை நிரப்புவதற்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.**

சம்பளத்திட்டம்: 4750 - 6850
100x10 - 110x10
குறியீட்டு இலக்கம்: 115/10
வயதெல்லை: 18 - 45 இடையில்

தகுதிகள்: 01) கூட்டுறவுப் பணியாளர் 11 ஆம் சம்பளத் திட்டத்தில் அமைந்த இது தொடர்பான பதவியில் பெற்றுள்ள 3 வருட அனுபவம் அல்லது கூட்டுறவுப் பணியாளர் 12 ஆம் சம்பளத் திட்டத்திலமைந்த இது தொடர்பான பதவியில் பெற்றுள்ள 6 வருட அனுபவம்.

அல்லது

02) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் பெற்றுள்ள பட்டம் அல்லது சமனான தகுதி.

அல்லது

03) கூட்டுறவுப் பணியாளர் தராதரப்பத்திரம் உயர்தரம் சித்தி / க.பொ.த. உயர்தரம் 3 பாடங்களில் சித்தியுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக / கைத்தொழில் நிறுவனமொன்றில் இது தொடர்பான பதவியில் பெற்றுள்ள 4 வருட அனுபவம்.

வேறு கூட்டுறவுச் சங்கங்களில் பணியாற்றும் ஊழியர்களைப் பொறுத்த மட்டில் உயர் வயதெல்லை பொருந்தாது என்பதுடன், அத்தகைய விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பங்களை தமது சங்கத்தினூடாக அனுப்பிவைத்தல் வேண்டும்.

விண்ணப்பங்களை சங்கத்தினால் வழங்கப்படும் படிவத்தில் பூர்த்தி செய்து 10.11.2003 ஆம் திகதிக்கு முன்னர் *பொதுமுகாமையாளர், உடுப்பிட்டி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம், உடுப்பிட்டி* என்னும் முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

**பொதுமுகாமையாளர்.**

25.10.2003 (C/30775) (26-24-13-16)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

மலர்வு 13 - 06 - 1944



கண் நெகிழ 27 - 09 - 2003

### திருமதி புவனேஸ்வரி கனகரட்ணம்

*கண்ணாய் பார்த்த பிள்ளைகளையும்*
*கண்ணீரில் கலங்க வைத்து*
*பார்த்திடுவோம் உயிருடன் என*
*பாசமாய் ஓடிவந்த பிள்ளைகளை*
*ஏங்க வைத்து ஏனம்மா*
*நீ பிரிந்து சென்று விட்டாய்?*
*உன் ஆத்ம சாந்திக்காக இறைவனை இறைஞ்சுகின்றோம்.*
*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

(24085) (25-24-13-16)

இன்று (27.10.2003) திங்கட்கிழமை நடைபெறுகின்ற அந்தியேட்டி, வீட்டுக்கிருத்தியத்தில் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

பிரிவால் துயருறும்:
*நீர்வேலி வடக்கு,* **தாய், கணவர், பிள்ளைகள்,**
*நீர்வேலி.* **சகோதரர்கள், மருமகன், பேர்த்தி.**

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

தோற்றம் 17 - 12 - 1922



மறைவு 27 - 09 - 2003

### திருமதி தில்லைநாதன் செல்லம்மா

*காலத்தால் அழியாத கருணைகாட்டி வாழ்வித்தாய்*
*ஞாலந்தான் மறையினும் உன் நினைவு அழியுமோ*
*சீலமாய் திருவாய் போதித்தாய் அம்மா நின்றிடுவோம்*
*சூலந்தான் திருவடிக்கே நிலையாக நின்றிடுக தாயே!*

அன்னாரின் பிரிவால் நாம் துயருற்ற வேளையில் அனுதாபச் செய்திகளை அனுப்பியோருக்கும் பல்வேறு வழிகளில் உதவிபுரிந்து ஆறுதல் கூறியோருக்கும் இறுதிக்கிரியைகளில் கலந்துகொண்டோருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

இன்று (27.10.2003) திங்கட்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெறுகின்ற வீட்டுக்கிருத்தியத்திலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*இல. 07, சிவப்பிரகாசம் வீதி,* பிள்ளைகள்,
*வண்ணார்பண்ணை,* மருமக்கள்,
*யாழ்ப்பாணம்.* (சி-30783) (25-24-13-16) பேரப்பிள்ளைகள்.

## தையல் பயிற்சிக்கு விண்ணப்பிக்கலாம்

வலி.வடக்கு,ஒக்.27

நல்லூர் பிரதேச செயலாளர் பிரிவில் கிராம அபிவிருத்தித் திணைக்களத்தினால் நடத்தப்பட்டுவரும் தையல் பயிற்சி நெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

நல்லூர் பிரதேச செயலாளர் பிரிவில் வசிக்கும் ஜீ.சி.ஈ. சாதாரண தரம் வரை கல்வி கற்ற 18 இற்கும் 35 வயதிற்கும் இடைப்பட்டவர்கள் இப்பயிற்சிநெறிக்கு விண்ணப்பிக்க முடியும்.

பயிற்சிக் காலத்தின்போது பயிற்சி பெறுபவர்களுக்கு குறிப்பிட்ட தொகை உதவித் தொகையாக வழங்கப்படும்.

இப்பயிற்சிக்கு விண்ணப்பிக்க விரும்புவோர் அடுத்த மாதம் 15ஆம் திகதிக்கு முன்னர் கிராம அபிவிருத்தி உத்தியோகத்தரை நேரில் அல்லது தபால் மூலம் தொடர்புகொள்ளும் படி வேண்டப்பட்டுள்ளனர். (ஓ-86)

## அழுக்கை....

(06ஆம் பக்கத் தொடர்ச்சி)

வித்தியாலயத்தில் இடம்பெற்ற சமூகக்கல்வி தின விழாவையொட்டி இவரால் ஒரு பிரமாண்டமான பூமிக் கோளம் ஒன்று அமைக்கப்பட்டது.

220 சென்ரிமீற்றர் உயரமும் 450 சென்ரிமீற்றர் சுற்றளவும் கொண்ட இப்பூமிக்கோளம் அனைவரது ஏகோபித்த பாராட்டுதல்களையும் பெற்றுக் கொண்டது.

இதேதுறைகளில் இன்னும் நிறைய சாதிக்கவேண்டும் என்று ஆவலாய் இருக்கும் இந்தக் கலைஞர் தனது ஆக்கப்பணிகளில் தந்தை மகேஷ், தாய் வேதநாயகி ஆகியோர் வழங்கிய ஒத்துழைப்பையும் உற்சாகத்தையும் நன்றியோடு நினைவு கூருகின்றார்.

இவர்களுடன் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியின் தற்போதைய அதிபர் என்.ஏ.விமலேந்திரனின் பங்களிப்பையும் குறிப்பிடமுடியும் என்கிறார்.

இத்தகைய அரிய கலைகளை சமூகத்தில் பாதுகாக்கவும் வளர்க்கவும் தன்னாலான பங்களிப்புக்களை தொடர்ந்தும் வழங்குவேன் என்று ஊறுதியாக கூறிகின்றார்.

தான் செதுக்குகின்ற சவர்க்காரச் சிற்பங்களை விற்பனை செய்யத் தொடங்கியதும் அவற்றைப் போல மேலும் ஏராளமான சிற்பங்களை உருவாக்குகின்ற ஆவல் பெருகும் என்று கூறியிருக்கின்ற இவர் அதற்கு முன்னர் யாழ்ப்பாணத்தில் தனது சிற்பங்களை வைத்து கண்காட்சி ஒன்றை நடத்துவதற்கு ஆவலாக இருப்பதாகவும் கூறுகிறார்.

அதற்கான சந்தர்ப்பம் கிடைக்கவில்லையே என்று அவர் உள்ளூர ஆதங்கப்படுவதையும் உணரமுடிந்தது.

இன்று சித்திரம், சிற்பம் போன்ற கலைகள் பல்கலைக்கழக மட்டங்களில் பட்டப்படிப்புக்குரிய பாடநெறிகளாக சேர்த்துக்கொள்ளப்பட்டிருக்கின்ற வேளையில இவரது கலைப் படைப்புக்களைக் காட்சிப்படுத்துவதன் மூலம் அவரின் காலத்திறமைகளை ஏனைய மாணவர்கள் பெற்றுக் கொள்வதற்கு வழிசமைக்க வேண்டியது யாழ். பல்கலைக்கழகத்தில் உள்ள துறைசார் பெரியவர்களது இன்றியமையாத பணியாகும்.

அத்துடன் இந்தியா போன்ற நாடுகளில் இத்தகு கலைகளுக்கும் கலைஞர்களுக்கும் அரசு மற்றும் பல்கலைக்கழகங்கள் என்பன கொடுக்கின்ற முக்கியத்துவத்தினையும் இங்கு சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

எனவே, இவர்போன்ற இலை மறை காயாக இருக்கும் கலைஞர்களை இனங்கண்டு அவர்களுக்கு உரிய வசதி வாய்ப்புக்களையும், ஒத்துழைப்புக்களையும் வழங்கி கலைகளை வளர்க்கவேண்டும் என்று சம்பந்தப்பட்ட தரப்புகளிடம் அன்பாக வேண்டுகோள் விடுக்கின்றோம்.

### விற்பனையாளர்கள் தேவை

**புடைவை வியாபாரத்தில் அனுபவமுள்ளவர்களும், பழகவிரும்புபவர்களும் தேவை.**

*தொடர்பு:*
**த.குமாரசாமி ரெக்ஸ்ரைல்ஸ்**
44,42, பெரியகடை வீதி,
யாழ்ப்பாணம். (24072)

### விற்பனையாளர்கள் தேவை

**கண்ணாடி வியாபாரத்தில் அனுபவமுள்ளவர்களும், பழக விரும்புபவர்களும் தேவை.**

*தொடர்பு:*
த.குமாரசாமி அன் சன்ஸ்
218/1, கே.கே.எஸ். வீதி,
யாழ்ப்பாணம். (24071)

## நாட்டுக்கூத்து, இசை நாடக, கிராமிய கலைகளுக்கான போட்டி - 2003

(பாரம்பரியக் கலைகள் மேம்பாட்டுக் கழகத்தின் 10 ஆவது ஆண்டு நிறைவை ஒட்டியது)

1. கூத்து, இசை நாடகப் போட்டி (1 மணித்தியாலம்)

தென்மோடிக்கூத்து/தென்மோடி தவிர்ந்த ஏனைய வகைக் கூத்துகள்/சிந்து நடைக்கூத்து/இசை நாடகம்.

பரிசுத்திட்டம். ஒவ்வொரு வகைக்கும் தனித்தனியே பின்வருமாறு பரிசுகள் வழங்கப்படும்.

முதலாவது பரிசு ரூபா 5000. 2ஆவது பரிசு 3000. 3ஆவது பரிசு ரூபா 2000. ஆறுதல் பரிசுகள் 2. தலா ரூபா 1500 வீதம்.

நான்கு வகைப் போட்டிகளுக்கான முதலாம் பரிசுகள் வேலணை சேர் வைத்திலிங்கம் துரைச்சாமி ம.ம. வித்தியாலய முன்னாள் அதிபர் அமரர் ரி.கேதாரநாதன் நினைவாக வழங்கப்படுகின்றது.

2. கிராமியக் கலைவடிவங்களுக்கான போட்டி (9-12 நிமிடங்கள்).

கிராமிய நடனம் (கும்மி கோலாட்டம் உட்பட)/ஒயிலாட்டம்/மயிலாட்டம்/குதிரையாட்டம்/கரகம்/காவடி/கிராமியப்பாடல் (தனி)/கிராமியப்பாடல் (குழு)/வில்லுப்பாட்டு (30 நிமிடங்கள். 30 வயதுக்குட்பட்டவர்களுக்கு மட்டும்)

முதலாவது பரிசு ரூபா 2000. 2ஆவது பரிசு 1000. 3ஆவது பரிசு 750.

3. வாத்தியப்போட்டி (10 நிமிடங்கள்)

ஆர்மோனியம் / உடுக்கு

முதலாவது பரிசு ரூபா 2000. 2ஆவது பரிசு ரூபா 1000. 3ஆவது பரிசு ரூபா 750.

▲ **இவற்றுக்கான பரிசுகள் பாரம்பரியகலை ஆர்வலர்களினால் வழங்கப்படுகின்றன.**

**பொதுவிதிகள்:**


1. இலங்கையில் எப்பாகத்திலிருந்தும் போட்டியில் கலந்து கொள்ளலாம்.
2. போட்டியில் ஆகக் குறைந்தது 50 புள்ளிகளைப் பெற்றுக்கொள்ளும் நிகழ்வுகளே பரிசுக்குரிய அடிப்படைத் தகைமையைப் பெறும்.
3. விண்ணப்பங்கள் அனுப்பப்படவேண்டிய இறுதித்திகதி 15.11.2003.
4. விண்ணப்பப்படிவங்களை பூபாலசிங்கம் புத்தகசாலை, இல.4, ஆஸ்பத்திரி வீதியில் பெற்று அதிலேயே விண்ணப்பிக்கவேண்டும்.
5. போட்டிகள் யாவும் மார்கழி மாத நிறைவுப் பகுதி அல்லது தை மாத முற்பகுதியில் நடத்தப்பெறும்.
6. வில்லுப்பாட்டு, வாத்திய நிகழ்வுகளைத் தவிர ஏனையவற்றிற்கு வயதுக்கட்டுப்பாடு இல்லை.
7. மேலதிக விவரங்களை விண்ணப்பபத்திரத்துடன் பெற்றுக்கொள்ளலாம்.
8. நடுவர்களின் தீர்ப்பே இறுதியானது.

**கலாபூசணம் செ.மெற்றாஸ்மயில்**
செயலாளர், பாரம்பரிய கலைகள் மேம்பாட்டுக் கழகம்.
12/1, மூர்த்தவிநாயகர் ஒழுங்கை.
கச்சேரி நல்லூர் றோட், யாழ்ப்பாணம்.
(மேற்படி விலாசத்திற்கு விண்ணப்பங்களை அனுப்பிவைக்கவும்)

(24084) (24-24-13-16)

## முதலாம் ஆண்டு நினைவுகளில்...

தோற்றம் 17 - 09 - 1942



மறைவு 10 - 11 - 2002

### பொன்னுத்துரை நடராசா (வவா)

திதி: 27-10-2003

*ஓராண்டு என்ன? ஓராயிரம் ஆண்டுகள் சென்றாலும்*
*எமது நெஞ்சில் அழியாது உங்கள் நினைவு.*

*மானிப்பாய் வீதி,*
*தாவடி,*
*கொக்குவில்.* (24088) (26-24-13-16)

என்றும் உன் நினைவோடு வாழும்:
**குடும்பத்தினர்.**

## ஆறாம் ஆண்டில் நெஞ்சம் சுமக்கும் நினைவுகள்

மலர்வு 13 - 04 - 1935



உதிர்வு 02 - 11 - 1997

### திருமதி தர்மராசா கனகாம்பிகை

திதி: துதியை 27.10.2003

குடும்பத்தின் குலவிளக்காய்!
பாசத்தின் திருவுருவாய்த் திகழ்ந்த
எம் அன்புத் தாயே!
உங்கள் நினைவுகள் காலங்கள்
நகர்வதால் மறந்திடல் இல்லை
என்றும் பசுமையாய் எம்
நெஞ்சம் சுமக்கும் நினைவுகளாகும்.

(24086) (26-24-13-16)

*பிளாக் வீதி,*
*சுங்கானை.*

உங்களையே நிதம் தேடும்:
**கணவர், பிள்ளைகள்.**

# சின்னஞ்சிறு விளம்பரம்

## தவறிவிட்டது

இமையாணன், உடுப்பிட்டியைச் சேர்ந்த திருப்பரங்கிரிநாதன் செந்தில் நாதன் என்பவருடைய தொழில் அ.அட்டையும், சாரதி அனுமதி அ. அட்டையும் (இல.A-007024043) யாழ். நகருக்கும் உடுப்பிட்டிக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் 478, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும். அல்லது 0777-245623, 0712-355330. (C/30785)

மோட்டார் சைக்கிள் ஆவணங்கள, புத்தகங்கள், உடுப்புகள் என்பன அடங்கிய கறுப்பு நிற பாக் (Bag) 26.10.2003 இல் கைதடிக்கும் முத்திரைச் சந்திக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்க் காணும் முகவரியில் ஒப்படைத்துதவவும். ச.தேவசகாயம், 39/6, மூத்த விநாயகர் வீதி, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம். 077-6080859.(24090)

காயா வீதி, சங்கானை மேற்கு, பண்டத்தரிப்பைச் சேர்ந்த சண்முகராசா நாகராணி என்பவருடைய தே.அ. அ. (இல.586560883V), விசேட அ.அ. என்பன கைப்பையுடன் யாழ். முனியப்பர் வீதியில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் மேலுள்ள முகவரியுடன் தொடர்புகொள்ளவும்.(24083)

புனித செபஸ்ரியார் கோவிலடி, மாதகலைச் சேர்ந்த மனுவேற்பிள்ளை அமலதாஸ் என்பவருடைய தே.அ. அட்டை (இல.803003440V), வி.அ. அட்டை, சிறுதொகைப் பணம் என்பன தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் மேலுள்ள முகவரியுடன் தொடர்பு கொள்ளவும். (24081)

## சாரதி தேவை

கொழும்பிலே சொந்த பாவனையில் உள்ள வான் ஒன்றிற்கு சாரதி தேவை. தங்குமிட வசதிகள் - உணவு வசதிகள் செய்து தரப்படும்.

தொடர்புகள்: தொ.பே.இல.
0777-323192.
(C/30787)

## திருமண சேவை

கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1961 பிறந்த (Teacher) மணமகளுக்கு சைவ போசன மணமகனும் மற்றும் 1972 (ரெயினிங் மாஸ்டர்), 1970 (சாட்டர் எக்கவுண்டன் குவைத்), 1972 (கொம்பியூட்டர் லெக்சரர்) மணமகன்களுக்கு அழகிய பெண்கள் தேவை. கிருஷ்ணா திருமண சேவை, செங்குந்த வீதி, திருநெல்வேலி கிழக்கு, யாழ்ப்பாணம்.

(24082)

## கோழிக்குஞ்சு விநியோகம்

தரமான Prima Broiler குஞ்சுகள், அதிவிசேட Prima பேட்டுக்குஞ்சுகள் 27.10.03 பிற்பகல் விநியோகிக்கப்படும். முன்கூட்டி பதிவு செய்யவும். அத்துடன், ஒரு கிழமை குஞ்சுகளும் விற்பனைக்குண்டு. (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு), 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர்.

(24060)

## கார் விற்பனைக்கு

மொறிஸ் மைனர் 2 சிறி (1000 மொடல்) நல்ல வளத்துடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: 219/06, கடேசுவாமி லேன், நாவலர் வீதி, யாழ். 0777 - 942631.

(24077)

## விற்பனைக்கு

நல்ல நிலையில், சொந்தப் பாவிப்பில் உள்ள 9ஸ்ரீ மொறிஸ் மைனர் கார் விற்பனைக்குண்டு.

தொடர்பு:
K.R.R. தொலைத் தொடர்பு சேவை
உடுவில்.
0602-212674.
(24095) (34-24-11-18)

## கைதடி ஆஸ்பத்திரிக்கு மருந்துக்கலவையாளர்

சண்டிலிப்பாய்,ஒக்.27

கைதடி அரசினர் வைத்தியசாலையில் நிலவிவந்த மருந்துக் கலவையாளர் பதவிக்கான வெற்றிடம் யாழ். சுகாதார திணைக்களத்தினால் நிரப்பப்பட்டுள்ளது.

பதவியிலிருந்து ஓய்வுபெற்று மீள் நியமனம்பெற்ற மருந்துக்கலவையாளரான இ.தவராசலிங்கம் இவ்வெற்றிடத்திற்கு யாழ். சுகாதார சேவைப் பணிப்பாளரினால் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

(எ-135)

## விவரம் அனுப்ப கோரிக்கை

வலிகாமம்,ஒக்.27

ஊனமுற்றோருக்கான சர்வதேச தினக கொண்டாட்டங்களின் போது பங்குபற்றக் கூடிய தரமான நிகழ்ச்சிகளைப் பற்றிய விவரங்களை இம் மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பிவைக்குமாறு வடக்கு - கிழக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் எஸ்.மகாலிங்கம் வலயக் கல்விப் பணிப்பாளர்களைக் கேட்டுள்ளார்.

ஊனமுற்றோருக்கான சர்வதேச தினக் கொண்டாட்டம் டிசெம்பர் மாதம் 3 ஆம் திகதி தேசிய மட்டத்தில் கோலை சாந்த யோகம் மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் நாடகம், இசை, பாவனை நடிப்பு, நடனம் போன்ற பல்வேறு நிகழ்ச்சிகள் இடம்பெறவுள்ளன. (எ-152)

## 4 ஆம் ஆண்டு நீங்கா நினைவுகளில்...

தோற்றம் 11 - 06 - 1936



மறைவு 09 - 11 - 1999

### அமரர் பழனிப்பிள்ளை இராசமாணிக்கம்

திதி: 27.10.2003

அன்பின் ஒளிவிளக்காய்
பாசத்தின் உறைவிடமாய்
எமையெல்லாம் ஒளிரவைத்த
உயிரினும் மேலான அப்பாவே!
நீவிர் எமைப்பிரிந்த நாள்முதலாய்
நீந்துகிறோம் துயரில் மூழ்கி
உமை எண்ணி நெடுநாளாய்
உறங்காத நினைவலையின்
நான்காம் ஆண்டுகள் தன்னில்
உம் ஆத்மா எமை நாட
இறைஞ்சுகிறோம் இறையவனை.

"குற்றாலம்"
நக்கீரன் வீதி,
அல்வாய் வடக்கு, அல்வாய்.

பிரிவின் துயர் சுமக்கும்:
- குடும்பத்தினர்.

(24091) (25-24-11-18)

யேசு மரி சூசை துணை

மங்களகரமான

## புதுக்கடைத் திறப்புவிழா அழைப்பு

எல்லாம்வல்ல இறைவன் திருவருளால் நிகழும் மங்களகரமான 2003 ஆம் வருடம் ஐப்பசித் திங்கள் 10 ஆம் நாள் (27.10.2003) திங்கட்கிழமை முற்பகல் 9.50 - 11.45 வரை உள்ள சுபவேளையில்,

### இமேஜ் ஆட் சென்றம்
### IMAGE ART CENTRUM

என்னும் பெயரில் தரமான ஓவிய ஊடகங்கள், கலைப்படைப்புகள், ஓவியங்கள், பாடசாலை உபகரணங்களுடன் புதுக்கடையொன்றைத் திறக்கவிருக்கின்றோம். அவ்விழாவில் அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவரும் கலந்து சிறப்பிக்கும்வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

தங்கள் நல்வரவை நாடும்:

"கிருபா பில்டிங்"
கே.கே.எஸ். வீதி,
கோண்டாவில். (24093) (24-11-19)

ஆ.தீபன் திலீசன்
சி.பி.ம.ஆரோக்கியநாதன்.

## வாழ்த்துகிறோம்



எமது பட்டப்பின் கல்விக்கான ஆசான்களில் ஒருவராக விளங்கிய
**திரு. த.கலாமணி அவர்கள்**
(விரிவுரையாளர், யாழ். பல்கலைக்கழகம்)
ஆஸ்திரேலியாவின் "வூலோங்கொங்" பல்கலைக்கழகத்தின் கலாநிதிப் பட்டம் பெற்றமையையிட்டு வாழ்த்துகிறோம்.

யா/ஸ்ரீ சோமாஸ்கந்தக் கல்லூரி,
புத்தூர்.
(24034) (34-24-11-18)
அதிபர், ஆசிரியர்கள்.

## வட கிழக்குத் தொழில்நுட்பம்

34, சட்டநாதர் வீதி, நல்லூர்.
தொலைபேசி - 021-2223786


எம்மிடம் PI,PII,PIII,PIV வகையான கணனிகள் 13,500/= இலிருந்து 45,500/= வரையிலான விலைகளில் உண்டு.
சொற்ப எண்ணிக்கையான கணனிகளே கையிருப்பில் உள்ளதால் இவ்வாய்ப்பைத் தவறவிடாதீர்கள்.

INTERNET BROWSING மணித்தியாலத்திற்கு 50/= மட்டுமே!
Net 2Phone 10/= per minute.

(C/30784) (34-24-11-18)

## திருமண வாழ்த்து

அகிலன் கீதா



*கம்பர்மலை வித்தியாலயம் - பெற்ற*
*காவிய நாயகனாம் அகிலன் - இன்று*
*இல்லறம் புகுந்து கீதாவுடன் - என்றும்*
*நல்லறம் கண்டு வாழிய - நீடூழி.*

பழைய மாணவர் சங்கம்
யா/கம்பர்மலை அ.த.க.பா.,
கொம்மந்தறை,
வல்வெட்டித்துறை.
கிளை:- ஐக்கிய இராச்சியம்.

(C/30786) (26-24-11-18)

## 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 23 - 10 - 1977



மறைவு 17 - 11 - 2001

அமரர்

### சிவஞானசுந்தரம் சிவதீஸ்வரன் (சிவா)

அழுதவிழி காயவில்லை ஆண்டுகள் இரண்டாகியதோ?
மாயவாழ்வு இதுவெனக்காட்டி ஒரு நொடியில்
மறைந்தீரோ அண்ணா?

*மிருசுவில் வடக்கு,*
*மிருசுவில்.*
(24097) (25-24-11-18)

*உங்கள் நினைவில் வாடித் துடிக்கும்:*
சிவஞானம் குடும்பத்தினர்.

# நுண்ணறிவுமிக்கோரை தெரிவுசெய்ய கைகொடுக்கும் மூன்று வழிமுறைகள்

'IQ' என்று அறியப்படும் நுண்ணறிவினை மதிப்பிடும் சோதனை அனைவருக்கும் தெரிந்த ஒன்றுதான். ஆனால், நவீன யுகத்தில் நுண்ணறிவை மதிப்பிட அறிமுகமாகியுள்ள வேறு சிலவழிகள் குறித்து இந்த ஆக்கம் விவரிக்கின்றது.

**20ஆம்** நூற்றாண்டின் ஆரம்பத்தில் அல்பிறட் பினே (Alfred Binet) என்பவரும் தியோடர் சைமன் (Theodore Simon) என்பவரும் இணைந்து மனிதனது நுண்ணறிவினை அளவிடும் முறையினை வடிவமைத்தார்கள். நுண்ணறிவில் பின்தங்கிய பிள்ளைகளின் (retarded children) தர நிலையை (Grade Level) ஒழுங்குபடுத்தும் நோக்குடனே பினே நுண்மதி அளவீட்டு நுட்பத்தினை ஆரம்பத்தில் அறிமுகப்படுத்தினார். மனிதனின் நுண்மதியினை சோதனைகள் மூலம் அளவிடும் முறை இதிலிருந்து ஆரம்பமாகியது. இம்முறையினை மேலும் சிறப்பாக்கும் விதத்தில் பினேயினை பின்பற்றி லூயிஸ் டேமன், பேராசிரியர் ஸ்டியமன், வைஸ்மன் போன்ற பல உளவியலாளர்களும் ஐ.கியூ.(I.Q.)சோதனைகளில் பல ஆய்வுகளை வெளியிட்டு அதனை முன்னேற்றினர். இதனைத் தொடர்ந்து அறிவுத்திறனை அளவிடும் முறையாக நுண்மதிச் சோதனைகள் உலகெங்கும் பிரபல்யம் அடையத் தொடங்கின.

பிரெஞ்சு உளவியலாளரான பினேயால் ஆரம்பிக்கப்பட்ட நுண்மதியினை (I.Q.) அளவிடும் முறை அறிமுகம் செய்யப்பட்ட பின்னர், வேலை கொள்வோராலும் நிறுவனங்களினாலும், பல்கலைக்கழகங்களினாலும், அரசாங்கத்தினாலும் நுண்மதியுடையோரை தெரிவு செய்வதற்கு அளவுகோலாக நுண்மதிச் சோதனைகள் (I.Q. Test) நடத்தப்படலாயின. பல நாடுகளில் நுண்மதிச் சோதனைகள் நிர்வாகத்துறையில் ஓர் அதிகார வர்க்கத்தினரை (Bureaucrats) உருவாக்கியுள்ளன.

ஒருவரின் நுண்ணறிவு அல்லது உள ஆற்றல் அல்லது நுண்மதி ஈவு எத்தகைய பெயரில் இது அழைக்கப்பட்டாலும் நுண்மதிச் சோதனைகளில் தோல்வி அடைபவர்கள் அல்லது தெரிவுசெய்யப்படாதோர் அறிவாற்றல் அற்றவர்கள் என்றோ அல்லது நுண்ணறிவு அற்றவர்கள் என்றோ கருதமுடியாது என்ற எதிர்வாதம் எண்பதுகளில் மெல்ல மெல்ல முகிழலாயிற்று. I.Q. சோதனைகளில் தோல்வியடைந்தவர்களிடம் வேறு பல திறமைகள், நுண்மதிகள் இருப்பதாக உளவியலாளர்கள் ஆய்வுகளின் மூலம் வெளிக்கொணர்ந்தனர்.

1983இல் ஹாவாட் பல்கலைக்கழகத்தினை சேர்ந்த உளவியலாளரான டாக்டர் எச்காட்னர் என்பவரால் நுண்மதியினை அளவிட I.Q. சோதனைகள் மட்டும் போதியனவல்ல என்ற கோட்பாடு வலுவாக முன்வைக்கப்பட்டது. 1983இல் டாக்டர் காட்னர் Frames of mind என்னும் தனது நூலில் மேற்கூறிய வாதத்தினை முன்வைத்தார். நுண்மதியாளர்களை தெரிவுசெய்வதில் I.Q. சோதனைகளின் தகுதியின்மைகளை இந்நூலில் காட்னர் சாடினார். வாழ்க்கையின் வெற்றிக்கு ஒரேஒரு தகுதியான I.Q. சோதனைகள போதியனவல்ல. ஒருவரின் நுண்மதியானது பல் பரிமாணங்களினூடாக அளவிடப்படவேண்டும் என்று அவர் வலியுறுத்தினார்.

I.Q. சோதனைகளில் வெற்றியடைபவர்களுக்கு அச்சோதனைகளில் இருந்து ஒரு செய்தி மட்டுமே கிடைக்கின்றது. அதாவது சோதனைகளில் வெற்றியடைபவர்களில் அவர்களும் ஒருவர் என்பதே அச்செய்தியாகும்.

காட்னர் இதற்காக வேறு வகையான அளவீட்டு நுட்பங்களைக் கையாளவேண்டும் எனக் கூறினார். இதற்கான முன்னோடி செயற்பாடாக அவர் திரிசியத் திட்டம் (Project Spectrum) என்ற ஒரு செயற்றிட்டத்தினை நடைமுறைப்படுத்தினார். வானவில்லில் காணப்படும் ஏழு நிறங்களையும் ஒரு முழு வடிவில் பார்ப்பது போல் மனிதனிடத்தில் பொதிந்துள்ள பல்வேறு நுண்மதிகளை அளவிடுவதற்கான புதிய அளவுகோல்களை (Yard Stick) பயன்படுத்தவே இத்திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது.

காட்னர் 7 விதமான நுண்மதிக் கூறுகளை அடையாளம் காட்டினார். நுண்மதியுடையோரை தெரிவு செய்வதில் இந்த 7 கூறுகளும் செல்வாக்குச் செலுத்தக்கூடியவை என அவர் சுட்டிக்காட்டினார். காட்னரால் முன்வைக்கப்பட்ட 7 வகையான நுண்மதிகள் பின்வருமாறு.

மொழிசார்ந்த நுண்ணறிவு (Linguistic Intelligence)

நியாயிக்கும் ஆற்றல் (logical-Mathematical Intelligence)

வெளிபற்றிய நுண்ணறி (Visual - Spatial)

இசைபற்றிய நுண்ணறி (Musical Intelligence)

அழகியல் பற்றிய நுண்ணறி (Aesthetic Intelligence)

சுய ஆற்றல் (Extra Personal Intelligence)

இடைவினை நுண்மதி (Inter Personal Intelligence)

காட்னர் ஏழுவகையான நுண்ணறிவு பற்றி கூறினாலும், இந்த ஏழும்தான் நுண்ணறிவினை தீர்மானிப்பவை என்ற எண்ணத்தினை அவர் கொண்டிருக்கவில்லை. அதாவது நுண்ணறிவினை இந்த ஏழுக்குள் மட்டுப்படுததவில்லை.

காட்னர் தனது வாதத்தை முன்வைத்து ஏறக்குறைய பத்து வருடங்களின் பின்னர் ஒருவரின் நுண்மதியினை அளவிட பல்வகைத்தன்மை கொண்ட நுண்மதி அளவீட்டு முறைகள் அவசியம் எனப் பல உளவியலாளர்களின் ஆய்வுகளில் வெளிப்படலாயிற்று. அதாவது நுண்ணறிவினை அளவிட பல்வகைத்தன்மை கொண்ட அகல்விரி அணுகுமுறை அவசியம் எனப் பல உளவியலாளர்கள் கூற முற்படலாயினர்.

காட்னரால் கூறப்பட்ட இடைவி



னைத் தேர்ச்சி (தொடர்பாடல் சார்ந்தது) (Inter Person a Intelligence) மற்றவர்களுடன் தொடர்புகொள்வதற்கான தேர்ச்சியினைக் (Competency) குறிக்கும் மற்றவர்களைப் புரிவதற்கான ஆற்றலாகும். உடன்பாடான கருத்துப்பரிமாற்றம், ஜனநாயக கலந்துரையாடல் ஏனையோரினதும் தனதும் கருத்துக்களுக்கு மதிப்பளித்தல், விட்டுக்கொடுத்தல் என்பனவற்றுடன், மற்றவர்கள் எப்படி வேலை செய்கிறார்கள்? அவர்களை எது ஊக்குவிக்கிறது? எப்படி கூட்டுறவுடன் வேலை செய்வது? என்பது பற்றி தனதும் ஏனையோரதும் விடயங்களில் அக்கறைகொள்ளல் போன்றவை இடைவினை நுண்மதி எனக் கூறினார் காட்னர். நுண்மதிச் சோதனைகளில் அல்லாது இன்று நமது சமூகத்தில் வெற்றி அடைந்தவர்களாக வாழும் வெற்றி பெற்ற வர்த்தகர்கள், ஆசிரியர்கள், அரசியல்வாதிகள், வைத்தியர்கள், சமயச்சான்றோர் போன்றோர் இடத்தில் இந்த இடைவினை நுண்மதி அதிகளவில் இருப்பதாகக் கூறலாம்.

மேலும் இடைவினை நுண்மதியானது சந்தர்ப்பங்களுக்கும் களநிலைமைகளுக்கும் ஏற்ப நடந்துகொள்ளும் திறமைகளையும் குறிக்கும்.

இதுபோலவே காட்னர் கூறிய சுய ஆற்றல் (Extra Personal Intelligence) நுண்ணறிவில் ஒருவரின் சுய அறிவு (Self Knowledge) தன்னைப் பற்றிய விளக்கம், உணர்திறன், தன்மதிப்பு, மற்றவர்களுக்கு வழிகாட்டக்கூடிய நடத்தைகள் போன்ற பல பண்புக கூறுகளைக் கொண்டதாகவும் காணப்படுகின்றது. வாழ்க்கையின் வெற்றியாளர்களை அதாவது நுண்ணறிவாளர்களைத் தெரிவுசெய்ய வேண்டுமெனில் மேலே கூறிய நுண்மதிகளைக் கொண்டவர்களைத்தான் தெரிவுசெய்ய வேண்டுமேயொழிய I.Q. சோதனைகளில் வெற்றியடைபவர்களை அல்ல என்பது உளவியலாளர்களின் கருத்தாகும்.

காட்னரின் அகல்விரி வகை கொண்ட நுண்மதி அளவீட்டு கோட்பாடுகள் வெளிவந்த பின்னர் மரபுரீதியான I.Q. சோதனைகள் மூலம் நுண்மதியாளர்களை தெரிவுசெய்யும் முறையானது கேள்விக்குரியதாக்கப்பட்டது. I.Q. சோதனைகளில் வெற்றி பெற்றவர்கள் வாழ்க்கையில் வெற்றி பெறுவதினை அவை உறுதிப்படுத்தவில்லை நுண்மதிச் சோதனைகளில் வெற்றி பெற்றவர்கள் வாழ்க்கையில் தோல்வி அடைந்துள்ளதனைக் காண முடிந்துள்ளது.

காட்னரின் கோட்பாடுகளையும் உளவியல் கருத்துக்களையும் உள்வாங்கிக் கொண்ட உளவியலாளரான டானியல் கோல்மென் (Daniel Coleman) என்பவர் 1990களின் நடுப்பகுதியில் நுண்மதியினை அளவிடுவதற்கு 'ஈ.கியூ'(E.Q.)(Emotional Intelligence) தனது கோட்பாட்டினை முன்வைத்தார்.


ஏ.சி.ஜோர்ஜ்
யாழ். வலயக் கல்வி அலுவலகம்


E.Q. எனப்படும் மனவெழுச்சி நுண்மதியானது மனவெழுச்சிகளை பிரயோகிக்கும், கட்டுப்படுத்தும் விழிப்புணர்வினை விளக்குகின்றது. ஒத்துணர்வு (Empathy), இரக்கம் (Compassion), ஊக்கல் (Motivation) என்ற மனவெழுச்சிசார் விடயங்களில் கள நிலைமைகளுக்கும் சந்தர்ப்பங்களுக்கும் ஏற்ற விதத்தில் அவற்றினைப் பிரயோகிக்கும், வெளிப்படுத்தும் ஆற்றல்கள் உள்ளனவா என E.Q. மூலம் சோதனை செய்யமுடியும். மனவெழுச்சியினை வேதனையான நிலைமைகளிலும் மிக மகிழ்ச்சியான நிலைமைகளிலும் பிரயோகிக்கும் திறன் இன்று அவசியமானதாகும்.

ஒருவருக்கு எதிர்பாராத இடையூறுகள், தடைகள் (Obstacles) ஏற்படும்போதும் சவால்களுக்கு முகம் கொடுக்கவும் அவற்றை எதிர்கொள்ளும்போது நடத்தைகளை மாற்றியமைக்கவும், ஒழுங்குபடுத்தவும் அவரிடம் அறிவு இருக்கவேண்டும். இவ்வறிவினை அல்லது நுண்ணறிவினை கோல்மென் E.Q. மூலம் அளவிட முனைந்தார்.

இன்று மக்கள் வேலை செய்யும் இடங்கள் மிகவும் மாற்றத்திற்குள்ளாகியுள்ளன. தொழில் நிறுவனங்களின் உயர்வு தாழ்வுப பிரச்சினைகள், உறவு முறைகள் என்பன முன்னரிலும் வேறானதாக மாறியுள்ளன. நீங்கள் எவ்வளவு சுறுசுறுப்பானவர் எனபது இன்று முக்கியமல்ல. அல்லது உங்களுக்குத் தரப்பட்ட வேலைப் பயிற்சியும் உங்கள் அனுபவமும் முக்கியமானது அல்ல. நீங்கள் எவ்வாறு உங்களை மற்றவர்களுடன் இடைவினை கொண்டு நடத்துகின்றீர்கள் என்பதுதான் இன்றைய முக்கிய தேவையாகும்(How will we handle each other our selves). எனவே வாழ்க்கையின் உண்மையான வெற்றியாளர்களைத் தெரிவுசெய்ய வேண்டுமாயின் மனவெழுச்சி நுண்ணறிவு சோதனை அவசியம் எனக் கோல்மன் கூறினார்.

கோல்மனால் பிரபல்யப்படுத்தப்பட்ட E.Q. கோட்பாடு இன்று நுண்மதியாளர்களை தெரிவுசெய்வதில் பிரயோகிக்கப்பட்டு வருகின்றது. நிறுவனங்களிலும், வேலைத்தளங்களிலும், பரீட்சைகளிலும், கருத்தரங்குகளிலும் செயலமர்வுகளிலும், கண்காணிப்பு முறைகளிலும் மனவெழுச்சி நுண்ணறிவு (E.Q.)பற்றிய கோட்பாடுகள் பிரபல்யமடைந்து வருகின்றன. கோல்மனின் கருத்துப்படி I.Q. சோதனைகளில் 'லெவ்ஜ்' வயதினரையே வளர்த்தெடுக்க முடியும். ஆனால்



E.Q. அப்படியல்ல. வாழ்வின் புல படிகளில் கற்கவும் பயிற்சிபெறவும் முடியும். எனவே நுண்ணறிவாளர்களாக இருப்பதற்கு E.Qவும் அவசியம்.

21ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் I.Q., E.Q. சோதனைகளுக்கு மேலாக நுண்ணறிவுடையோரை தெரிவுசெய்ய S.Q. (எஸ்கியூ) என்னும் பிறிதொரு கோட்பாடும் முன்மொழியப்படலாயிற்று. அதாவது நுண்ணறிவினை அளவிட மூன்றாவது Q ஒன்றும் எம் மத்தியில் முன்வைக்கப்படலாயிற்று.

S.Q. என்பது ஆத்மார்த்த நுண்ணறிவு (Spiritual Intelligence) ஆகும். இது ஒருவர் பிரச்சினைகளை விழுமியங்களின் அடிப்படையில் மிகவும் பரந்த கண்ணோட்டத்தில் அணுகும் திறனைக் குறிக்கும்.

எனவே, நுண்ணறிவுடையோர் விழுமியம் சார் நுண்ணறிவினையும் கொண்டு இருக்க வேண்டும். ஆத்மார்த்த நுண்ணறிவு பற்றிய கோட்பாடுகளை முன்வைத்த டனா சோகார் மற்றும் அவரது கணவர் அயன் மார்சல் ஆகியோர் S.Q. பற்றி பின்வருமாறு கூறுகின்றனர். 'ஒருவரிடம் நுண்மதி அறிவும் (I.Q.), மனவெழுச்சி நுண்ணறிவு (E.Q.) சிறப்பாகத் தொழிற்படுவதற்கு அவரிடம் ஆத்மார்த்த நுண்ணறிவு அடிப்படையாக அமைந்திருக்கவேண்டும்.

டனா சோகாரின் கருத்துப்படி ஆத்மார்த்த நுண்ணறிவு என்பது மதம் சார்ந்த அல்லது மத நம்பிக்கைகளுடன்கூடிய நுண்ணறிவினை விளக்கவில்லை. மனிதர்கள் வெற்றியுள்ள மனிதர்களாக வாழ, எல்லோரும் வெற்றி பெற்றவர்கள் என்பதற்கான தர்மம் சார்ந்த (Moral Sense) விழுமியங்களையும் நடத்தைகளையும் அது உள்ளடக்குகின்றது. இறுக்கமான விதிகளில் இருந்து யதார்தத நிலைமைகளில் விட்டுக் கொடுக்கக்கூடிய புரிதலுக்கும் பொறுத்தலுக்குமான (Tolerance) கூட்டுப்பண்புகளை அது குறிக்கும்.

டனா சோகாரது கணவரின் கருத்துபபடி S.Q. என்பது நல்லவை கெட்டவை எது என்பதற்கான தெரிவிற்கான நீதியான நுண்ணறிவினை குறிக்கும் என்பதாகும். சந்தர்ப்பங்களையும் கள நிலையையும் வேறுபடுததி இயங்க வைப்பதற்கான உள ஆற்றலை அது குறிக்கும். எனவே, நுண்மதியுடையோர் பற்றி விவாதங்களில் ஆத்மார்த்த நுண்ணறிவு உள்ளவரே குறித்த தொகுதியினுள் வரக்கூடியவர் என்பது அவரது வாதம்.

மேலும் I.Q. அல்லது E.Q. என்பன குறித்து ஒருவரிடம் காணப்படும் ஆற்றலை இவ்விரண்டையும் தனித்தனியாகவோ அல்லது இணைத்தோ நோக்குவதன் மூலம் மனிதனின் முழுமையான நுண்மதியினை அளவிடமுடியாது என்பதும் டனா சோகாரின் வாதமாகும்.மனித மனத்தின முழுமையை வெளிப்படுத்த இவற்றால் தனித்தோ இணைத்தோ முடியாது.எனவே நுண்ணறிவினை அளவிட S.Q. சோதனையும் நடத்தப்படவேண்டும்.

"வாழ்க்கையில் வெற்றியடைந்த மனிதர்களின் ஏழு பழக்க வழக்கங்கள்" என்னும் நூலை ஸ்டிபன் கொவே (Stephen Covey) என்பவர் எழுதினார். அந்நூலில் வாழ்க்கையில் வெற்றியடைந்த மனிதர்களின் பிரதான 7 பழக்க வழக்கங்களைப் பற்றிக் குறிப்பிடுகின்றார். அந்த 7 பழக்க வழக்கங்களில் நான்கு பற்றி டனா சோகாரும் அவரது கணவருமான அயன் மார்சலும் இணைந்து எழுதிய ஆத்மார்த்த நுண்ணறிவு பற்றிய நூலில் குறிப்பிடுகின்றனர். அதாவது வாழ்க்கையில் வெற்றியடைவதற்கு தேவையான மனித நுண்ணறிவுகளில் நான்கினை S.Q. கொண்டிருப்பது ஒருவரின் நுண்ணறிவினை தீர்மானிப்பதில் அதன் பங்கு மிக முக்கியமானது என்பது உறுதியாகிறது. டனா சோகார் குறிப்பிட்ட நான்கு மனித நுண்ணறிவுகள் சுய விளக்கம் (Self awareness), கற்பனைத்திறன் (Imagination), மனச்சாட்சி (Conscience), தனித்துவம் (Independent) என்பனவாகும்.

சுயவிளக்கம் என்பது E.Q. நுண்ணறிவினுள் அடங்கும். ஆனால் ஏனைய மூன்றும் S.Q. கோட்பாட்டினுள் அடங்கும்.

ஒருவர் தன் வாழ்க்கைப் பயணத்தில் நுண்ணறிவுடையோராக வெற்றி நடைபோட I.Q.,E.Q.,S.Q. என்ற நுண்ணறிவு அளவை முறைகளினூடாக பயணிக்கவேண்டும். இத்தகைய அளவைகளினூடாகத் தெரிவு செய்யப்படுபவர்களே நுண்ணறிவுடையோராகக் காணப்படுவது மட்டுமல்லாமல் அதிகார மமதையற்றவர்களாகவும், ஊழலற்றவர்களாகவும், வெளிப்படையாகத் தம்மை பிரதிபலிப்பவர்களாகவும், மிக நேர்மையானவர்களாகவும் பொறுப்புக்களை அக்கறையோடு ஏற்பவர்களாகவும், அறிவுசார் பொருளாதாரமொன்றில் (Knowledge Economy) வெற்றியாளர்களாகவும் திகழமுடியும்.

★




பருத்தித்துறை பிரதேச செயலகம் நடத்திய முதியோர், சிறுவர் தின விழாவில் முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ்.பல்கலைக்கழக வணிக, முகாமைத்துவ பீடாதிபதி மா.நடராஜசுந்தரம் உரையாற்றுவதைப் படத்தில் காணலாம். பிரதேச செயலர் ஆ.சிவசுவாமியும் படத்தில் காணப்படுகின்றார். *(படம்: வடமராட்சி செய்தியாளர்)*

# 'நட்சத்திர வீரர்' உதைபந்தாட்டம்; யூனியன் கல்லூரி சம்பியனாகியது

வலி.வடக்கு,ஒக்.27

ஸ்கந்தா விளையாட்டு அபிவிருததிச் சங்கத்தினால் நடத்தப்பட்ட நட்சத்திர வீரர்களின் உதைபந்தாட்டச சுற்றுப்போட்டியில் தெல்லிப்பழை யூனியன் கல்லூரி சம்பியனாகியது.

கந்தரோடை ஸ்கந்தவரோதய கல்லூரி மைதானத்தில், கல்லூரி அதிபர் க.சிவாஜி தலைமையில் இந்த இறுதிப் போட்டி அண்மையில இடம் பெற்றது.

இறுதி ஆட்டத்தில் தெல்லிப் பழை யூனியன் கல்லூரியும், கந்தரோடை ஸ்கந்தவரோதயக் கல்லூரியும் மோதிக் கொண்டன.

போட்டிகள் ஆரம்பமாகிய நேரம் முதல் இரு அணிகளும் மிகவும் விறு விறுப்பாக விளையாடின.

போட்டி ஆரம்பமாகி பதினோராவது நிமிட நேரத்தில் யூனியன் கல்லூரி அணியினர் தமது திறமையினால் முதலாவது கோலைப் பெற்று முன்னணிக்கு வந்தனர்.

ஸ்கந்தவரோதய அணியினர் கிடைத்த வாய்ப்பை பயன்படுத்த முதல் பாதி ஆட்டத்தில் தவறி விட்டனர். இதனால், முதல்பாதி ஆட்டத்தில் யூனியன் கல்லூரி 1 இற்கு 0 என்ற கோல் கணக்கில முன்னணியில் இருந்தனர்.

இரண்டாவது பாதி ஆட்டத்தின் பதினெட்டாவது நிமிடத்தில் யூனியன் கல்லூரி வீரர்கள் தமக்கு கிடைத்த வாய்ப்பைப் பயன படுத்தி இரண்டாவது கோலையும் அடித்தனர்.

இதேநேரம் ஸ்கந்தா வீரர்கள் தொடர்ந்தும் கோல் பெறும் முயற்சியில் சளைக்காது ஈடுபட்டுக் கொண்டிருந்தபோதிலும் கோல்கள் பெறும் வாய்ப்பு எதுவும் அவர்களுக்கு கிடைக்கவில்லை.

ஆட்டமுடிவில் 2இற்கு 0 என்ற கோல் கணக்கில் தெல்லிப்பழை யூனியன் கல்லூரி நட்சத்திர வீரர்களின் போட்டியில் சம்பியனாகினர்.

மூன்றாம் இடத்திற்கான போட்டியில் தெல்லிப்பழை மகா ஜனக் கல்லூரியும், மானிப்பாய் இந்துக் கல்லூரியும் மோதிக்கொண்டன. முதல் பாதி ஆட்டத்தில இரு அணிகளும் கோல்கள் எதனையும் பெறமுடியவில்லை.

இரண்டாவது பாதி ஆட்டத்தில் மானிப்பாய் இந்துக் கல்லூரி வீரர்கள தமக்குக் கிடைத்த வாய்ப்புகளை கோல்களாக்கி மூன்றாம் இடத்தைப் பெற்றுக்கொண்டனர்.

(ஒ-86)

## 'புனிதர்கள் போர்'

இளவாலை புனித கென்றியரசர் கல்லூரிக்கும் யாழ்ப்பாணம் சென் பற்றிக்ஸ் கல்லூரிக்கும் இடையேயான சிநேகபூர்வ உதைபந்தாட்டப் போட்டி இன்று திங்கட்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு சென்பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

14,16,18,20 வயதுப் பிரிவினர்களுக்கு இடையே இப்போட்டிகள் இடம்பெறவுள்ளன. (ஒ-86)

## கிரிக்கெட்

யாழ்ப்பாணம்,ஒக்.27

சஞ்சீவன் ஞாபகார்த்தமாக நடத்தப்படும் கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் இன்று திங்கட்கிழமை காலை 9 மணி முதல் நெல்லியடி மத்திய மகாவித்தியால மைதானத்தில் இடம் பெறும் அரையிறுதி ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகளின் விவரம்:-

காலை 9மணி - கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரி எதிர் உடுப்பிட்டி அ.மி.கல்லூரி.

முற்பகல் 10 மணி - யாழ். இந்துக்கல்லூரி எதிர் நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம். (ஒ-5)

## விளையாட்டு விழா

யாழ்ப்பாணம்,ஒக்.27

வட்டுக்கோட்டை சிவன் கோயிலடி காந்திஜி சனசமூக நிலைய முன் பள்ளி சிறார்களின் வருடாந்த விளையாட்டு விழா இன்று திங்கட்கிழமை பிற்பகல் 2 மணிக்கு வட்டு.சிவன் வீதியில் இடம்பெறவுள்ளது.

வட்டுக்கோட்டை இந்துக்கல்லூரி அதிபர் பொ.ரவிச்சந்திரன் தலைமையில் நடைபெறும். இந்நிகழ்வில் பிரதமவிருந்தினராக தமிழீழ விடுதலைப் புலிகளின் சங்கானை பிரதேச அரசியற்துறைப் பொறுப்பாளர் அ.அன்பு, சிறப்பு விருந்தினர்களாக வட்டுக்கோட்டை உபஅலுவலகப் பொறுப்பதிகாரி சி. குலசிங்கம், சன சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி ஹேமா சிவசோதி ஆகியோரும் கலந்துகொள்வர்.

## கூடைப்பந்து

ஹட்டன் நஷனல் வங்கி, யாழ். மாவட்ட கூடைப்பந்தாட்டச் சங்கத்துடன் இணைந்து நடத்தும் கூடைப் பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று திங்கட்கிழமை பிற்பகல் 5மணிக்கு யாழ்.சென்ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் இடம்பெறும் அரையிறுதி ஆட்டத்தில் யாழ்.மத்திய கல்லூரி 'ஏ'அணியும், சென்ஜோன்ஸ் கல்லூரி 'பி'அணியும் மோதவுள்ளன.

(ஒ-5)



கட்டைவேலி, நெல்லியடி பல நோக்குக் கூட்டுறவுச் சங்க கலாசார கூட்டுறவுப் பெருமன்றம் நடத்திய புலமையாளர் பாராட்டு விழாவில் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர் ஒருவருக்கு யாழ்.பல்கலைக்கழக தமிழ்த்துறை விரிவுரையாளர் கலாநிதி எஸ்.சிவலிங்கராசா பரிசில் வழங்குவதைப் படத்தில் காணலாம். (படம் வடமராட்சி செய்தியாளர்)

# விளையாட்டு

## 18வயதுப்பிரிவு உதைபந்தாட்டம்

# யாழ்.கல்வி வலயத்தில் பற்றிக்ஸ் அணி சம்பியன்

வலி.வடக்கு,ஒக்.27

யாழ்.கல்வி வலயப் பாடசாலை அணிகளுக்கு இடையே இடம்பெற்ற 18வயதுப் பிரிவினருக்கான உதைபந்தாட்டப் போட்டியில் யாழ்சென்பற்றிக்ஸ் கல்லூரி சம்பியனாகியுள்ளது.

யாழ்.மத்திய கல்லூரிக்கும் சென்பற்றிக்ஸ் கல்லூரிக்கும் இடையே சமீபத்தில் அரியாலை கனகரத்தினம் மத்திய மகாவித் தியாலய மைதானத்தில் இறுதியாட்டம் நடந்தது.

யாழ்.மத்திய கல்லூரி அணியினர் போட்டி ஆரம்பமாகிய சில நிமிட நேரத்தில் ஒரு கோலைப் பெற்றுக்கொண்டனர். தொடர்ந்து முதல் பாதி அட்டம் முடிவடையும் வரை இரு அணிகளும் கோல் போட முயற்சித்த போதிலும் கோல் பெறமுடியவிலலை.

இரண்டாம் பாதி ஆட்டத்தில் இரு அணிகளும் விறுவிறுப்பாக விளையாடின. சென்பற்றிக்ஸ் கல்லூரி தனக்கு கிடைத்த பந்தை சரியான முறையில் பயன்படுத்தி முதலாவது கோலை பெற்றுக் கொண்டது.

ஆட்டம் தலா ஒரு கோல் என்ற நிலையில் மிகவும் விறுவிறுப பாக இடம்பெற்றுக் கொண்டு இருக் கையில் மண்டும் ஒரு கோலைப் பெற்று பற்றிக்ஸ் கல்லூரி முன் னிலைககு வந்தது. ஆட்டம் முடிவடைய சில நிமிடம் இருக்கும் நிலையில் மீண்டும் ஒரு கோலைச் சென்பற்றிக்ஸ் கல்லூரி பெற்று மூன்றுக்கு ஒன்று என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று சம்பியனானது. (ம-86)

# பங்களாதேஷுடனான முதல் டெஸ்ட்டில் இங்கிலாந்து அணிக்கு 7 விக்கெட் வெற்றி

பங்களாதேஷ் அணியுடனான முதலாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் இங்கிலாந்து அணி 7 விக்கெட்டுக்களால் வெற்றிபெற்றுள்ளது.

டாக்காவில் நடைபெற்ற இப்போட்டியில் பங்களாதேஷ் அணி, முதல் இன்னிங்ஸில் 203 ஓட்டங்களையும் இங்கிலாந்து அணி, முதல் இன்னிங்ஸில 298 ஓட்டங்களையும் பெற்றன.

இப்போட்டியின் நான்காவது நாளான வெள்ளியன்று ஆட்டமுடிவின் போது பங்களாதேஷ் அணி 6 விக்கெட் இழப்பிற்கு 245 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

ஆனால், இறுதிநாளான நேற்று முன்தினம் மேலதிக 10 ஓட்டங்களுடன் இறுதி 4 விக்கெட்டுக்களையும் இழந்தது பங்களாதேஷ் அணி.

இங்கிலாந்து பந்து வீச்சாளர்களில் ஸ்ரீவ் ஹார்மிஸன், மத்தியூ ஹோகார்ட் ஆகியோர் தலா 4 விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

இங்கிலாந்து அணி வெற்றிபெறுவதற்கு இரண்டாவது இன்னிங்ஸில் 164 ஓட்டங்கள் மாத்திரமே தேவைப்பட்டன. 3 விக்கெட்டுக்களை மாத்திரம் இழந்து வெற்றி இலக்கை அடைந்தது இங்கிலாந்து அணி.

அவ்வணியின் தலைவர் மைக்கல் வோகன் ஆட்டமிழக்காமல் 81 ஓட்டங்களைப் பெற்றார்.ஸ்ரீவ் ஹார்மிஸன் போட்டியில் சிறப்பாட்டக்காரராகத் தெரிவானார்.இரு போட்டிகள் கொண்ட இத்தொடரின் இரண்டாவது போட்டி எதிர்வரும் வியாழக்கிழமை சிட்டாகொங் நகரில் ஆரம்பமாகவுள்ளது.

## வாசகர் திருமுகம்

# கூ.சங்கப் பணிப்பாளர்களின் பதவிக்கால வரையறை

'கூட்டுறவுச் சங்கங்கள் இலாபத்தில் இயங்க மாற்றங்கள் செய்யப்பட வேண்டியது அவசியமா?' என்ற தலைப்பில் 18.09.2003ஆம் திகதிய 'உதயன்' பத்திரிகையில் வெளியான கட்டுரையின் சில பகுதிகள் ஆழமான கவனத்திற்கும் உடன் நடவடிக்கைக்கும் உரியவைகளாகுமென 15.10.2003ஆம் திகதிய 'உதயன்' பத்திரிகையின் வாசகர் திருமுகத்தில் குருநகரைச் சேர்ந்த கூட்டுறவாளர் ஒருவரால் வெளியிடப்பட்ட கருத்துக்கள், பலராலும் கவரப்பட்டதால், அதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வார்களா என்ற ஆதங்கத்துடன், அக்கருத்துக்களுக்கான நியாயப்பாடுகளையும் வெளிப்படுத்துகின்றேன்.

பணிப்பாளர் சபைக்கு வருபவர்கள் தாங்கள் தொடர்ந்தும் அப்பதவிகளைவைத்து இலாபமடைவதற்காக புதிய அங்கத்தவர்களை இணைத்துக்கொள்வதில் குளறுபடிகளையும் தமக்குச் சார்பானவர்களுக்கு தாங்களே பணம் செலுத்தி அங்கத்தவராக்கி, இவர்கள் மூலம் தமது பதவியை உறுதிநிலையாக வைத்துக்கொண்டு, தாங்கள் சமூகசேவையாளராகவும், சமூகத்தொண்டர்களாகவும், கூட்டுறவாளர்களாகவும், ஜனநாயகவாதிகளாகவும் அடையாளப்படுத்துவதுடன் நின்று விடுவதில்லை.

இப்பணிப்பாளர்கள், பணியாளர் கட்டமைப்பையும்,தமக்கு ஒத்திசைவாக்கி, ஒத்திசையாதவர்களுக்குப் பல்வேறு வகையான நெருக்குதல்களைக்கொடுத்து, அவர்களை வெளியேறச்செய்தும் விடுகின்றனர்.

நீண்டகால பணிப்பாளராக இருப்பவர்களுக்கே மேற்படி நடவடிக்கைகளைச் செய்வதற்கேற்ற வாய்ப்புக்களும் வசதிகளும் கிடைக்கின்றது. அதன்பெறுபேறாக தரமற்ற பொருள் கொள்வனவும், ஊழல்நிறைந்த நிர்வாகமும் நடத்த வாய்ப்பும் கிடைத்துவிடுகின்றது.

பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் இலாபநோக்கமின்றி சேவை நோக்கத்தையே அடிப்படையாகக் கொண்டிருக்க வேண்டுமென்ற கருத்து. வாங்கப்படுகின்ற பொருள் நியாயவிலையில் விற்கப்படுவதுடன், அப்பொருள் சரியான முறையில் அங்கத்தவர்களையும், பாமர நுகர்வாளர்களையும் சரியாகச் சென்றடைகின்றனவா என்ற கணிப்பீட்டிலேயே காணப்படுகின்றது.

இந்த நோக்கச் செயற்பாட்டை சங்கங்கள் சரியாகச் செயற்பட வைக்க, நீண்டகாலப் பணிப்பாளர்களின் பிரசன்னம் இடையூறாக இருக்கிறது என்ற அபிப்பிராயம் மேலோங்கி இருப்பதால், பணிப்பாளர் ஒருவரின் பதவிக்காலத்தை மூன்று வருடங்களாக்குவதன் மூலம் சங்கங்கள் நஷ்டமடையவிடாது பாதுகாக்க முடியும்.

தம்பகாமம்,பளை. க.கிருஷ்ணபிள்ளை.

# மரண அறிவித்தல்கள்

## இராமப்பிள்ளை வேலாயுதபிள்ளை

(நடராசா)

கொக்குவில் மேற்கு, C.C.T.M.பாடசாலை வீதியை சேர்ந்த இராமப்பிள்ளை வேலாயுதபிள்ளை (நடராசா) அவர்கள் நேற்று (26.10.2003) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அன்னாரின் இறுதிக்கிரியை பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

*C.C.T.M. பாடசாலை வீதி,*
*கொக்குவில் மேற்கு,*
*கொக்குவில்.*

தகவல்:
குடும்பத்தினர்.
(ராணி)

(24099)(33-12-17-32)

## கந்தையா குலேந்திரன்

(முன்னாள் பாதுகாப்பு உத்தியோகத்தர்- சீமெந்து கூட்டுத்தாபனம்)

தெல்லிப்பழை கிழக்கு, தெல்லிப்பழையை நிரந்தர வதிவிடமாகவும், சுன்னாகம் ஐயனார் கோயிலடியைத் தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட கந்தையா குலேந்திரன் அவர்கள் நேற்று (26.10.2003) ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - அன்னம்மா தம்பதிகளின் புதல்வனும், இராசலட்சுமியின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை - பார்வதி தம்பதிகளின் மருமகனும் ரவிசங்கர் (லண்டன்), மதனா, ஞானசங்கர் (மாவீரர்), றெஜினா ஆகியோரின் பாசமிகு தந்தையும் இந்துநேசன், துஸ்யந்தன் ஆகியோரின் மாமனாரும் வதனி, மதிராஜ், பொலஸ், சாள்ஸ் ஆகியோரின் பேரனும் பரஞ்சோதி சர்வேந்திரன், காலஞ்சென்ற இராஜேந்திரன், ஞானசேகரம் மற்றும் மலர்ச்சோதி ஆகியோரின் அருமைச் சகோதரனும் சுதன், சுதனி, மதன், யேசுபாலன், றூபிதா, றலிதா ஆகியோரின் அருமை மாமனும் இராஜேஸ்வரி, இராசலிங்கம், இராசம், நந்தினி, கணேசலிங்கம், சிவராசா, தர்மராசா, நாகராசா, ருக்குமணி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.10.2003) திங்கட்கிழமை காலை 10மணியளவில் ஐயனார் கோயிலடி சுன்னாகத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக சுன்னாகம் கொத்தியாலடி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

*ஐயனார் கோயிலடி,*
*சுன்னாகம்.*

தகவல்:
மனைவி, பிள்ளைகள்.

(24101)(29-12-17-32)




புதுக்கடைத் திறப்புவிழா

இன்று (27.10.2003) திங்கட்கிழமை, முற்பகல் 9.30 (பு.நே.) மணியளவில்
இல.46, ஆடியபாதம் வீதி (ப.நோ.கூ.ச. முன்பாக),
திருநெல்வேலியில் அமைந்துள்ள எமது

"திருமுருகன் கொம் நெற்"

என்னும் புதிய ஸ்தாபனத்தை ஆரம்பித்துவைக்கவுள்ளதால்
வாடிக்கையாளர்கள், நண்பர்கள் அனைவரும் இவ்வைபவத்தில்
பங்குகொண்டு சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

021-2227310

தங்கள் நல்வரவை நாடும்:
திரு க.கலாதரனி.

(C30788) (34-12-17-32)

# முதலாவது பிறந்த நாள் வாழ்த்து

HAPPY BIRTHDAY



யாதவன் - தீபா தம்பதிகளின் செல்வப் புதல்வி

**செல்வி யா.யதுஷா** தனது முதலாவது பிறந்தநாளை இன்று (27.10.2003) திங்கட்கிழமை சுவிஸில் உள்ள தனது இல்லத்தில் வெகு விமரிசையாக கொண்டாடுகின்றார்.

இவரை அப்பப்பா, அப்பம்மா, அம்மம்மா, பெரியப்பா, பெரியம்மா, அருணன் அண்ணா, மாமாமார்களான காண்டீபன், செந்தூரன் (லண்டன்), நந்தகோபன், அத்தைமார் ஆகியோர் பல கலைகளும் கற்று பல்லாண்டு காலம் வாழ மகிழ்வுடன் வாழ்த்துகின்றனர்.

தகவல்:
V.C. கணபதிப்பிள்ளை குடும்பம்.

கிராம்புவில்,
சாவகச்சேரி.

(24108) (33-12-36-31)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 29 | 22 |
| ♀ | ♀ |
| 07 | 10 |
| ♀ | ♀ |
| 1988 | 2002 |



## அமரர் இராசேந்திரம் சோபனா

பூ விரிந்த பூமிதன்னில் தேன் சொரிந்தவா
தேன்சொரிந்த வாசமுல்லைப்பூ உதிர்ந்ததோ?
உந்தன் துக்கம் எங்கள் நெஞ்சில் ரத்தம் சொட்டுது
ரத்தம் சொட்டும் துக்கம் நீலவானை முட்டுது.

எமது மகளின் சபிண்டீகரண நிகழ்வு இன்று (27.10.2003) திங்கட்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும். அச்சமயம் வருகை தந்து ஆத்மசாந்திக்கு பிரார்த்தித்து, மதிய போசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு வேண்டிக்கொள்கிறோம்.

இலந்தைக்காடு.
வல்வெட்டித்துறை.

(24109) (29-12-31-36)

இராசேந்திரம்
குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்

## திருமதி லூட்ஸ் சந்தியாகோ
(இளைப்பாறிய ஆசிரியை)

பலாலியைப் பிறப்பிடமாகவும் 544,நாவலர் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி லூட்ஸ் சந்தியாகோ 25.10.2003 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஜோன் சந்தியாகோவின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற திரு. திருமதி பிலேந்திரம் தம்பதிகளின் அன்பு மகளும் ஷிறோமி, மொய்றா (கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும் ஸ்ரீபன் லெனாட் (நிப்பு லங்கா ரேடேர்ஸ் பிறைவேட் லிமிட்டெட்), ஜோசப் பாவுஸ்ரி (ஜோடின் -கனடா) ஆகியோரின் அன்பு மாமியாரும் ஜோசப் பிலேந்திரம் (லண்டன்), ஜேன் பறோ (அவுஸ்திரேலியா) ஆகியோரின் அன்புச் சகோதரியும் எஸ்ரெபனி (வேம்படி மகளிர் கல்லூரி) ஷைநபினி (புனித ஜோண் பொஸ்கோ வித்.), கெவின், ஜோய் (கனடா), ஜோஷ்வா (கனடா) ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் நல்லடக்கத்திற்காக அவரது இல்லத்திலிருந்து நாளை (28.10.2003) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு புனித ஆசீர்வாதப்பர் தேவாலயத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு, இரங்கல் திருப்பலியின் பின் யாழ். கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

544, நாவலர் வீதி
(ஸ்ரான்லிக் கல்லூரி அருகில்),
யாழ்ப்பாணம்.
T.P: 222 5294

தகவல்:
ஸ்ரீபன் லெனாட் (நிப்பு, லங்கா ரேடர்ஸ் பிறைவேற் லிமிட்டட்)
ஜேன் பறோ.

(24229) (29-12-17)

## நிதி ஒதுக்கீடு

தெல்லிப்பழை,ஒக்.27

வலி.வடக்கில் 2003 ஆம் ஆண்டுக்குரிய, சமுர்த்தி மக்கள் கருத்திட்ட செயற்பாட்டின் கீழ் சமுர்த்தி அதிகார சபையின் 75 வீத பங்களிப்புடனும் மக்களின் 25 வீத பங்களிப்புடனும் மேற்கொள்ளப்படும் எட்டு நுண்கருத்திட்டங்களுக்கான நிதி ஒதுக்கீடு கிடைக்கப்பெற்றுள்ளது.

இவை மக்களின் பங்களிப்புடன் மேற்கொள்ளப்பட்டு தற்போது பூர்த்தியடையும் நிலையிலுள்ளன.

அளவெட்டி தெற்கு, பாடசாலை வீதி, அளவெட்டி தெற்கு,மாரியம்மன் வீதி, துர்க்காபுரம் சின்னம்மன் கோவில் வீதி ஆகியவற்றைப் புனரமைத்தல்.

வறுத்தலை கோவில் வீதியிலிருந்து மூளாய் சந்திவரையான மழைநீர் வடிகாலமைப்பு.

தெல்லிப்பழை கிழக்கில் புதிய ஒழுங்கை அமைப்பு.

துர்க்காபுரம் நாத்தனாங்கட்டைகுளம் வரையான வடிகால் புனரமைப்பு.

மல்லாகம் வடக்கு நீதிமன்ற முன்னொழுங்கை புனரமைப்பு.

அளவெட்டி கிழக்கு, மணற்புலம் வீதி புனரமைப்பு ஆகிய பணிகளே இந்த நுண்கருத்திட்டங்களில் மேற்கொள்ளப்படுகின்றன. (ஒ-150)

## ஒருங்கிணைப்புக் குழு கூட்டம் நாளை

யாழ்ப்பாணம்,ஒக்.27

நெடுந்தீவு பிரதேச செயலகத்தின் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நாளை செவ்வாய்க்கிழமை காலை 11மணிக்கு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் அரச திணைக்களங்கள் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகளைக் கலந்துகொள்ளுமாறு உதவி அரச அதிபர் எஸ்.பேரானந்தம் கேட்டுள்ளார். (ம-9)

நிறைஞ்சனாஸ்
ஜீவா, ஸ்ரீதேவி நடிக்க
தித்திக்குதே
காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பி.நே.)
வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 இற்கு
T.DOX

லிபேட்டி அச்சுவேலி
சேரன், ரதி, மணிவண்ணன் நடித்த
சொல்ல மறந்த கதை
காட்சி நேரம்: 11.00, 3.00, 7.00.

லஷ்சுமி சினிமா இணுவில்
சரத்குமார (இருவேடம்), கிரண், வடிவேலு நடித்த



திவான்
காட்சிநேரம்
10.30.3.00. 7.00.
(பி.நே.)

ராஜா யாழ்ப்பாணம்
இந்தியாவிலும், இலங்கையிலும் ஒரேதினத்தில் வெளியாகிய
சேதுபுகழ் விக்ரம், சூர்யா, லைலா நடித்த




காட்சிகள் : 10.30. 2.30. 6.30. 9.30. (பி.நே.)
ஆசனங்களை முன்பதிவு செய்துகொள்ளலாம்.

நாகம்ஸ் சுன்னாகம்
இந்தியாவிலும், இலங்கையிலும் ஒரே தினத்தில் வெளியாகிய
இளைய தளபதி விஜய், ஜோதிகா, கிரண், விவேக் நடித்த




தினசரி காட்சிகள் : 1.00 3.00 7.00 10.00 (பி.நே.)

# துயர் பகிர்கின்றோம்



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 29 | 24 |
| - | - |
| 11 | 10 |
| - | - |
| 1974 | 2003 |

பண்ணாகத்தைச் சேர்ந்த

## சின்னத்தம்பி சந்திரராசா

வாசனைகள் தந்துநின்ற வண்ணமிகு பூவொன்று
சோகமதில் எமைவீழ்த்தி சென்றதெங்கு கூறாயோ?
வானமதன் நிலவெனவே வாழ்வில் ஒளி தந்தாயே!
தேனமுதக் குரலாலே செவி இனிக்கச் செய்தாயே!
எம்மோடு நீயில்லை இங்குநாம் அழுகின்றோம்.
நெஞ்சோடு துயர்தொல்லை நெருப்பினிலே வேகின்றோம்
சந்திர ராசாவே உனை நாங்கள் மறப்போமா?
உந்தனின் ஆத்மா சாந்திபெற கந்தனை நாம் தொழுகின்றோம்.

*Note:* இறுதிக்கிரியைகள் இன்று (27.10.2003) திங்கட்கிழமை பகல் 1 மணியளவில் நடைபெறும்.

- நண்பர்கள்.

(24110)(31-12-17)

# மரண அறிவித்தல்கள்

## ஆறுமுகம் நடராசா (கன்ரீன்)

புளியம்சீமா, கரணவாய் தெற்கைப் பிறப்பிடமாகவும் ஆவரங்கால் சந்தை வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட ஆறுமுகம் நடராசா அவர்கள் நேற்று (26.10.2003) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் பரமேஸ்வரியின் அன்புக் கணவரும் பத்மாவதியின் அன்புச் சகோதரரும் நந்தீஸ்வரி (ராதா), பரமராசா (ரவி), பரமகுலராசா (பாபு) ஆகியோரின் தகப்பனாரும் தனுயன் (கண்ணன்), குவைத, சுகிதா, சுபனா, ஜசிராஜ், ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.10.2003) திங்கட்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக பி.ப.2மணிக்கு ஆவரங்கால் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சந்தை வீதி,
ஆவரங்கால்.

(24106) (29-12-17-31)

தகவல்:
ந.பரமேஸ்வரி (மனைவி).

## ஆறுமுகம் அருட்சோதி (அருள் - பிரான்ஸ்)

வதிரி, கரவெட்டியைப் பிறப்பிடமாகவும் பிரான்ஸை வசிப்பிடமாகவும் கொண்ட ஆறுமுகம் அருட்சோதி 25.10.2003 சனிக்கிழமை பிரான்ஸில் காலமானார்.

அன்னார் ஆறுமுகம் - தவமணிதேவி தம்பதிகளின் அன்பு மகனும் அருட்செல்வம், காலஞ்சென்ற அருந்தவராஜன் மற்றும் அபிராமி, அனுசியா (வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி) ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஆறுமுகம் பேக்கரி,
பரியந்தர் வளவு,
வதிரி, கரவெட்டி.

தகவல்:
வே.ஆறுமுகம் (தந்தை).

(24105) (29-12-17-31)

## திருமதி யேசுதாசன் றெஜீனா

யாழ்ப்பாணம், இல.100, 4ஆம் குறுக்குத் தெருவைப் பிறப்பிடமாகவும் கண்டியை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி யேசுதாசன் றெஜீனா நேற்று (26.10.2003) ஞாயிற்றுக்கிழமை அதிகாலை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற ஏபிரகாம் யேசுதாசனின் அன்பு மனைவியும் (இலங்கை C.T.B.Area ecco), யோசேப், ஞானம்மாவின் அன்பு மகளும் பிறேமிலா, கௌரி, கொன்சி ஆகியோரின் அன்புத் தாயாரும் பேபி, யோகம், ராஜக்கோன், வனஜா ஆகியோரின் அன்புச் சகோதரியும் பசில், ஜீவா, றொணி ஆகியோரின் அன்பு மாமியாரும் அஜய், ஆகாஷ், டனிலா, டெனோரி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் அருளானந்தம், திருச்செல்வம், யூலி, செல்வரட்ணம் ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கம் 26.10.2003 அன்று கண்டியில் இடம்பெற்றது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

48/2, பழைய பூங்கா வீதி.
யாழ்ப்பாணம்.
021 222 2880.

(24107) (29-12-17-31)

தகவல்:
யோசேப் றொனால்ட்
(மருமகன்).

# சமாதானச் சூழலை முறியடிக்க....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
யும் அரசோ, அரச படைகளோ குடாநாட்டில் மேற்கொள்ளவில்லை. ஆனால், மக்களே அந்தப் பணிகளை ஆற்றி வருகின்றனர். சுதந்திரமாக நடமாடவோ, வாழவோ முடியாத இடைஞ்சல்கள், இக்கட்டுக்களை எமது மக்கள் எதிர்நோக்கியுள்ளனர். இதனால் இங்கு இயல்பு நிலையைத் தோற்றுவிக்க வேண்டும் என்ற அவா எண்ணப்பாடு எழுந்துள்ளது. ஆனால், அதற்கான சூழலை உருவாக்க முடியாத நெருக்கடிநிலை நீடிக்கின்றது. குடாநாட்டில் பலவிதமான கெடுபிடிகளையும் தடைகளையும் விதித்துள்ள அரச படைகள், பாதுகாப்பு வலயங்கள் என்ற போர்வையில் பெருமளவு பிரதேசத்தை ஆக்கிரமித்தும் நிற்கின்றன. அப்பிரதேசங்களை மேலும் விஸ்தரித்து இயல்பு நிலையைக் குழப்புகின்ற செயலிலும் அவர்கள் ஈடுபடுவதை காணக் கூடியதாக இருக்கின்றது.

இன்றைய சமாதானச் சூழலை நம்பி பாதுகாப்பு வலயங்களை அகற்ற முடியாது என்ற நிலைப்பாட்டையே படைத்தரப்பு எடுத்துள்ளது.

சமாதானத்தை முன்னெடுத்துச் செல்வதற்கு - சமாதானத்தின் மூலம் எமது இனத்திற்கு தீர்வைப் பெற்றுக் கொள்வதற்கு - தடையாக விளங்குபவர்கள் யார் என்பதை மக்கள் இன்று முழுமையாக அடையாளம் கண்டுள்ளனர்.

இந்த உண்மையை உலகுக்கு அம்பலப்படுத்தி உணர்த்த வேண்டிய பொறுப்பும் கடமையும் மக்களுடையது.

குடாநாட்டில் புதிய முகாம்களை, காவலரண்களை அமைத்து போருக்குத் தயாராகும் படையினரின் போக்கைக் கண்டு மக்கள் அச்சமடையும் நிலை காணப்படுகின்றது. இத்தகைய அச்ச நிலையை மக்கள் மத்தியில் இருந்து அகற்றி, விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டிய பொறுப்பு தேசிய எழுச்சிப் பேரவையிடமே உள்ளது.

தமிழீழத்தின் தலைவிதியை நிர்ணயிக்கக்கூடிய ஒரு பெரும் மாவட்டமாக யாழ்.குடாநாடு திகழ்கின்றது.

சர்வதேச பிரதிநிதிகள் எவராயினும், யாழ்.குடாநாட்டை மையமாகக் கொண்டே தமது கருத்துக்களைப் பரிமாறுகின்றனர்.

கூடிய எண்ணிக்கையிலான மக்கள் வாழும் இந்த மாவட்டத்தில், நாம சுதந்திரமாக வாழக்கூடிய இயல்பு நிலையை உருவாக்கும் முயற்சியில தீவிரமாக ஈடுபடவேண்டும்.

இடைக்கால நிர்வாகம் தொடர்பான எமது திட்டவரைவு எதிர்வரும் 31 ஆம் திகதி அரசிடம் கையளிக்கப்படவிருக்கின்றது.

வடக்கு, கிழக்கில் - எமது தாயகப் பிரதேசத்தில் - வாழும் எமது மக்களுக்கு இயல்பு வாழ்க்கையை ஏற்படுத்துவதற்குத் தேவையான சகல அம்சங்களையும் உள்ளடக்கியதாக இந்த வரைவு அமைகின்றது.

சர்வதேச சட்ட வல்லுநர்களின் ஆலோசனைப்படி, எமது மக்களின் அபிலாஷைகளை எட்டக்கூடிய வகையில், அந்த வரைவு தயாரிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், ஸ்ரீலங்காவின் எதிர்க்கட்சிகள் - குறிப்பாக ஜே.வி.பி., சிஹல உறுமய போன்ற கட்சிகள் - இணைந்து இந்த வரைவை ஏற்றுக்கொள்ள முடியாத ஒரு நிலையை தென்னிலங்கை மக்களிடம் உருவாக்கும் விதத்தில் பிரச்சாரங்களை மேற்கொண்டு வருகின்றன.

இந்தத் திட்டத்தின் மூலம் இந்த நாடு இரண்டாகப் பிரியப்போகின்றது என்ற எண்ணத்தை அந்த மக்கள் மனதில் உருவாக்குவதில் அக்கட்சிகள் முனைப்புடன் செயற்படுகின்றன.

வரைவு சமர்ப்பிக்கப்பட முன்னரே அக்கட்சிகளின் பிரசாரங்கள் விஸ்வரூபம் எடுத்துள்ளன.

சிங்கள பேரினவாத சக்திகள் ஒன்றிணைந்து குழப்பத்தை ஏற்படுத்தி சமாதான சூழலை முறியடிக்கும் செயற்பாட்டுக்கு அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்துவருகின்றன.

ஆனால், மறுபுறத்தில் சமாதான நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்கின்ற - நல்ல திசையில் - நகர்த்திச் செல்கின்ற ஆக்கபூர்வமான திட்டங்களையோ செயற்பாடுகளையோ ரணிலின் அரசிடம் நாம் இதுவரை காணவில்லை.

இந்தத் திட்ட வரைவுக்கு எதிரானதும் சமாதானத்துக்கு எதிரானதுமான பல நடவடிக்கைகளை சிங்களப் பேரினவாதச் சக்திகள் பெரியளவில் செய்வதை நாம் பார்த்துக் கொண்டிருக்கின்றோம். அதற்கான தயார்படுத்தல்களையும் அவர்கள் மேற்கொண்டுள்ளனர்.

எனவே நாங்கள் பலமான - தீவிர விடுதலை வேட்கை மிக்க - இனமாகப் பிடிவாதத்துடன் நின்றுதான் எமது உரிமையை பெறமுடியும் என்ற உண்மையை இந்த சமாதான காலத்தின் மூலம் உணர்ந்துகொள்ள வேண்டியவர்களாக இருக்கின்றோம்.

கடந்த 20 வருட போரின் மூலம் இந்த இனம் பலமான இனமாக நின்று - பலமான சக்தியாக நின்று - ஏற்படுத்திய இந்த சமாதானச் சூழல் கூட இன்று ஒரு சரியான சமாதானப் பாதையில் நகர முடியாது தடுமாறுகின்றது. இந்த உண்மையை வெளிக்கொண்டுவருவதும் சர்வதேச சமூகத்துக்கு உணர்த்துவதுமான பலமான நடவடிக்கைகளை விரைவாக மேற்கொள்ள வேண்டிய பொறுப்பு எங்களிடம் உள்ளது.

எம்மால் கையளிக்கப்படும் திட்ட வரைவு, சர்வதேச நாடுகளிடம் எமது நிலைப்பாட்டை தெளிவாக எடுத்துணர்த்துவதாக அமையும்.

தெற்கில் இந்த வரைவுக்கு எதிர்ப்புக் கிளம்பும் நிலையில், அதற்குப் பலம் சேர்க்கும் வகையில் ஸ்ரீலங்கா அரச படைகளும் தங்களைப் பலப்படுத்திக் கொள்கின்ற நிலையைக் காண்கின்றோம்.

இந்தப் பின்னணியில் எமது மக்களை விழிப்படையச் செய்வதும், எமது மக்களை உறுதியான விடுதலை உணர்வுமிக்கவர்களாகத் தயார்படுத்திக் கொள்வதும், எமது மக்கள் ஒரு தலைமையின் கீழ் அணிதிரண்டு பலமிக்க இனமாக இருக்க வேண்டும் என்ற நிலையை உருவாக்கிக் கொள்வதும் எங்கள் அனைவரதும் பொறுப்பாகும். அதற்காக தேசிய எழுச்சிப் பேரவையின் சகல பேராளர்களும் உழைக்க வேண்டும். - என்றார் அவர்.

தமிழீழ அரசியல்துறை மகளிர் பொறுப்பாளர் தமிழினி, யாழ். மாவட்ட அரசியல் துறைப்பொறுப்பாளர் சி.இளம்பரிதி தமிழீழ விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் பாப்பா, யாழ்பல்கலைக் கழக நுண்கலைத்துறைத் தலைவர் கலாநிதி க.சிதம்பரநாதன், அரசறிவியல்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் சகாயசீலன், உடற்கல்வித்துறை விரிவுரையாளர் எஸ்.இளம்பிறை மற்றும் மா.க.ஈழவேந்தன் ஆகியோர் உரையாற்றினர்.

தேசிய எழுச்சிப் பேரவையினால கோட்ட ரீதியாக இனங்காணப்பட்ட பிரச்சினைகள் குறித்து அந்தந்தக் கோட்டங்களின் தலைவர்களினால் அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டன.

குழுநிலைக் கலந்துரையாடல்களும் இடம்பெற்றன. முன்வைக்கப்பட்ட பிரச்சினைகளுக்கு எவ்வாறு தீர்வு காண்பது என்பது குறித்தும் ஆராயப்பட்டது. (ம-4-86)

## மூதூரில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
ரும் கிளிவெட்டியைச் சேர்ந்தவர்களாவர்.

இச்சம்பவங்களை அடுத்து மல்லிகைத் தீவில் வாகனங்களை ஒரு கோஷ்டியினர் வழிமறிப்பதில் ஈடுபட்டுள்ளனர். இதனைக் கண்ட வாகன சாரதிகள் வாகனங்களைத் திருப்பிக் கொண்டு மீண்டும் மூதூருக்குச் சென்றுள்ளனர். இவ்வாறு ஒரு லொறியைத் திருப்ப முற்பட்டபோது அது வீதியை விட்டு விலகி குடைசாய்ந்துள்ளது. உடனே அங்கு வந்த ஒரு கோஷ்டியினர் அந்த லொறியை தீயிட்டுக் கொளுத்தினர். அந்த இடத்துக்கு விரைந்த பொலிஸார் கண்ணீர்புகைக் குண்டுகளைப் பிரயோகித்து கூட்டத்தைக் கலைத்தனர். பின்னர் நண்பகல் 12 மணி முதல் ஊரடங்கு உத்தரவையும் பிறப்பித்துள்ளனர்.

திருமலை இராணுவமுகாம் பிரிகேடியர் தென்னக்கோனின் பணிப்புரையை அடுத்து இராணுவப்படையணியொன்று மூதூருக்கு அனுப்பப்பட்டுள்ளது.

## அடுத்த....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
வித்தன.

புலிகளின் வரைவைப் பெற்றுக் கொள்வதற்காக இலங்கையிலிருக்கும் நோர்வே தூதுவர் ஹெலன்ஸ் பிரட்ஸ்கர் எதிர்வரும் 31ஆம் திகதிக்கு கிளிநொச்சிக்குச் செல்வார்.

அடுத்த சுற்று சமாதானப் பேச்சுக்கள் நடைபெறும் இடம், திகதி, பேச்சு நிகழ்ச்சி நிரல் ஆகியவற்றைத் தீர்மானிப்பதற்காக நோர்வே சமாதான அனுசரணையாளர் எரிக்சொல்ஹெய்ம். இலங்கையில் அரசுத் தலைவர்களுடனும் விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளுடனும் பேச்சு நடத்துவார்.(ம)

## முனைபகுதி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
தேசிய கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மாவை. சோ.சேனாதிராஜா தெரிவித்துள்ளார்.

(முனைப்பிரதேசத்தில் இடம்பெற்ற சம்பவங்கள் தொடர்பாக விசாரணை நடத்துமாறு பொலீஸாருக்கும் படையினருக்கும் பாதுகாப்பு அமைச்சுச் செயலாளர் உத்தரவிட்டுள்ளார்.(ம-9)



மலையக மக்கள் முன்னணி தலைவர் அமைச்சர் பெ.சந்திரசேகரன் தலைமையிலான தூதுக்குழுவினரும் மேல்மாகாண மக்கள் முன்னணித் தலைவரும் நடாளுமன்ற உறுப்பினருமான மனோகணேசன் தலைமையிலான குழுவினரும் நேற்று கிளிநொச்சியில் தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனை சந்தித்து பேச்சு நடத்தினர். இடைக்கால நிர்வாகம் பற்றி இந்தப் பேச்சுக்களின் போது முக்கியமாக ஆராயப்பட்டது.

பேச்சுக்களின் பின்னர் அமைச்சர் சந்திரசேகரன் குழுவினர் தமிழ்ச்செல்வனுடன் எடுத்துக்கொண்ட படம்.

## ஆறு ஆண்டு.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
கும். நடைமுறையில் வடக்கிற்கு 10 பேருடன் தனியாகவும், கிழக்கிற்கு 10 பேருடன் தனியாகவும் இந்த நிறைவேற்றுக் கவுன்சிலும் இயங்கும். இந்தப் பத்துப் பேரும் எல்லா இனங்களில் இருந்தும் நியமிக்கப்படுவர்.

நிறைவேற்றுக் கவுன்ஸில் மற்றும் பிரதிநிதித்துவ சபை ஆகிய இரண்டுக்கும் தனித் தனியாக ஒரு தலைவரும், இரு பிரதித் தலைவரும் தெரிவு செய்யப்படுவர். தலைவர்களின் இனத்தைச் சேர்ந்தவர்களே பிரதித் தலைவர்களாகத் தெரிவுசெய்யப்படுவார்கள்.

*(விரிவான செய்தி I ஆம் பக்கத்தில்)*

## கௌரவிப்பு

கடந்த ஏப்ரல் மாதம் நடைபெற்ற ஜி.சீ.ஈ உயர்தரப்பரீட்சையில் ஹாட்லிக் கல்லூரியில் 3 A சித்தி பெற்ற ஏழு மாணவர்களும் இன்று திங்கட்கிழமை தங்கப்பதக்கம் வழங்கி கௌரவிக்கப்படவுள்ளனர்.

ஹாட்லிக் கல்லூரி பழைய மாணவர் சங்க கொழும்புக்கிளை ஏற்பாட்டில் கல்லூரி மண்டபத்தில் காலை 8.30 மணிக்கு இந்தக் கௌரவிப்பு நிகழ்வு இடம்பெறும்.

அரியகுமார் சிறீரஞ்சன், யோகச்சந்திரன் ராகுலமாதவன், இராசதுரை நிசாந்தன், சேதுராசா வருண்பிரசாந், சபாரத்தினம் அற்புதராசா, தங்கவேல் பால்ராஜ் வல்லிபுரம் சுபாசன் ஆகிய ஏழு மாணவர்களே கௌரவிக்கப்படவுள்ளனர்.


## மரண அறிவித்தல்

### அப்பாக்குட்டி சுப்பிரமணியம்

மட்டுவில் தெற்கைப் பிறப்பிடமாகவும் கைதடி நுணாவிலை வசிப்பிடமாகவும் கொண்ட அப்பாக்குட்டி சுப்பிரமணியம் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற அன்னபூரணத்தின் (பாக்கியம்) அன்புக் கணவரும் புவனேஸ்வரி (சுவிஸ்), பரமேஸ்வரன், லோகேஸ்வரி, காலஞ்சென்ற பவளமலர் மற்றும் தியாகராசா (சுவிஸ்), விக்கினேஸ்வரி (இந்தியா), ராஜினி (பிரான்ஸ்) ஆகியோரின் அருமைத் தந்தையாரும் செல்வநாயகம், மல்லிகாதேவி, சத்தியபாலன், கந்தசாமி, மாலினிதேவி, சிவசுந்தரம், வீரகுமார் ஆகியோரின் மாமனாரும் தயாளன்-தனரஞ்சினி, விஜயகுமார்-தயாநிதி, பாலகெங்கன்-தயாரதி, தயாரூபன்-ஜஸ்மின், உதயகுமார்-தயாநந்தினி, திருக்குமரன்-தயாரூபி, தயாநந்தன், ஜெகன், விந்தன், வினோ, ராஜா, சுரு, தீபன், விஜி, வினோஜா, நந்தன், ஜெஜிதா, ஜெவித், சத்தியகிரி-சுகிர்தா, சுஜிதா, உசாந்த், சுமித்தா, ஜெலக்ஷனா, சதுர்சன், தேனுகா ஆகியோரின் பேரனும் நிவேதிகா, திபானி, நிருஷ், விதர்ஷன், டிலக்ஷனா ஆகியோரின் பூட்டனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.10.2003) திங்கட்கிழமை காலை 10மணியளவில் நடைபெற்று, பூதவுடல் கொக்குவில் இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
பரமேஸ்வரன் (அப்பையா),
மகன்

*கோவைவளா ஒழுங்கை,*
*கொக்குவில் கிழக்கு.* (241127)(29-12-17)

### இரத்தினம் பரமேஸ்வரி

யாழ். ஆனைக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் வண்ணார் பண்ணையை வசிப்பிடமாகவும் கொண்ட இரத்தினம் பரமேஸ்வரி நேற்று (26.10.2003) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சபாபதி இரத்தினத்தின் அன்பு மனைவியும் இராசேந்தினி, இராஜமதி, ரவிச்சந்திரன் ஆகியோரின் பாசமிகு தாயாரும் காலஞ்சென்ற சுப்பையா - இராசம்மா தம்பதிகளின் மூத்தபுதல்வியும் தம்பிராசா பாஸ்கரன், கேமலதா ஆகியோரின் மாமியாரும் குகன்ராஜாவின் பாசமிகு பேர்த்தியும் காலஞ்சென்ற தியாகராசா, திருநாவுக்கரசு, அன்னலட்சுமி, பராசக்தி ஆகியோரின் சகோதரியும் பொன்னுத்துரை, அன்னம்மாவின் மைத்துனியும் கதிரமலையின் பெறாமகளுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.10.2003) திங்கட்கிழமை பி.ப. 3.00 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வண்ணை இந்து கோம்பையன் மணல் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
தம்பிராசா பாஸ்கரன்
(மருமகன்)

*14, முருகமூர்த்தி வீதி,*
*வண்ணார்பண்ணை,*
*யாழ்ப்பாணம்.* (24115)(29-12-17)

## தவறிவிட்டது

ஆடியபாதம் வீதியில் திருநெல்வேலி சந்தைக்கும் கலவபங்காட்டுச் சந்தைக்கும் இடையில் பச்சை நிறப்பேசும், சிறிய டயறியும் தவறிவிட்டன. முக்கிய ஆவணங்கள் இருப்பதால் தயவுசெய்து கண்டெடுத்தவர்கள் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதிக்கு முன்னுள்ள வைத்தீஸ்வரன மெடிக்கல் ஸ்தாபனத்தில் கொடுக்கும் வண்ணம் அன்புடன் கேட்கின்றோம். தகுந்த சன்மானம் வழங்குவோம்.

போன்: 0777 972780
25012789 (24111)(32-29-12-17)

இன்று முதல் ஞாயிறு வரை
நிலவு. Com இன்
துளிர் கணனி 2003
கண்காட்சியும் விற்பனையும்
யாழ். பல்கலைக்கழக நூலக கேட்போர் கூடத்தில்
(C/30793) (33-1?-17-29)




வீ.எம்.கே. ஜுவலரீஸ்
இடம்மாற்றம்
இதுவரை காலமும் இல.305, கஸ்தூரியார் வீதியில் இயங்கிவந்த எமது ஸ்தாபனம் இன்று (27-10-03) திங்கட்கிழமை முதல்-
யாழ்.இல.105, மின்சார நிலையவீதி, பஸ் நிலையம் முன்பாக இயங்குகிறது என்பதை எமது வாடிக்கையாளர்களுக்கு அன்புடன் அறியத்தருகின்றோம்
V.M.K JEWELLERS, 105,POWER HOUSE RD, JAFFNA
-உரிமையாளர்.
(24089)(32-14-17-29)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 27.10.2003இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

இடைக்கால நிர்வாக சபை வரைவு மூலமாக

# இலங்கை நாட்டின் கட்டமைப்பில் பாரிய மாற்றத்தைப் புலிகள் எதிர்பார்க்கின்றனர்

கொழும்பு,ஒக்.27

வடக்கு - கிழக்குக்கான இடைக்கால நிர்வாகம் தொடர்பாக விடுதலைப் புலிகள் சமர்ப்பிக்கவிருக்கும் உத்தேச திட்டவரைவில் இடம்பெறும் விடயங்கள் சிலவற்றை ஆங்கில வார இதழ் ஒன்று நேற்று வெளியிட்டது. அதில் தெரிவிக்கப்பட்ட முக்கிய அம்சங்கள் வருமாறு:

★ அதிக அதிகாரங்களுடன் கூடிய இடைக்கால நிர்வாக அமைப்பு குறைந்தது ஆறு ஆண்டுகளுக்காவது வழங்கப்படவேண்டும்.

★ வடக்கு - கிழக்கு இன விகிதாசாரத்துக்கு அமைய உறுப்பினர்களையும் அமைச்சர்களையும் கொண்டதாக இடைக்கால நிர்வாக சபை (அசெம்பிளி) அமையும்.

★ வடக்கு - கிழக்கில் வழமை நிலையை ஏற்படுத்தத்தக்க விதத்தில் புனர்வாழ்வு, புனரமைப்பு, அபிவிருத்தி வேலைகளை இடைக்கால நிர்வாக சபை முன்னெடுக்கும்.

வாழ்வு மீள்குடியேற்றம், புனரமைப்பு போன்ற அடிப்படை கட்டுமானங்களையும் சேவைகளையும் வழங்குவதற்கும், தேவைப்படும் பெரும் உதவிகள் குறித்தும் பிரஸ்தாபிக்கின்றது.

★ வடக்கு - கிழக்கில் நிலைமையைச் சீர்படுத்துவதற்காக அவசரமாகவும் விரைந்தும் செயற்பட வேண்டிய நிவாரணப் பணிகளை விவரிக்கும் இந்த முன்னுரை மேலும் புனர்வாழ்வு மீள்குடியேற்றம், புனரமைப்பு போன்ற அடிப்படை கட்டுமானங்களையும் சேவைகளையும் வழங்குவதற்கும் தேவைப்படும் பெரும் உதவிகள் குறித்தும் பிரஸ்தாபிக்கின்றது.

வடக்கு - கிழக்கை ஆறு ஆண்டுகளுக்கு நிர்வகிப்பதற்கான இடைக்கால சபை நிறுவப்படுவதற்கு முன்னர் ஆறுமாதம் முதல் 12 மாதம் வரையான காலத்தைக் கொண்ட இடைக்காலத்துக்கு முன்னான காலப்பகுதி என்பது வரையறை செய்யப்படவேண்டும்.

★ 1981 இனவிகிதாசார புள்ளி விவரங்களின் அடிப்படையில் மாகாணங்களிலிருந்து பிரதிநிதித்துவ சபைக்கு உறுப்பினர்கள் தெரிவு செய்யப்படுவர்.

★ கிழக்கில் 21 தமிழர்கள், 17 முஸ்லிம்கள், 12 சிங்களவர்கள் என ஐம்பது பேரும், வடக்கில் 46 தமிழர்கள், மூன்று முஸ்லிம்கள், ஒரு சிங்களவர் என ஐம்பது பேரும் பிரதிநிதித்துவ சபைக்குத் தெரிவாவர்.

★ யாழ். மாவட்டத்தைத் தவிர ஏனைய மாவட்டங்கள் ஒவ்வொன்றிலிருந்தும் பிரதிநிதித்துவப்படுத்தும் உறுப்பினர்களுள் ஐந்தில் ஒரு பகுதியினர் அண்மைக் காலத்தின் இந்திய வம்சாவளியினராக இருத்தல் வேண்டும்.

★ இந்த பிரதிநிதித்துவ சபை உறுப்பினர்கள் நூறுபேரில் ஐந்தில் ஒரு பகுதியினர் அதாவது இருபது பேரை - கொண்ட நிறைவேற்றுக் குழுவினர் அமைச்சரவை சபைக்கு

★ இடைக்கால நிர்வாகத்தின் முன்னேற்றத்தை மதிப்பீடு செய்யவும் தவறான ஆட்சி பற்றிய முறைப்பாடுகள், பாரபட்சம், ஊழல், அதிகார துஷ்பிரயோகம் போன்றவற்றை ஆராயவும் உள்ளூர் மற்றும் வெளிநாட்டுப் பிரமுகர்களைக் கொண்ட 'மதிப்பீட்டு முறைப்பாட்டுக்குழு' ஒன்று அமைக்கப்படவேண்டும்.

## பாரிய மாற்றங்கள்

★ இலங்கை நாட்டின் கட்டமைப்பில் பாரிய மாற்றம் கொண்டுவரப்படவேண்டும் எனப் புலிகள் எதிர்பார்க்கின்றார்கள்.

தற்போதைய அரசமைப்பை மாற்றி புதிய அரசமைப்பு ஒன்றை வரைவதற்காக சகல இனங்களையும் மதங்களையும் பல்வேறு கருத்துக்களையும் பிரதிபலிக்கத்தக்கதான அரசமைப்பு ஆணைக்குழு ஒன்று நியமிக்கப்படவேண்டும்.

எனினும், சில அடிப்படைக் கோட்பாடுகளை அரசு ஏற்றுக்கொள்ளும்

மையை பிரதிபலிக்கும் விதத்தில் தேசியக்கொடி, தேசிய கீதம் ஆகியவற்றை மாற்றியமைப்பதற்கான ஆணைக்குழு அமைப்பதும் உசிதமானது.

★ புலிகளின் கருத்துப்படி இலங்கை நாடு புதிதாக உருவாக்கப்பட்டு கட்டமைக்கப்பட வேண்டும். பிரிவினைக்கு மாற்றாக அரசமைப்பில் கூட்டாட்சி முறை புகுத்தப்பட வேண்டும். நாட்டின் ஐக்கியமும் அன்புல ஒருமைப்பாடும் பேணப்படும் அதேசமயம் இறைமையைப் பகிரும் ஒரு புதிய முறைமை அறிமுகம் செய்யப்பட வேண்டியுள்ளது.

★ புதிய அரசமைப்பு நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டு, சர்வஜன வாக்கெடுப்பில் மக்களினால் அது அங்கீகரிக்கப்பட்டால் நாட்டின் சரித்திரத்தில் புதிய அத்தியாயம் உருவாகும். ஆனால், தெற்கு சிங்களவர்கள் அதை நிராகரித்தால் புலிகள் தங்களுக்கு உள்ள உள்ளக சுயநிர்



இடைக்கால நிர்வாக சபையின் செயற்பாடுகள், நடவடிக்கைகள் ஒரு புறம் இடம்பெற்றுக்கொண்டிருக்க மறு புறத்தில் நாட்டில் மத்திய அரசுக்கும் பிராந்தியங்களுக்கும் இடையில் அதிகாரங்களைப் பகிர்வு செய்வதற்கான புதிய அரசமைப்பு ஒன்றை உருவாக்குவது குறித்து இலங்கை அரசுடனும் ஏனைய தொடர்புடைய தரப்புகளுடனும் பேச்சுக்கள் தொடர்ந்து நடக்கும்.

★ ஆறு வருடங்களின் முடிவில் அத்தகைய அரசமைப்பை மக்கள் ஏற்கின்றார்களா என்பதை அறிந்துகொள்வதற்காக, அது சர்வஜன வாக்கெடுப்புக்கு விடப்படும்.

★ தமிழ்மக்களின் ஏகோபித்த ஆதரவுடன் முன்வைக்கப்படும் அத்தகைய அரசமைப்பை நாட்டு மக்கள் நிராகரிப்பார்களேயானால் புலிகள் தங்களுடைய சுயநிர்ணய உரிமையைப் பயன்படுத்தி, தற்போதைய அரசமைப்புக்கு வெளியில் மாற்று அரசியல் ஏற்பாட்டை உருவாக்குவார்கள்.

- இவையே புலிகளின் திட்டவரைவில் உள்ள முக்கிய அம்சங்களாகும்.

★ இடைக்கால நிர்வாக ஏற்பாடுகள் தொடர்பாக நிறைவேற்று அதிகார ஜனாதிபதி, பிரதமர் ஆகிய இருவரையும் இணைத்துக்கொண்ட நிலையில் அரசுடன் ஓர் இணக்கத்துக்கு வருவதையே புலிகள் விரும்புகின்றனர்.

★ வடக்கு - கிழக்குக்கு இடைக்கால நிர்வாக சபை அமைக்கப்பட வேண்டிய நிலைமை ஏன் ஏற்பட்டது என்பதை விரிவாக விளக்கும் நீண்ட முன்னுரை ஒன்றைத் திட்டவரைவு கொண்டுள்ளது. அந்த முன்னுரையின் சில ஏற்பாடுகள் மேலதிக விளக்கங்களைத் தருவதற்காக பின் இணைப்புக்களையும் கொண்டுள்ளது. அத்தகைய ஏற்பாடுகளுள் ஒன்று இனப்படுகொலைக்கான அடிவேர்களை விளக்குகின்றது. கடந்த காலங்களில் சிங்கள மேலாதிக்க அரசுகள் எவ்வாறு தமது செயல்கள் மூலமும், செய்யாமல்விட்டவை மூலமும் தமிழ் பேசும் மக்களைப் புறம் ஒதுக்கின என்பதும் விளக்கப்படுகின்றது.

★ வடக்கு - கிழக்கில் நிலைமையைச் சீர்படுத்துவதற்காக அவசரமாகவும் விரைந்தும் செயற்பட வேண்டிய நிவாரணப் பணிகளை விவரிக்கும் இந்த முன்னுரை மேலும் புனர்

★ இக்காலப்பகுதியில் தற்போதைய யுத்தநிறுத்த ஏற்பாடுகள் மறுபரிசீலனை செய்யப்பட வேண்டும். இதற்காக உள்ளூர் மற்றும் வெளிநாட்டுப் பிரதிநிதிகளைக் கொண்ட விசேட ஆய்வுக்குழு ஒன்று அமைக்கப்படும். அது நிலைமையை ஆராய்ந்து தற்போதைய யுத்தநிறுத்த ஏற்பாடுகளை முழுமையாக நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்கும்.

★ குடியிருப்புப் பகுதிகள், பாடசாலைகள், மத வழிபாட்டுப் பிரதேசங்கள், பொதுக் கட்டடங்கள் போன்றவற்றில் இருந்து படையினர் வெளியேறவேண்டும், மீன்பிடித்தடை முற்றாக நீக்கப்படவேண்டும். உயர் பாதுகாப்பு வலயம் என்ற பெயரில் படையினர் வைத்திருக்கும் பிரதேசங்கள் பெருமளவில் குறைக்கப்படவேண்டும். - இவையே விரைந்து செய்யப்பட வேண்டிய முக்கிய பணியாகும்.

★ வடக்கு - கிழக்கில் குறிப்பிட்ட சில பிரதேசங்கள் அல்லது இடங்களில் மட்டும் படையினர் நிலைகொள்ள வேண்டும். சிவில் நிர்வாக அதிகாரிகளின் நேரடிப் பணிப்புரைகளை ஏற்றுச் செயற்படும் சமயங்களில் தவிர, ஏனைய சமயங்களில் சிவில் நிர்வாக விடயங்களில் அரச படையினர் தலையிடக்கூடாது.

## இடைக்கால நிர்வாகசபை

★ இடைக்கால நிர்வாக சபை சகல பிரதேசங்கள், பகுதிகள், இனப்பிரிவுகள், மத மற்றும் சமூகக் குழுக்கள் ஆகியவற்றைப் பிரதிநிதித்துவப்படுத்தும் விதத்தில் நன்கு மதிக்கப்படும் உறுப்பினர்களை - பெரும்பாலும் நூறுபேரை - உள்ளடக்கிய பிரதிநிதித்துவ சபையாக இருக்கும். பால் சமநிலையைப் பேணும் வகையில் அவர்களில் இருபத்தைந்து வீதத்தினர் பெண்களாக இருப்பர்.

★ பிரதிநிதித்துவ சபையில் வடக்கு மாகாணத்திலிருந்து ஐம்பது பேரும், கிழக்கு மாகாணத்திலிருந்து 50 பேரும் இடம்பெறுவர். ஒவ்வொரு மாகாணத்திலும் சகல பிரதேசங்களுக்கும், பகுதிகளுக்கும் குழுக்களுக்கும் உரிய பிரதிநிதித்துவம் உறுதிப்படுத்தப்படும் வகையில் 'கோட்டா' முறை இருக்கும்.

எல்லா உறுப்பினர்களும் நியமனம் மூலமே பதவியைப் பெறுவார்கள். எனினும், முன்னர் பதவிகளுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டோருக்கு, முன்னுரிமை வழங்கப்படும்.

நியமிக்கப்படுவர்.

★ இந்த நிறைவேற்றுக் குழுவும் வடக்கு - கிழக்கு என இரு பிரிவுகளில் செயற்படும்.

கிழக்கில் நான்கு இலங்கைத் தமிழர்கள், ஓர் இந்திய வம்சாவளித் தமிழர், மூன்று முஸ்லிம்கள், இரு சிங்களவர்கள் நிறைவேற்றுக் குழுவில் இருப்பர்.

வடக்கில் ஆறு இலங்கைத் தமிழர்கள், இரு இந்திய வம்சாவளித் தமிழர்கள், ஒரு முஸ்லிம், ஒரு சிங்களவர் நிறைவேற்றுக் குழுவில் இடம்பெறுவர்.

மொத்தத்தில் வடக்கு - கிழக்கு நிறைவேற்றுக் குழுவில் 10 இலங்கைத் தமிழர்கள், மூன்று இந்திய வம்சாவளித் தமிழர்கள், நான்கு முஸ்லிம்கள், மூன்று சிங்களவர்கள் இடம்பெறுவர். அவர்களில் குறைந்தது நால்வர் பெண்களாகவும் ஆகக் குறைந்தது இருவராவது கிறிஸ்தவர்களாகவும் இருப்பர்.

★ இடைக்கால நிர்வாகத்தின் பிரதிநிதித்துவ சபைக்கும் நிறைவேற்றுக் குழுவுக்கும் தனித்தனியாக இரு தவிசாளர்கள் இருப்பர். அதே போன்று அவை ஒவ்வொன்றுக்கும் தலா இரண்டு பிரதித் தவிசாளர்களும் தெரிவு செய்யப்படுவர். அவர்கள் சம்பந்தப்பட்ட சபைத் தவிசாளரின் இனத்திலிருந்தும் மதத்திலிருந்தும் வேறுபட்ட இனத்தையும் மதத்தையும் சார்ந்தவர்களாக இருப்பர்.

## அதிகாரங்கள்

★ 13ஆவது அரசமைப்புத் திருத்தத்தின் கீழ் வழங்கப்பட்ட அதிகாரங்கள், மங்கள முனசிங்க குழுவினால் சிபாரிசு செய்யப்பட்ட பகிர்வு அதிகாரங்கள் மற்றும் காணி தொடர்பான முழுஅதிகாரங்கள் ஆகியவை இடைக்கால நிர்வாகத்துக்கு வழங்கப்படவேண்டும்.

★ வெளிநாட்டு கூட்டு முயற்சிகள் ஊடாக முதலீடுகளையும் திட்டங்களையும் ஊக்குவிக்கத்தக்க வகையில் வெளி முகவர்களிடமிருந்து கடன்கள், மானியங்கள், அன்பளிப்புகள் பெறும் அதிகாரம் வழங்கப்படவேண்டும்.

★ சட்ட, ஒழுங்கு, அதிகாரங்கள் தரப்படவேண்டும். சொந்தப் பொலிஸ், நீதித்துறை ஆகியவை பேணப்படுவதை அனுமதிக்க வேண்டும்.

என்ற நிபந்தனையுடனேயே இதில் தமிழர் தரப்பு பங்குபற்றும்.

◆ தமிழர்கள் தனி இனம்.

◆ வடக்கும், கிழக்கும் தமிழர்கள் மற்றும் முஸ்லிம்களின் பாரம்பரிய பிரதேசங்கள்.

◆ வடக்கு - கிழக்குத் தமிழர்களுக்கு உள்ளக சுயநிர்ணய உரிமை உள்ளது.

◆ சிங்களத்துக்குச் சமனான அந்தஸ்து தமிழுக்கும் வழங்கப்படும்.

◆ எல்லா மதத்தையும் போற்றுவதற்கான சுதந்திரமும் சமநிலையும் உறுதிப்படுத்தப்படும் அதேநேரம், மத சார்பின்மையே அரசின் கொள்கையாக இருக்கும்.

◆ பிராந்தியங்களிடையே வளப் பங்கீடும் அபிவிருத்திச் சமநிலை பேணலும்.

◆ வேலைவாய்ப்பு, கல்வி வசதி ஆகியவை தொடர்பாக இனங்களுக்கிடையில் நிலவும் மோசமான வேறுபாட்டை நீக்குவதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுத்தல்.

இவற்றை அரசு அங்கீகரித்துச் செயற்படும்என்பதை உறுதிப்படுத்துவதே அந்நிபந்தனைகளாகும்.

இவை அங்கீகரிக்கப்பட்டு உத்தேச புதிய அரசமைப்பின் முன் வடிவத்தில் அவை சேர்த்துக்கொள்ளப்படுமானால் புதிய அரசமைப்பு உருவாக்குவதில் முழு மனப்பூர்வமாகத் தமிழ் தரப்பு பங்குபற்றும்.

இவ்வாறு மத்தியிலிருந்து அதிகாரங்களைப் பகிர்வதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் போது வடக்கு, கிழக்குக்குள் சிறுபான்மையினராக இருப்போரின் உரிமைகளை முழுஅளவில் உறுதி செய்வதற்கான நடவடிக்கைகளை புலிகள் இயக்கம் மேற்கொள்ளும்.

இதில் அதிகாரப்பகிர்வு தொடர்பில் விசேட உறுதிகள், கலாசார தன்னாட்சி, சமூகக்கொள்கை வகுத்தல் மற்றும் உள்ளூராட்சி போன்றவற்றில அதிக அதிகாரங்கள் என்பன உறுதி செய்யப்படுவதும் அடங்கும்.

★ தற்போதைய யதார்த்த புறநிலைக்கு அமைய மாகாண எல்லைகளை மறுசீரமைக்கும் ஆணைக்குழு நியமிக்கப்படுவதைப் புலிகள் எதிர்க்கமாட்டார்கள்.

★ அதேபோன்று எண்ணிக்கையில் அதிகமான பெரும்பான்மையினரின் மேலாதிக்கத்தைத் தவிர்த்து இலங்கை நாட்டின் பல்லினத் தன்

ணய உரிமையைப் பயன்படுத்தி பிரிந்து செல்லக் கோருவர். இந்தப் பிரிவினையைச் சட்டரீதியாகச் செய்வதற்காக வடக்கு - கிழக்கில் புலிகள் இயக்கம் ஒரு கருத்துக்கணிப்பை நடத்தும்.

★ புதிய அரசமைப்பு செயற்பாட்டுக்குவரும் வரை புலிகள் தங்களது ஆயுதங்களைக் கைவிடவோ அல்லது தங்களது ஆயுதப் பிரிவைக் கலைக்கவோ தயாரில்லை. அதேவேளை, இந்த இடைக்காலத்தில் தரையிலும், கடலிலும் தனது படைகளினதும், அரச படைகளினதும் செயற்பாடுகளுக்கு என விசேட விதிமுறைகள் வகுக்கப்படவேண்டும் எனப் புலிகள் எதிர்பார்க்கின்றார்கள்.

இரண்டு படைத்தரப்புகளினதும் செயற்பாடுகள் கட்டுப்படுத்தி நிர்வகிக்கப்பட வேண்டும். அரசு தனது படைகளில் கணிசமான பகுதியை வடக்கு - கிழக்குக்கு வெளியே அனுப்புவதோடு வடக்கு - கிழக்கில் உள்ள தனது படைநிலைகளைக் குறைக்கவும் வேண்டும்.

நிரந்தர தீர்வு எட்டப்பட்டதும் அரசுத் தரப்பு மேற்கொள்ளும் படைக் குறைப்புக்கு சமனாக புலிகளும் படைக் குறைப்புச் செய்வர்.

புதிய அரசமைப்புத் தீர்வின் பின்னர் தோற்றம்பெறும் புதியபடைப் பிரிவு, இனவிகிதாசார அடிப்படையிலானதாகவும் தற்போதுள்ள இரு தரப்புப் படைகளின் இணைந்த ஒத்துழைப்போடு உருவாக்கப்படுவதாகவும் அமையவேண்டும்.


★ இடைக்கால நிர்வாக ஏற்பாடோ அல்லது அரசமைப்பு பேச்சோ எதற்கு முன்னரும் தமிழ்மக்களின் ஏகப்பிரதிநிதிகள் விடுதலைப் புலிகள்தான் என்று அரசுத் தரப்பு உத்தியோகபூர்வமாக அறிவிக்கவேண்டும் என புலிகள் எதிர்பார்க்கின்றார்கள்.

- இவையே புலிகளின் உத்தேச திட்டவரைவில் அமைந்துள்ள அம்சங்கள். எதிர்வரும் 31ஆம் திகதி இந்தத் திட்டவரைவை நோர்வேத் தரப்பினர் ஊடாக அரசுக்குச் சமர்ப்பிப்பதற்கு முன்னர் இதில் ஏதேனும் கடைசிநேர மாற்றங்களைப் புலிகள் செய்யக்கூடும்.

- இவ்வாறு அந்த ஆங்கில வார இதழ் தகவல் வெளியிட்டுள்ளது.

(ஐ)

# டிசெம்பர் 10 ஆம் திகதிக்குப் பின்னர் அரசியல் குழப்பங்கள் தோன்றலாம்




தொடர்ந்தும் அமைதி நிலைக்குமா? இதுதான் இன்றுள்ள மக்களின் எதிர்பார்ப்பு சில வேளைகளில் அமைதிப் பேச்சுக்கள் நல்லவிதமாக நடந்தேறுவது போன்ற ஒரு தோற்றப்பாடு. அதேவேளை இடையிடையே நடைபெறும் சில சம்பவங்கள் சமாதானம் பற்றிய நம்பிக்கைகளை தகர்த்தெறிவது போல அமைந்துவிடுகின்றன. ஆனால், கிரகநிலைவரங்கள் இதுவரை கால நிலைமைகளைவிட ஒரு குழப்பமான கட்டத்திற்குச் செல்கின்றன.

வானில் அவை நடத்தப்போகின்ற யுத்தம் அதனுடைய பாதிப்பு நிச்சயமாக பூமியையும் தாக்கவல்லது. டிசெம்பர் 5 இல் சனியும் செவ்வாயும் கேந்திரங்களில் நின்றபடி சனி, செவ்வாயை தனது விசேட பார்வையான பத்தாம் பார்வையால் தாக்குவதுவும் செவ்வாயும் தனது விசேட பார்வையான 4 ஆம் பார்வையால் சனியைத் தாக்குவதுவும் இலங்கையைப் பாதிக்கப்போவது நிச்சயம். நவம்பர் 20ஆம் திகதிக்கு பின்னர் எதுவும் நடக்கலாமென்ற ஒரு நிச்சயமற்ற நிலை ஏற்படும்.

டிசெம்பர் 15 இல் சூரியன், சனி, செவ்வாய் மூன்று கிரகங்களும் ஒன்றுக்கொன்று கேந்திர யுத்தத்தில் ஈடுபடுவதினால் டிசெம்பர் 10ஆம் திகதிக்கு மேல் ஆட்சிமாற்றம், அரசியலில் குழப்பங்கள், அரசியல் தலைவர் மரணம் போன்ற சம்பவங்கள் ஏற்பட இடமுண்டு. இந்தக் கிரக நிலைவரம் அமெரிக்கா, இந்தியா போன்ற நாடுகளுக்கும் வேறு சில நாடுகளுக்கும் பாதிப்பை ஏற்படுத்தவல்லது. பொதுவாக நவம்பர் பிற்பகுதியில் இருந்து டிசெம்பர் மாதம் முடியும் வரை உலகத்திற்கு நன்மையளிப்பதாக இல்லை என்றே சொல்லலாம்.

அ.ஜெயாகரன்
தொண்டைமானாறு.

## பயிற்சிக் கருத்தரங்கு

இந்துகலாசார அலுவல்கள் திணைக்களம் நடத்தும் அறநெறிப் பாடசாலை ஆசிரியர்களுக்கான இரு நாள் பயிற்சிக் கருத்தரங்கு எதிர்வரும் முதலாம், இரண்டாம் திகதிகளில் மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

சண்டிலிப்பாய், உடுவில், சங்கானை, தெல்லிப்பழை ஆகிய நான்கு பிரதேச செயலர் பிரிவுகளிலுள்ள அறநெறிப் பாடசாலைகளின் ஆசிரியர்களுக்கு இப்பயிற்சிக் கருத்தரங்கு நடத்தப்படுவதாக இந்து சமய விவகார அமைச்சின் யாழ். மாவட்ட உதவிப்பணிப்பாளர் சிவமகாலிங்கம் அறிவித்துள்ளார்.

இது பற்றிய அறிவித்தல் கடிதங்கள் சம்பந்தப்பட்ட பிரதேச செயலர் அலுவலகங்களுக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாகவும் - கூறப்பட்டது.(எ-135)

# நயமாகப் பேசி ஏமாற்றி சைக்கிள்கள் அபகரிப்பு

தென்மராட்சி,ஒக்.27

பழைய சைக்கிளைப் பழுதுபார்க்கக் கொடுத்துவிட்டு புதிய சைக்கிளை இரவல் வாங்கிச் சென்றவர் அதனுடன் தலைமறைவானார். இச்சம்பவம் சாவகச்சேரியில் அண்மையில் இடம்பெற்றது.

சைக்கிள்கள் பழுதுபார்க்கும் கடையொன்றுக்கு வந்த நபர் ஒருவர் தான் எடுத்துவந்த பழைய துருப்பிடித்த சைக்கிளை பழுது பார்க்கக் கொடுத்தார். அந்த சைக்கிளுக்கு உதிரிப்பாகங்களை வாங்கவேண்டிய அவசியம் ஏற்பட்டது. இதனால் சைக்கிளைப் பழுதுபார்த்தவர் தனக்குத் தெரிந்த ஒருவரின் புத்தம்புதிய சைக்கிளை இரவலாகக் குறிப்பிட்ட நபரிடம் கொடுத்து உதிரிப்பாகங்களை வாங்கி வருமாறு அனுப்பினார்.

புதிய சைக்கிளைப் பெற்றுச் சென்றவர் மீண்டும் திரும்பி வரவேயில்லை என்று கூறப்படுகிறது.

இதேபோன்று முன்பின் தெரியாத நபருக்கு சைக்கிளை இரவல் கொடுதத ஒருவரும் அதனை இழக்க நேரிட்டது.

வரணியில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

தொலைத்தொடர்பு நிலைய உரிமையாளர் ஒருவரே சைக்கிளைப் பறிகொடுத்தவராவார்.

இவரது தொலைத்தொடர்பு நிலையத்துக்கு வந்த நபர் ஒருவர் தொலைபேசியில் பேசினார். பின்னர் மரணச் செய்தியொன்று கிடைத்துள்ளதாகவும் அதனைக் குடத்தனைப் பகுதிக்குச் சென்று அங்குள்ள குடும்பம் ஒன்றுக்கு அவசரமாகத் தெரிவிக்க வேண்டும் என்றும் சோகமாக அந்த நபர் தெரிவித்துள்ளார்.

இதனால், மனம் இரங்கிய தொலைத்தொடர்பு நிலைய உரிமையாளர் தனது சைக்கிளை அவரிடம் வழங்கினார். சைக்கிளைப் பெற்றுச் சென்ற அந்த நபர் மீண்டும் திரும்பவேயில்லை. (ஒ-10-117)

# சோதனை நடவடிக்கைகளால் சேதமாகும் 'திரிபோஷா' பக்கெற்

சண்டிலிப்பாய்,ஒக்.27

கொழும்பிலிருந்து யாழ்.சுகாதார திணைக்களத்திற்கு எடுத்துவரப்படும் 'திரிபோஷா' சத்துணவுமா பக்கெற்றுகள் இடைவழியில் இடம்பெறும் சோதனை நடவடிக்கைகளால் சேதமடைந்து வருவதாகத் தெரிவிக்கப்பட்டது.

அண்மையில் கொழும்பிலிருந்து லொறி மூலம் கொண்டுவரப்பட்ட 'திரிபோஷா' மா பக்கெற்றுகள் சோதனை நடவடிக்கைகளுக்கு உட்படுத்தப்பட்டதால் கணிசமான எண்ணிக்கையிலான 'திரிபோஷா' பக்கெற்றுகள் சேதமடைந்ததாகவும் -

இதனால் பாவனைக்கு உதவாத நிலையில் அவை இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

யாழ். மாவட்டத்தில் சுகாதாரத் திணைக்களத்தினால் நடத்தப்பட்டு வரும் தாய் - சேய் சிகிச்சை நிலையங்களில் போஷாக்குக் குறைவான பிள்ளைகள் மற்றும் போஷாக்குக் குறைந்த கர்ப்பிணிகள் ஆகியோருக்கு 'திரிபோஷா' மா பக்கெற் இலவசமாக வழங்கப்பட்டு வருவது தெரிந்ததே.

(ஒ-135)

# வலி.தென்மேற்கில் 4 இடங்களில் மிதிவெடி அகற்ற ஏற்பாடு

யாழ்ப்பாணம்,ஒக்.27

மானிப்பாய் பிரதேச சபையால் மிதிவெடி அபாயம் என அறிவிக்கப்பட்ட நான்கு இடங்களில் உள்ள மிதிவெடிகள் மற்றும் வெடி பொருள்கள் விரைவில் அகற்றப்படவுள்ளன.

இதற்கான நடவடிக்கையினை யாழ். மாவட்ட மிதிவெடி அகற்றும் பிரிவின் அதிகாரி எஸ்மோ ஆனந்தராஜா மேற்கொண்டுள்ளார்.

கடந்தவாரம் மானிப்பாய் பிரதேச சபை திட்டமிடல் பிரிவினரால் மிதிவெடிகள் இருக்கலாம் எனச் சுட்டிக்காட்டப்பட்ட மாதகல் பனாவெட்டி, காட்டுபுலம் பகுதிகள், மாதகல் வலி.தென்மேற்கு உப அலுவலகம் பகுதி, காக்கைதீவு பழைய இறங்குதுறை, காக்கைதீவு, எருக்கலம்பிட்டி ஆகிய வற்றிலேயே மிதிவெடிகள் அகற்றப்படவுள்ளன.

கடந்தவாரம் மானிப்பாய் பிரதேச சபையின் சுகாதாரப்பிரிவு மேற்பார்வையாளர் யோகநாதன் தலைமையில் யாழ். மாவட்ட மிதிவெடி அகற்றும் பிரிவைச் சேர்ந்த அலுவலர்கள் சம்பந்தப்பட்ட இடங்களை நேரில் பார்வையிட்டு அறிக்கையிட்டு மாவட்ட மிதிவெடி அலுவலரிடம் கையளித்துள்ளனர்

(எ-185)

# உணவுப்பொருள் அன்பளிப்பு

யாழ்ப்பாணம்,ஒக்.27

கைதடி சாந்தி நிலையத்தில் வாழும் வயோதிபர்களுக்கு நவாலி எச்.எஸ்.சி.எம்.எவ். நிறுவனத்தினால் ஒருதொகுதி உணவுப்பொருள்கள் அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளன.

மறைந்த கிராம அலுவலர் செல்வி ஹேமலதா செல்வராஜாவின் 8ஆம் ஆண்டு நினைவாக எச்.எஸ்.சி.எம்.எவ். நிறுவன பணிப்பாளரினால் நேற்று இந்தப் பொருள்கள் கையளிக்கப்பட்டன. (எ-185)

# மாவீரரின் பெற்றோரை கௌரவிக்க ஏற்பாடு

யாழ்ப்பாணம்,ஒக்.27

வலி.தென்மேற்கு, மானிப்பாய் பிரதேச சபையின் எல்லைக்குட்பட்ட மாவீரர்களின் பெற்றோர்கள் சனசமூக நிலைய ரீதியாக கௌரவிக்கப்படவுள்ளனர்.

இதற்கான ஏற்பாடுகளை சண்டிலிப்பாய் அரசியல்துறைப் பொறுப்பாளர் சுடா: பவனிதன் மேற்கொண்டுள்ளார்.

தேசிய எழுச்சிப் பேரவையும், சண்டிலிப்பாய் அரசியல்துறையும் இணைந்து மேற்படி மாவீரரின் பெற்றோர் கௌரவிப்பை ஏற்பாடு செய்துள்ளன. (எ-185)

# 'மிஸிஸ் குளோப்' போட்டியில் இலங்கைப் பெண்ணுக்கு விருது



அமெரிக்காவின் கலிபோர்னியா மாநிலம் பாம் ஸ்பிரிங் நகரில் சமீபத்தில் இடம்பெற்ற 'மிஸிஸ் குளோப்' அழகு ராணிப்போட்டியில் பங்கேற்ற இலங்கையைச் சேர்ந்த திருமதி பிரசாந்தி 'வெற்றிப்புன்னகை' விருதை தட்டிச் சென்றார். திருமணமான பெண்களுக்கு நடத்தப்பட்ட இந்தச் சர்வதேச அழகு ராணிப் போட்டியில் 40 நாடுகளைச் சேர்ந்த பெண்கள் பங்குபற்றினர்.

"மகளிருக்கான தேவைகள்" என்னும் அமைப்புக்கு நிதி திரட்டும் முகமாகவே இந்த அழகுப்போட்டி நடத்தப்பட்டது! கொழும்பில் நடைபெற்ற அழகுராணிப் போட்டியில் "மிஸிஸ் ஸ்ரீலங்கா - 2003" ஆக பிரசாந்தி தெரிவுசெய்யப்பட்டிருந்தாள்.

திருமதி பிரசாந்தி, வெள்ளவத்தை இந்து மகளிர் கல்லூரியின் ஆங்கில ஆசிரியராவார். இவர், பம்பலப்பிட்டி வஜிரராம பன்சலவின் டகம் பாசல், கொழும்பு சிறிமாவோ மகாவித்தியாலயம், பம்பலப்பிட்டி புனித குடும்பக் கன்னியாஸ்திரி பாடசாலை ஆகியவற்றின் பழைய மாணவியாவார். இவர் முன்னாள் பிரதி பொலீஸ்மா அதிபர் பேரின்பநாயகம் - திருமதி பேரின்பநாயகம் தம்பதிகளின் புதல்வியாவார்.

# பகுதிநேர ஆங்கில ஆசிரியர் சந்திப்பு

பகுதிநேர ஆங்கில ஆசிரியர்களுக்கான முக்கிய கலந்துரையாடல் இன்று திங்கட்கிழமை பிற்பகல் 2மணிக்கு யாழ்.ஆரியகுளம் சந்தியில் உள்ள புதிய உயர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

தமது நிரந்தர நியமனம் தொடர்பாக அண்மையில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவைச் சந்தித்து கலந்துரையாடிய விடயங்கள் இந்தக் கலந்துரையாடலில் ஆராயப்படும் என சங்கத்தின் தலைவர் அறிவித்துள்ளார். (எ-45)

# கல்விச்சாலைக் காட்சிகள்




ஆசிரிய சேவையில் 25 வருடங்கள் நிறைவுசெய்த யாழ். மத்திய கல்லூரியின் ஒழுக்காற்றுக்கான உதவி அதிபர் த.வரதராஜாவைப் பாராட்டி கல்லூரி மாணவ முதல்வர்கள் கேடயம் ஒன்றை வழங்கியிருந்தனர்.

அண்மையில் நடைபெற்ற ஆசிரியர் தினவிழாவின் போது விழாவின் பிரதம விருந்தினரும் யாழ்.கோட்ட கல்வி அதிகாரியுமாகிய எஸ்.எஸ்.தங்கராஜா கேடயத்தை வழங்கிக் கௌரவிப்பதைப் படத்தில் காணலாம். அருகில் கல்லூரி அதிபர் க.இராசதுரையும் காணப்படுகின்றார். (எ)




புத்தூர் சோமஸ்கந்தக் கல்லூரியின் பரிசளிப்பு விழாவும், நிறுவுநர் தின விழாவும் அண்மையில் நடைபெற்றன. இந்நிகழ்வில் முதன்மை விருந்தினராக கலந்துகொண்ட யாழ்.வலயக் கல்விப்பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் 'சோமாஸ்கந்தன்' இதழை கல்லூரி அதிபர் வ.ஆறுமுகத்திடம் கையளிப்பதைப் படத்தில் காணலாம். *(படம்: கோப்பாய் செய்தியாளர்)*



சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியில் ஜி.ரி.இசட் நிறுவனத்தின் உதவித் திட்டத்தின் கீழ் புதிதாக நிறுவப்பட்ட மாடிக் கட்டடத்தின் திறப்புவிழா அண்மையில் நடைபெற்றது. இந்த விழாவில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்ட மேலதிக மாகாண கல்விப் பணிப்பாளர் வீ.இராசையா நாடாவை வெட்டி கட்டடத்தை திறந்துவைப்பதைப் படத்தில் காணலாம். சிறப்பு விருந்தினர்களும் கல்லூரி அதிபர் ச.சிவனேஸ்வரனும் படத்தில் காணப்படுகின்றனர். *(படம்: சண்டிலிப்பாய் செய்தியாளர்)*



பண்ணாகம் மெய்கண்டான் மகாவித்தியாலய அதிபராக பன்னிரண்டு ஆண்டுகள் கடமையாற்றி அண்மையில் ஓய்வுபெற்ற கா.நடராசாவுக்கு, வித்தியாலய சமூகத்தினரால் சேவை நலன் பாராட்டு விழா நடத்தப்பட்டது. இந்த விழாவில் தமக்களித்த பாராட்டுக்கு நன்றி தெரிவித்து அவர் உரை நிகழ்த்துவதைப் படத்தில் காணலாம். *(படம் : சுழிபுரம் செய்தியாளர்)*

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில்

# வெள்ள அழிவுக்காக 87 பேருக்கு நஷ்டஈடு

சண்டிலிப்பாய்,ஒக்.27

இவ்வருட முற்பகுதியில் ஏற்பட்ட பலத்த மழை மற்றும் கடும் காற்றி னால் அழிவுகள் ஏற்பட்டு பாதிப் படைந்த சண்டிலிப்பாய் பிரதேச செய லர் பிரிவைச் சேர்ந்த 87 பேருக்கு நஷ்ட நிவாரணக் கொடுப்பனவு வழங் கப்படவுள்ளது.

நஷ்ட நிவாரணம் கோரி விண் ணப்பம் செய்தவர்களில் 87 பேருக் கான கொடுப்பனவுக்கு சிபார்சு செய் யப்பட்டு அதற்கான பெயர்ப் பட்டி யல் இந்தப் பிரதேச செயலகத்திற்கு வடக்கு - கிழக்கு மாகாண சமூக நலன்புரி திணைக்களத்தினால் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

இதற்கான நிதி விரைவில் கிடைக்குமென எதிர்பார்க்கப்படுவ தாகவும் -

நிதி வந்து சேர்ந்ததும் கொடுப் பனவு வழங்கப்படும் என்றும் - சண்டி லிப்பாய் பிரதேச செயலக வட் டாரங்கள் தெரிவித்தன.

(எ-135)

# அபிவிருத்திப் பணிகளில் ஈடுபட்ட மக்களுக்கு உலர் உணவு விநியோகம்

தெல்லிப்பழை,ஒக்.27

வலி. வடக்கு பிரதேச சபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உலக உணவுத்திட்டத்தின்கீழ் செயற்படுத் தப்பட்ட அபிவிருத்தி வேலைத்திட் டங்களில் பங்குகொண்ட மக்களுககு விநியோகிக்கப்பட வேண்டிய உலர் உணவுப் பொருள்கள் கிடைக்கப்பெற் றுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

குட்டியபுலம்,அளவெட்டி மேற்கு கறுவப்புலம் பகுதிகளில் உலக உணவுத் திட்டத்தின்கீழ் மேற்கொள் ளப்பட்டு வரும் அபிவிருத்திப் பணி களில் பங்குகொள்ளும் மக்களுக் கான முதல் கட்ட உலர் உணவுப் பொருள்கள் கிடைக்கப்பெற்றுள்ள தாகவும்-

தெல்லிப்பழை ப.நோ.கூ. சங்கத் தினூடாக விநியோகிக்கப்படவுள்ள இப் பொருள்களை செயற்றிட்டத் தில் பங்குகொண்ட மக்கள் தமக்குரிய கூட்டுறவுச் சங்கக் கிளையினூடா கப் பெற்றுக்கொள்ளும் படியும் -

வலி. வடக்கு பிரதேச சபையின் மேற்படி வேலைத்திட்டங்களுக்கான இணைப்பதிகாரி தெரிவித்தார்.(ஒ-150)


## சேவைநலன் பாராட்டு



திருமதி ம. விசுவலிங்கம்
(மணி ரீச்சர்)

(ஆசிரியர் யா/மட்டுவில் வடக்கு அ.த.க. பாடசாலை) சென்ற (25.10.2003) சனிக்கிழமை தனது 60 ஆம் அகவையை பூர்த்திசெய்து ஆசிரியர் சேவையில் இருந்து ஓய்வுபெறும் மணிரீச்சர் அவர்களின் சேவை யைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

யா/மட்டுவில் வடக்கு அ.த.க. பாடசாலை. (24098) (25-24-11-18)

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பா.அபிவிருத்தி சங்க உறுப்பினர்கள்.

## இந்திய பரம்பரை ஜோதிடர் மணிசாமி அவர்கள்



யாழ். புண்ணிய பூமிக்கு வருகை
ஸ்ரீசோட்டாணிக்கரை பகவதி அருள்பெற்ற
ஸ்ரீவெட்டுடைய காளியம்மாவின் அருந்தவப் புதல்வன்

மணிசாமி சாமி

கைரேகை, ஜாதகம், எண்கணிதம், நினைத்த காரியம் பார்க்கப்படும். திருமணத் தடங் கலா? காதலில் தோல்வியா? தீராத வியாதியா? உயர்கல்வித்தடையா? கடன் தொல்லையா? தொழிலில் முன்னேற்றமில்லையா? புதிய தொழில் தொடங்க வேண்டுமா? குழந்தைப் பாக்கியமில்லையா? வெளிநாடு செல்லத் தடையா?

ஒருமுறை விஜயஞ்செய்து பாருங்கள். உண்மை புரியும்.

மணிசாமி சாமி
54, மணிக்கூட்டு வீதி, வெலிங்டன் சந்தி,
பழைய லிங்கம் கூல்பார் அருகில், உல்லாசப்பயணிகள் விடுதி, யாழ்ப்பாணம்.

(24092) (26-24-11-18)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

அமரர் ஜெயகாந்தன் ஜெயந்தன்

(ஆசிரியர், கிளி/வேம்பொடுகேணி சி.சி.த.க. பாடசாலை)
5 ஆம் அணி வவுனியா, தேசிய கல்வியியற் கல்லூரி)

*இந்நாளில் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.*

கல்விக் கல்லூரி டிப்ளோமா ஆசிரியர் சங்கம்,
யாழ்ப்பாணம். (24094) (25-24-11-18) செயலாளர்.

## Adventist International Pre - School Admission - 2004

Applications are invited for admission to year 2004
Age limit 3+ to 5 limited application forms are available.
For further particulars please contact Closing Date 15.12.2003.

Director
**Adventist International Pre - School**
*850, Hospital Road, Jaffna.*
☎ 021-222-2843.

(24049)(27-26-11-18)

## அதிர்ஷ்டலாப சீட்டிழுப்பு முடிவுகள்

உடுப்பிட்டி பண்டகைப் பிள்ளையார் இந்து இளைஞர் மன்றத்தினரால் தீபாவளியன்று நடத்தப்பட்ட அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பின் முடிவுகள்

முதலாம் பரிசு - 2241
2 ஆம் பரிசு - 1216
3ஆம் பரிசு - 3907

ஆறுதல் பரிசுகள்

1. 3904 2. 1825 3. 610 4. 3516 5. 2701
6. 3245 7. 3723 8. 207 9. 3638 10. 668

மேற்படி அதிர்ஷ்டசாலிகள் தங்கள் பரிசுகளை மன்றச் செயலாளரிடம் பற்றுச்சீட்டுக்களுடன் வந்து பெற்றுக்கொள்ளவும்.

உடுப்பிட்டி பண்டகைப் பிள்ளையார் இந்து இளைஞர் மன்றத்தினர்.

(24096) (25-24-11-18)

## சனிக்கிழமை அதிர்ஷ்டம்







உத்தியோகபூர்வ முடிவுகள்

செல்லுபடியாகும் டிக்கட்
தொடர் இல. 3074915 இருந்து
3092812 வரை
சீட்டிழுப்பு இல. 1447
திகதி 25.10.2003

வெற்றி எண்கள்

02 14 18 25 45

போனஸ் எண்

53

ஜக்பொட் பரிசு

ரூபா.3,358,550/- வெல்லப்பட்டுள்ளது.

| பொருந்திய எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத்தொகை | தொகை |
|---|---|---|---|
| 5 | 01 | 3,358,550/- | 3,358,550/- |
| 4 எண்களுடன் போனஸ் எண் | 02 | 100,000/- | 200,000/- |
| 4 | 120 | 10,000/- | 1,200,000/- |
| 3 | 5,492 | 500/- | 2,746,000/- |
| 2 | 92,423 | 20/- | 1,848,460/- |
| சீட்டிழுப்பில் ஆகக்குறைந்த 02ம் எண் (போனஸ் எண் தவிர்த்து) | 113,718 | 10/- | 1,137,180/- |

வெல்லப்பட்ட மொத்த தொகை ரூபா.10,490,190/-

இந்த புதன்கிழமைக்கான ஜக்பொட்

ரூபா.1,500,000/-

தொடர் இல. 2116986க்கு மேற்பட்ட ஊதா நிற டிக்கட்டுகள் 2003 ஒக்டோபர் 29ம் திகதி புதன்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

சனிக்கிழமை அதிர்ஷ்ட சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுகளில் தங்கப்பரிசு வெற்றி பெறும் 5 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்

3087113-9-82
3080187-0-39
3089313-2-84
3079248-5-29
3090665-6-86

வளமான வாழ்விற்கு

அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33, சென்ற் மைக்கல் வீதி,
கொழும்பு 3.

யாழ்ப்பாணத்தில் : விநியோகஸ்தர்,
34, கந்தப்பசேகரம் வீதி,
(பஸ் நிலையம் முன்பாக),
யாழ்ப்பாணம்.

PHOENIX O&M

## அபிவிருத்தி அதிர்ஷ்டம்

| | |
|---|---|
| சீட்டிழுப்பு வாரம் | 520 |
| திகதி | 24.10.2003 |

டிக்கட்டின் நிறம் சிவப்பு
செல்லுபடியாகும் தொடர் இல.
5270977-5285441

வெற்றி இலக்கங்கள் 02 26 37 50

லக்கினம்

கும்பம்




ஜக்பொட் பரிசு
ரூபா. 3,365,350/-
வெல்லப்படவில்லை

இந்த செவ்வாய்க்கிழமைக்கான ஜக்பொட் ரூபா 4,072,150/-

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை(ரு.) | மொத்தப் பரிசுத் தொகை(ரு.) |
|---|---|---|---|
| 1 இல | 316,627 | 10 | 3,166,270 |
| 2 இலக்கங்கள் | 29,084 | 20 | 581,680 |
| 1 இல + லக்கினம் | 28,803 | 30 | 864,090 |
| 2 இல + லக்கினம் | 2,599 | 100 | 259,900 |
| 3 இலக்கங்கள் | 763 | 500 | 381,500 |
| 3 இல + லக்கினம் | 72 | 5,000 | 360,000 |
| 4 இல்க்கங்கள் | 04 | 100,000 | 400,000 |
| 4 இல + லக்கினம் | - | 3,365,350 | - |
| மொத்தம் | 377,952 | - | 6,013,440 |

மொத்தப் பரிசுத் தொகை ரூபா. 6,013,440/-

தொடர் இல. 4293547க்கு மேற்பட்ட நீல நிற டிக்கட்டுகள் 2003 ஒக்டோபர் 28ம் திகதி செவ்வாய்க்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

அபிவிருத்தி அதிர்ஷ்ட சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுகளில் முச்சக்கர வண்டி வெற்றி பெறும் 5 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்

5274374-6-85
5283426-4-78
5271840-7-32
5277157-2-78
5285171-8-59

வளமான வாழ்விற்கு

அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33, சென்ற் மைக்கல் வீதி,
கொள்ளுப்பிட்டி, கொழும்பு 3.

யாழ்ப்பாணத்தில் : விநியோகஸ்தர்,
34, கந்தப்பசேகரம் வீதி,
(பஸ் நிலையம் முன்பாக), யாழ்ப்பாணம்.

PHOENIX O&M

# படைகளின் தலைமை அலுவலராக ராணுவத் தளபதி இன்று பதவியேற்பு



கொழும்பு,ஒக்.27

பாதுகாப்பு படைகளின் தலைமை அலுவலராக இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் லயனல் பலகல்ல இன்று பதவியேற்கின்றார். சேவையில் உள்ள இராணுவத் தளபதி ஒருவர் பாதுகாப்பு படைகளின் தலைமை அலுவலராகவும் பொறுப்பேற்பது சுதந்திர இலங்கையின் வரலாற்றில் இதுவே முதற்றடையாகும்.

தேசிப் பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கைத் தலைமைச் செயலகம் நேற்று வெளியிட்ட செய்தி அறிக்கையில் இத்தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்தச் செய்தி அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

பாதுகாப்புப் படைகளின் தலைமை அலுவலர் என்ற முறையில் லெப். ஜெனரல் லயனல் பலகல்ல, இராணுவம், கடற்படை, விமானப்படை மற்றும் பொலீஸ் ஆகியவற்றின் கூட்டமைப்பான கூட்டு நடவடிக்கைத் தலைமையகத்தின் தலைவராக செயற்பட்டு, பாதுகாப்புப் படைகளின் சகல நடவடிக்கைச் செயற்பாடுகளையும் ஒன்றிணைப்பார். இந்த பதவி 2002 ஜூன் மாதம் முதல் வெற்றிடமாக இருந்து வந்தது. அவர் பதவியேற்பதைக் குறிக்கும் விதமாக முப்படையினரது அணி வகுப்பு மரியாதையும் அதைத் தொடர்ந்து மத வைபவங்களும் இடம்பெறும். இராணுவத் தினமான கடந்த 10ஆம் திகதி லெப். ஜெனரல் லயனல் பலகல்ல பாதுகாப்பு படைகளின் தலைமை அலுவலராக நியமிக்கப்பட்டாரென்பது குறிப்பிடத்தக்கது - என்றுள்ளது.

# புனர்வாழ்வுச் சங்கம் கடனுதவி

யாழ்ப்பாணம்,ஒக்.27

யாழ். திருநெல்வேலியில் இயங்கும் ஊனமுற்றோர் புனர்வாழ்வுச் சங்கம் கண்ணிவெடிகள் மற்றும் வெடிபொருள்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கு சுயமுயற்சிக் கடன் வழங்கத் திட்டமிட்டுள்ளது.

மிதிவெடி மற்றும் வெடிபொருள்களினால் பாதிக்கப்பட்டவர்களின் வாழ்கைத் தரத்தை மேம்படுத்தும் வகையிலேயே இக்கடன்திட்டம் மேற்கொள்ளப்பட உள்ளது. இத்திட்டத்தின் கீழ் வெடிபொருள்களால் பாதிப்படைந்தோருக்கு முகாமைத்துவமும், தொழில்சார் பயிற்சிகளும் வழங்கி அவர்கள் சுயதொழில் ஒன்றினை மேற்கொள்வதற்காக கடன் உதவியினையும் வழங்க மேற்படி சங்கம் தீர்மானித்துள்ளது.

இத்திட்டத்தின் கீழ் ஏற்கனவே இரு கட்டங்களாக சுயதொழில் முயற்சிக் கடனுதவி வழங்கப்பட்டுள்ளது. இதில் மூன்றாம் கட்டமாக சங்கானை, தெல்லிப்பழை, உடுவில், யாழ்ப்பாணம் மற்றும் தீவகம் ஆகிய பகுதிகளில் வெடிபொருள்களால் பாதிப்படைந்தோருக்கு கடன்வழங்கப்பட உள்ளது.

இப்பகுதிகளில் நிரந்தரமாக வசிக்கும் மேற்படி பாதிப்புக்குள்ளானவர்கள் இன்று அல்லது நாளை காலை 10 மணி முதல் பிற்பகல் 2 மணிக்குள் திருநெல்வேலி மருத்துவ பீடம் அருகில் அமைந்துள்ள ஊனமுற்றோர் புனர்வாழ்வுச் சங்கத்துடன் தொடர்புகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர். (ஒ-6)

## வல்லை வெளியில் பனம் விதைகள் நடுகை

அச்சுவேலி,ஒக்.27

வல்லைவெளியில் 10 ஆயிரம் பனம் விதைகள் தொண்டு நிறுவனங்களின் அனுசரணையுடன் பொதுமக்களால் நடுகை செய்யப்பட்டுள்ளன.

போரூட் நிறுவனம், ஒளி நிறுவனம் ஆகியவற்றின் அனுசரணையுடன் இந்தப் பனம் விதைகள் நடுகை செய்யப்பட்டன.

கரணவாய் தெற்கு, செல்வாபுரம் ஐக்கிய நாணய சங்கம், இமையாணன் அறிவாலயம் ஆகியவற்றின் உறுப்பினர்களே பனம் விதை நடுகையில் ஈடுபட்டனர். (எ-11)

## செங்குந்த இந்துவுக்கு காணி அன்பளிப்பு

யாழ்ப்பாணம்,ஒக்.26

யாழ். செங்குந்த இந்துக் கல்லூரிக்கு அதன் ஆஸ்திரேலியாவில் உள்ள பழைய மாணவர் சங்கத்தினால் நான்கு பரப்புக் காணி கொள்வனவு செய்யப்பட்டு அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளது.

கல்லூரியின் விளையாட்டு மைதானத்துக்கு அருகில் இருந்த தனியார் காணியையே மேற்படி பழைய மாணவர் சங்கம் கொள்வனவு செய்து அதனைப் பாடசாலைக்கு வழங்கியுள்ளது.

இதன்மூலம் விளையாட்டு மைதானத்தின் அளவு விஸ்தரிக்கப்படவுள்ளதாகவும் இதனால் மாணவர்களுக்கு மைதான இடவசதிப் பற்றாக்குறை இனிமேல் இருக்காது என்றும் ஆஸ்திரேலியாவில் உள்ள பழைய மாணவர் சங்கத்தின் செயலாளர் சி.ஜெயபதி தெரிவித்தார்.

## கணனி அன்பளிப்பு

சாவகச்சேரி இந்துக் கல்லூரியின் பழைய மாணவர் சங்க லண்டன் கிளையினர் கல்லூரிக்கு கணனி அன்பளிப்பாக வழங்கியுள்ளனர்.

கணனி கடந்த வாரம் கல்லூரி அதிபரிடம் ஒப்படைக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (எ-117)

## விபத்தில் காயம்!

யாழ்ப்பாணம்,ஒக்.27

கட்டுப்பாட்டை இழந்து வீதியை விட்டு விலகிய மோட்டார் சைக்கிள் இராணுவத்தின் காவலரணுக்குப் பாதுகாப்புக்காகப் போடப்பட்டிருந்த முட்கம்பிச் சுருளுக்குள் விழுந்ததில் மோட்டார் சைக்கிளைச் செலுத்திச் சென்றவர் காயமடைந்தார்.

செம்மணிக் காவலரண் பகுதியில் சமீபத்தில் இச்சம்பவம் இடம்பெற்றது. மோட்டார் சைக்கிளை செலுத்திச் சென்றவரான யாழ்ப்பாணம், காங்கேசன்துறை வீதியைச் சேர்ந்த கி.முருகதாஸ் (வயது 15) என்பவரே காயமடைந்தவராவார்.

காயமடைந்தவர் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். (ஒ-15)

## குண்டுக்குளம் புனரமைப்பு

வலி.தெற்கு,ஒக்.27

கந்தரோடையில் உள்ள குண்டுக்குள புனரமைப்பு வேலைகள் யாவும் பூர்த்தியடைந்துள்ளன.

உலக உணவு நிறுவனத்தின் புனரமைப்புத் திட்டத்தின் கீழ் கந்தரோடை விவசாயிகள் சம்மேளனத்தினரால் புனரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

சுமார் 500இற்கு மேற்பட்ட மனித வலுவைப் பயன்படுத்தி குளம் புனரமைப்பு செய்யப்பட்டது. (ஒ-152)

## அடம்பன் வீதி பலத்த சேதம்

வடமராட்சி,ஒக்.27

வடமராட்சி கிழக்கிலுள்ள பருத்தித்துறை மருதங்கேணி வீதியில் குடத்தனை தொடக்கம் அம்பன் வரையான சுமார் இரண்டு மைல் நீளமான வீதி மிக மோசமாக சேதமடைந்துள்ளது.

இவ்வீதி ஊடாக வாகனங்கள், சைக்கிள், மோட்டார் வண்டிகளைச் செலுத்தமுடியாது வாகனம் செலுத்துவோர்பெரிதும் சிரமங்களை அனுபவித்து வருகின்றனர்.

மழை காலங்களில் சகதியாக காட்சியளிக்கும் இவ்வீதியால் பயணம் செய்வோர் விபத்துக்களைச் சந்திக்க வேண்டி நேரும் எனக் கூறப்பட்டது. (எ-173)

## சங்கானை ஆஸ்பத்திரிக்கு டாக்டர்கள் நியமனம்

சண்டிலிப்பாய்,ஒக்.27

சங்கானை அரசினர் வைத்தியசாலைக்கு தென்னிலங்கையைச் சேர்ந்த டாக்டர் ஒருவர் சுகாதார திணைக்களத்தினால் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

டாக்டர் எம்.ஏச்.பண்டார என்பவரே இவ்வாறு நியமனம் செய்யப்பட்டவராவார். தினமும் பெரும் எண்ணிக்கையிலான நோயாளர்கள் இவ்வைத்தியசாலைக்கு சிகிச்சை பெறுவதற்கு வருவதால் டாக்டர்களுக்கு பற்றாக்குறை நிலவி வந்தது.

இதற்கிடையில் - மேற்படி ஆஸ்பத்திரிக்கு டாக்டர் ம.இராசையாவும் நியமனம் செய்யப்பட்டுள்ளார். (எ-135-185)

## புத்தாக்குநர் கண்காட்சி

யாழ்ப்பாணம்,ஒக்.27

யாழ்.மாவட்ட பாடசாலை மாணவர்களின் புத்தாக்குநர் கண்காட்சி இன்று திங்கட்கிழமையும் நாளை செவ்வாய்க்கிழமையும் யாழ்வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் தலைமையில் காலை 9 மணி முதல் மாலை 5 மணிவரையும் யாழ். மத்திய கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் முதன்மை விருந்தினராக இலங்கை புத்தாக்குநர் ஆணைக்குழுவின் செயலாளர் கே. சரத் பெரேரா கலந்துகொள்வார். (எ-10)

## ஆற்றல் மேம்பாட்டுப் பயிற்சி

சங்கானை,ஒக்.27

வலிகாமம் மேற்கு பிரதேச செயலகத்தினால் எதிர்வரும் 31ஆம் திகதி முதல் மூன்று தினங்களுக்கு கிராம மட்ட அமைப்புக்களின் தலைவர்களுக்கான ஆற்றல் மேம்பாட்டுப் பயிற்சி பிரதேச செயலக மண்டபத்தில் தினமும் முற்பகல் 9 மணி முதல் 4.30 மணிவரை நடைபெறும். (எ-29)

## ஆஸ்பத்திரிக்கு அன்பளிப்பு

தென்மராட்சி,ஒக்.27

யாழ்.கிறிஸ்தவ சங்கத்தினர் சாவகச்சேரி ஆஸ்பத்திரிக்கு 35ஆயிரம் ரூபா பெறுமதியான உபகரணங்களை அன்பளிப்பாக வழங்கியுள்ளனர்.

ஆயிரம் லீற்றர் கொள்ளளவு கொண்ட பிளாஸ்ரிக் தண்ணீர்த் தொட்டி, எலெக்ரிக் மோட்டர், இரத்தத்தில் சீனியின் அளவைக் கணிப்பிடும் தகடுகள் 750 ஆகியவற்றை சங்கப் பிரதிநிதிகள் சாவகச்சேரி ஆஸ்பத்திரி பொறுப்பதிகாரி டாக்டர் ச.அம்பிகைபாகனிடம் ஒப்படைத்தனர். (எ-117)

# ஜனநாயக ரீதியில் புலிகளுக்கு பேராதரவு தெரிவிப்போம்

## இதுவே காலத்தின் தேவை என்கிறார் மாவை எம்.பி.

கோப்பாய்,ஒக்.27

மக்கள் அனைவரும் ஒன்றுதிரண்டு ஜனநாயக ரீதியில் விடுதலைப் புலிகளுக்கு பேராதரவு தெரிவிப்போம். இதுவே காலத்தின் தேவையும் ஆகும்.

- இவ்வாறு தெரிவித்தார் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சோ.சேனாதிராஜா.

தீபாவளி தினத்தை முன்னிட்டு கோப்பாய் கண்ணகை அம்மன் சனசமூக நிலையமும் எவ்ரார் விளையாட்டுக்கழகமும் இணைந்து நடத்திய விளையாட்டு நிகழ்வு நிலையத் தலைவர் டி.தயாகரன் தலைமையில் எவ்ரார் விளையாட்டுக் கழக மைதானத்தில் அண்மையில் நடைபெற்றது. இதில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரை நிகழ்த்தும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

மாவை. எம்.பி. தமது உரையில் மேலும் கூறியதாவது:-

எந்த ஓர் இனமும் தனித்துவம் மிக்கதாக திகழ அதற்கென ஓர் ஆட்சி அதிகாரமுள்ள அலகு அவசியம் தேவை. அதன்மூலமே ஆற்றல்களை உரியவாறு பயன்படுத்தி எல்லாத் துறைகளிலும் முன்னேற்றம் காணமுடியும்.

இற்றைக்கு 50 ஆண்டுகளாக பேரினவாத அரசுகள் மாற்றான்தாய் மனப்பான்மை கொண்டு எமது இனத்தைப் பார்த்ததால் எவ்வளவோ சந்தர்ப்பங்கள் இழக்கப்பட்டுள்ளன. அண்மையில் கூட எமது பிரதேச வலைப்பந்தாட்ட அணியொன்று லண்டன் சென்று பெருவெற்றி கண்டு திரும்பியமை குறிப்பிடத்தக்கது. இது ஒரு சிறந்த எடுத்துக்காட்டுமாகும்.

எனவே, பூரண வளம் பொருந்திய நிலையிருப்பின் எல்லாத் துறைகளிலும் இதுபோன்று கால் பதிக்க முடியும். சிங்களப்பிரதேசத்தில் இனவன்முறையைத் தூண்டும் விதத்தில் தீபாவளி தினமன்று கூடப் பார்க்காமல் தமிழ் விரோத எதிர்ப்பு ஆர்ப்பாட்டமொன்று ஏற்பாடு செய்யப்பட்டமை மிகவும் கவலை தரக்கூடியதாகும்.

எனவே, இத்தகைய சக்திகளிடம் எமது இனத்துக்குரிய தீர்வை பெற்றுக்கொள்ளமுடியாது. இன்று வெளிநாடுகளில் பரவி வாழும் எமது இன மக்கள் கல்வித்துறை, விளையாட்டுத்துறை போன்றவற்றில் சிறந்து விளங்குகிறார்கள். பிரிட்டிஷ் பல்கலைக்கழகங்களில் இன்று ஆயிரத்துக்கும் அதிகமான தமிழ் மாணவர்கள் மருத்துவம் பயில் கிறார்கள். இதேபோன்று அங்கு நடைபெறும் விளையாட்டு நிகழ்வுகளிலும் முதன்மை நிலையை அவர்கள் பெறுகின்றனர்.

தற்போது நடைபெற்றுவரும் சமாதானப்பேச்சுக்கள் வெற்றிபெற விடுதலைப் புலிகளுக்கு ஜனநாயக ரீதியில் நாம் ஒன்று திரண்டு ஆதரவு கொடுப்போம் என்றார். (எ-72)



மக்கள் நலன்புரிச் சங்கமும் படையணிகளும் அமைப்பினால் கொக்குவிலில் நிறுவப்பட்ட இலவச கணனிப் பயிற்சி நிலையம் நேற்றுமுன்தினம் திறந்துவைக்கப்பட்டது. யாழ்.-நல்லூர் கோட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் ஈஸ்வரன் நாடா வெட்டி பயிற்சி நிலையத்தை திறந்துவைப்பதையும் பயிற்சியில் இணைந்துகொள்ள அன்றைய தினம் வருகைதந்த மாணவிகளின் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம்.

*(படங்கள் : அலுவலகப் படப்பிடிப்பாளர்)*

# யு.என்.எச்.சி.ஆர். உதவியுடன் நல்லூரில் வீடுகள் அமையும்

வலி.வடக்கு,ஒக்.27

நல்லூர் பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள அரியாலைப் பகுதியில் 50 ஆயிரம் ரூபா பெறுமதியான 110 அரை நிரந்தர வீடுகளும் 15 ஆயிரம் ரூபா பெறுமதியான 118 தற்காலிக இருப்பிட வசதிகளையும் நிர்மாணிக்க அகதிகளுக்கான ஐ.நா.தூதரகம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இத்தகவலை மேற்படி நிறுவனத்தின் யாழ்.மாவட்ட அலுவலர் க.கதிரமலை தெரிவித்தார்.

நல்லூர் பிரதேச செயலாளர் வி. முருகையா தலைமையில் தற்காலிக இருப்பிடவசதி, நிரந்தர வீடுகள் கட்டுவதற்குத் தெரிவுசெய்யப்பட்டவர்களுக் கான கலந்துரையாடல் அண்மையில் அரியாலை ஸ்ரீபார்வதி வித்தியாசாலையில் நடைபெற்றது.

இந்தக் கலந்துரையாடலின் போது வீடமைப்புத் திட்டம் குறித்து விரிவாக ஆராயப்பட்டது. (எ-86)

# புலமைப்பரிசில் கருத்தரங்கு

சங்கானை கல்விக் கோட்டத்திற்கு உட்பட்ட பாடசாலைகளில் 5ஆம் ஆண்டில் கல்வி பயிலும் மாணவர்களுக்கான கருத்தரங்கொன்று இன்று திங்கட்கிழமை முற்பகல் 9 மணிக்கு வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

சங்கானை மக்கள் வங்கிக் கிளையின் அனுசரணையுடன் நடத்தப்படவிருக்கும் இக்கருத்தரங்கில் ஆசிரியர்கள், வே.அன்பழகன், வி.கைலநாதன் ஆகியோர் கருத்துரைகள் வழங்கவுள்ளனர்.

பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்கள் அனைவரையும் இதில் தவறாது பங்குபற்றிப் பயன் பெறுமாறு கோட்டக் கல்விப் பணிப்பாளர் சி. செல்லையா கேட்டுள்ளார்.

கருத்தரங்கின் ஆரம்ப நாள் நிகழ்வில் மக்கள் வங்கியின் யாழ். உதவிப் பிராந்திய முகாமையாளர் க.ஆனந்தராஜா முதன்மை விருந்தினராகவும் மக்கள் வங்கியின் சங்கானைக் கிளை முகாமையாளர் பொ. அச்சுதம்பிள்ளை சிறப்பு விருந்தினராகவும் கலந்துகொள்வார். கோட்டக் கல்விப் பணிப்பாளர் சி.செல்லையா தலைமையில் கருத்தரங்கு இடம்பெறும். (எ-29)

## வெள்ளநீர் தேங்கும் மூளாய் ஒழுங்கைகள்

சுழிபுரம்,ஒக்.27

தொல்புரம், மூளாய், சுழிபுரம் பகுதி ஒழுங்கைகள் பலவும் போக்குவரத்துச் செய்ய முடியாதநிலையில் சேறும் சகதியுமாய் உள்ளன என முறைப்பாடு தெரிவிக்கப்பட்டுள்ளது.

மூளாய் சைவப் பிரகாச வித்தியாசாலைக்கு கிழக்குப் பக்கமாகவுள்ள ஒழுங்கையும், மூளாய் பிள்ளையார் கோவிலுக்கு முன்பாகவுள்ள வீதியும் இவ்வாறு குண்டும் குழியுமாக காட்சியளிக்கின்றன.

சுழிபுரம் கப்பனை அம்மன் கோவில் முன்பாகவுள்ள ஒழுங்கையும் இவ்வாறு மிகவும் மோசமான நிலையில் உள்ளது. (எ-28)

## சீட்டிழுப்பு ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம்,ஒக்.27

செவிப்புலன் வலுவற்றோர் புனர்வாழ்வு நிறுவனம், சிறுகைத் தொழில் வளர்ச்சிக்காக நேற்று ஏற்பாடு செய்திருந்த அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு தவிர்க்கமுடியாத காரணங்களால் நடைபெறவில்லை என்றும் -

அடுத்த மாதம் 26ஆம் திகதி குறிப்பிட்ட நேரத்தில் சீட்டிழுப்பு இடம்பெறும் என்றும் -

நிறுவனத்தின் செயலாளர் அறிவித்துள்ளார். (எ)